வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959


Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு வாரமலர்

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 17.09.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 281 | பக்கங்கள் : 20



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


07 இலங்கை தமிழர் பிரச்னையில் முதன்முதலாக சிவில் சமூகம்!


08 எமது முன்னாள் ஜனாதிபதிகளின் அரசியல்


09 ராஜபக்ஷக்களுக்கு பாவமன்னிப்பு வழங்க மல்கம் றஞ்சித் விரும்புவது ஏன்?


10 சனல் -4 ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்குதலை மடை மாற்றுகின்றதா?

# ஐ.நா. மனித உரிமை அறிக்கையில் இனிமேல் மலையகமும் இடம்பெறும்!

## மனோவிடம் உறுதியளித்தார் ஐ.நா. பிரதிநிதி

கொழும்பு, செப். 17

**ஐ.நா. மனிதவுரிமை பேரவையின் இவ் வருட அறிக்கையில் மலையகம் பற்றி குறிப்பிடாமையை ஒரு குறைபாடாக ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி மார்க்-அண்ட்ரே ஏற்றுக் கொண்டார். இது எதிர்காலத்தில் நிவர்த்தி செய்யப்படும் எனவும், இலங்கை ஐ.நா நிகழ்ச்சி வலயத்தில் மலையக தமிழர்களின் பிரச்னைகள், தேசிய நல்லிணக்கம் ஆகிய வற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என வும் ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி உறுதி யளித்தார்.**



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பாராளு மன்ற உறுப்பினர் வேலு குமார், கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணீதரன் மற்றும் ஐ.நா தரப்பில் இலங்கை ஐ.நா பிரதிநிதி மார்க்-அண்ட்ரே, சமாதான சாளர ஒருங்கிணைப்பாளர் தாரக ஹெட்டியாராச்சி ஆகியோர் கலந்து கொண்ட சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன் எம்.பி மேலும் கூறியுள்ளதாவது:-

“இலங்கையில், தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அலுவலகம், காணாமல் போனோர் அலுவலகம், உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியவை இன்னமும் இழுபறியில் இருக்கின்றன. இரு தரப்பிலும் குற்றங்கள் நிகழ்ந்தன என்பதை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் பிடிவாதமாக மறுக்கின்றமையே இதற்கு பிரதான

15

# மீண்டும் அரசியலுக்குள் ஒருபோதும் வரமாட்டேன்!

## சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் கோட்டா



கொழும்பு, செப். 17

தான் மீண்டும் அரசியலுக்கு வரவுள்ளதாக வெளியாகும் தகவல்களை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்குள் வரவுள்ளார் எனவும், அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன எனவும் வெளியாகியுள்ள தகவல்கள் தெற்கு அரசியலில்

15

# சேமலாப நிதியத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது

## அச்சப்படவேண்டாமென அரசு கோரிக்கை

கொழும்பு, செப். 17

ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் தற்போது கிடைக்கும் 9 வீத நலன் அதன் உறுப்பினர்களுக்கு தொடர்ந்தும் வழங்கப்படும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களுக்குச் சொந்தமான பணத்திற்கு வரி விதிக்கப்படுவதில்லை என்றும், நிதியத்திற்குச் சொந்தமான பணத்தை முதலீடு செய்த பின்னர் கிடைக்கும்

15

# பூநகரி விபத்தில் ஒருவர் பலி!

கிளிநொச்சி, செப். 17

பூநகரி பகுதியில் நேற்று இடம் பெற்ற விபத்தின் போது ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றும் ஒருவர் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்று பிற்பகலில் இடம்பெற்றது. விபத்தை ஏற்படுத்திய வாகனம் அங்கிருந்து தப்பிச்சென் றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த

15

# எரிபொருள் விலை மேலும் உயரலாம்!

கொழும்பு, செப். 17

இம்மாத இறுதியில் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு மற்றும் இந்தியாவுக்கு செலுத்தப்பட வேண்டிய கடன் தொகைக்கான அறவீடு உள்ளிட்ட காரணங்களால் இம்மாத ஆரம்பத்தில் இலங்கையில் எரிபொருள் விலை கணிசமாக அதிகரிக்கப்பட்டிருந்தது.

15

# கிராம உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகள் அதிகரிப்பு

கொழும்பு, செப். 17

கிராம உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில் ஆராய விசேட குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செயலமர்வொன்றில் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த இதனைத் தெரிவித்தார்.

மாவட்ட செயலாளர்களுக்காக நடைபெறும் குறித்த இரண்டு நாள் செயலமர்வில் கிராம உத்தியோகத்தர்கள் இடையே நிலவும் பிரச்னைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன. (அ)

# என் உயிருக்கு அச்சுறுத்தல்!

## தயாசிறி ஜயசேகர கூறுகிறார்



கொழும்பு, செப். 17

சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தாம் நீக்கப்பட்டமையை அடுத்து தமக்கு உயிர் அச்சுறுத் தல் விடுக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை அவரிடம் உள்ள குறைபாடேயாகும் என பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (அ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ ஆட்குறைப்பு இல்லை!

## இலங்கை இராணுவம் திட்டவட்டம்

கொழும்பு, செப். 17

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைப்பதற்கு தீர்மானிக்கவில்லை என இலங்கை இராணுவம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்குமான கட்டளைத் தளபதிகளின் எண்ணிக்கையை இரண்டாக குறைக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல் குறித்து கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் இதனை தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் இராணுவ ஆட்குறைப்பு செய்யப்படவில்லை எனவும், கட்டளைத்

15

# நாட்டு பொருளாதாரம் எதிர்காலத்தில் தனியார் துறையினால் இயக்கப்படும்

## கூறுகிறார் அமைச்சர் ஷெஹான்

கொழும்பு, செப். 17

நாட்டின் பொருளாதாரம் எதிர்காலத்தில் தனியார் துறையினராலேயே இயக்கப்படும். அரசாங்கம் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையாக மாத்திரமே செயற்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதில்

15

## இப்படியும் நடக்கிறது

சில வாரங்களுக்கு முன்னர் டென்மார்க்கிலிருந்து வெளியான ஒரு காணொலி பலரின் கவனத்தையும் பெற்றிருந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரின் மனைவியும் மகளும் உயிருடன் இருப்பதாக அந்த காணொலியில் தகவல் சொன்னவர் பிரபாகரனின் மனைவியின் சகோதரி என்று தன்னை அறிமுகம் செய்துகொண்டதால் அந்த காணொலி பலரின் புருவத்தையும் உயர்த்த வைத்தது.

பிரபாகரனோ அல்லது அவரது குடும்பமோ உயிருடன் இருந்த இரண்டாயிரத்தி ஒன்பதாம் ஆண்டுவரை தங்களின் பெயர்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தாதவர்கள் இப்போது அதனை பயன்படுத்தியபோது கவனத்திற்குரியதாகியது.

அப்படியொரு காணொலி எதற்காக வெளியிடப்பட்டது என்பது இன்றுவரை யாருக்கும் தெரிந்ததாக தெரியவில்லை. பல்வேறு ஊகங்கள் செய்திகளாக வந்தபோதிலும் அவை வெறும் ஊகங்கள் மட்டுமே.

இப்போது மற்றுமொரு காணொலி மீண்டும் வெளிவந்து சர்ச்சையைக் கிளப்பியிருக்கின்றது.

இளம்பெண் ஒருவர் இலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் நடமாடித் திரிவதுபோன்ற காணொலி ஒன்று ஒரு பாடலுடன் வெளியிடப்பட்டிருக்கின்றது. அந்த காணொலியில் வருபவர் தன்னை பிரபாகரனின் புதல்வி துவாரகா என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறிக்கொள்ளாவிட்டாலும், பார்ப்பவர்களை அப்படி நம்ப வைப்பது போல அது தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் அந்த காணொலியில் இருப்பவர் பற்றி தமிழக பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ள செய்தி இந்த ஊர்க்குருவியின் கவனத்திற்கு கிடைத்தது.

தமிழக மாலை முரசு வெளியிட்டுள்ள அந்தச் செய்தியில்:

'இலங்கையில் உள்நாட்டு போர் உச்சக்கட்டத்தில் இருந்த போது பலர் அகதிகளாக தமிழ்நாட்டில் தஞ்சம் அடைந்தனர். அவர்கள் சென்னை, திருச்சி, ராமேஸ்வரம் உள்ளிட்ட இடங்களில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். கடந்த 2016ஆம் ஆண்டு திருச்சி சிறப்பு முகாமில் தங்கி இருந்த தயாபரராஜ், அவரது மனைவி உதயகலா ஆகியோர் ராமேஸ்வரம் மண்டபம் சிறப்பு முகாமில் தங்களது உறவினர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்று கூறி காலவரையறையற்ற உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையிலும் வழக்கு தொடரப்பட்டது. இதைத் தொடர்ந்து இரண்டு பேரும் மண்டபம் சிறப்பு முகாமுக்கு மாற்றப்பட்டனர். வருவாய்த்துறை அதிகாரிகள் கண்காணிப்பில் அவர்கள் இருந்து வந்தனர். இதில் தயாபரராஜ் சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்டவர் ஆவார். தற்போது வெளியாகி உள்ள 'வீடியோ' காட்சி மூலம்தான் உதயகலா மண்டபம் அகதிகள் முகாமில் இருந்து தப்பிச் சென்றிருக்கும் தகவல் தமிழக பொலிஸாருக்கு தெரிய வந்துள்ளது. உதயகலா, அவரது கணவர் மற்றும் 3 குழந்தைகள் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு மண்டபம் அகதிகள் முகாமில் இருந்து தப்பி சட்டவிரோதமாக படகு மூலம் இலங்கை நாட்டுக்குச் சென்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.'

இதுதான் அந்தச் செய்தி. அதாவது மண்டபம் அகதிமுகாமிலிருந்து தப்பிவந்து இலங்கையில் இருக்கும் உதயகலா என்ற பெண்மணியே தன்னை பிரபாகரனின் மகள் என்று நம்பவைக்க முயன்று காணொலியை வெளியிட்டிருப்பது தெரிய வந்திருக்கின்றது. துவாரகா வேசம் போடுவதற்கும் ஒருவருக்கு தகுதி வேண்டாமா என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

இந்த காணொலியையும் அவர் பற்றிய செய்தியையும் அனுப்பியிருந்த முன்னாள் மூத்த போராளி ஒருவர் கூடவே எழுதியிருந்த குறிப்புத்தான் கவனத்திற்குரியது.

'அந்த மனுசன் ஒருதடவை எண்டாலும் வந்து போகக்கூடாதா?'

**- ஊர்க்குருவி.**

# உலகளாவிய வளர்ச்சி சவால்களை எதிர்கொள்வதில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் முக்கிய பங்காற்றும்

### ஹவானா மாநாட்டில் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, செப். 17

உலகெங்கிலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர் கொள்வதில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களினால் கூடுதல் பங்களிக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

கியூபாவின் ஹவானா நகரில் இடம்பெறும் ஜி-77 மற்றும் சீன அரச தலைவர் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்தார்.

தொற்றுநோய்கள், கால நிலை மாற்றங்கள், உணவு, உரம் மற்றும் வலுசக்தி நெருக்கடிகள் போன்றவை, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு தடைகளை ஏற்படுத்துகின்றன எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அதேபோன்று, அந்த நிலைமையை, உலகளாவிய கடன் நெருக்கடி மேலும், அதிகரிக்கச் செய்வதுடன், அதன் காரணமாக முன்னெப்போதும் இல்லாத சவால்களை எதிர்கொள்ளும் நிலை, உலகளாவிய ரீதியில் தெற்கில் உள்ள நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

அத்துடன், அதிக செலவு காரணமாக சில தொழில்நுட்ப முறைகளுக்கு பிரவேசிப்பதற்குள்ள வரையறைகள், போதுமான டிஜிற்றல் திறன்கள், உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை, கலாசார மற்றும் நிறுவன ரீதியில் நிலவும் தடைகள், நிதி தொடர்பான தடைகள் போன்ற சவாலான சூழ்நிலைகள் இத்தகைய ஏற்றத் தாழ்வுகளுக்கு வழிவகுத்துள்ளது. 21ஆம் நூற்றாண்டில் இந்தப் புதிய தொழில் நுட்ப ஏற்றத்தாழ்வு மிகவும் அதிகரித்துள்ளது.

அந்த இடைவெளியைக் நிரப்புவதற்காக, டிஜிற்றல் மய மாக்கல், செயற்கை நுண் ணறிவு, உயிரியல் தொழில் நுட்பவியல் மற்றும் மரபணு வரிசைமுறை போன்ற புதிய தொழில்நுட்பங்களை நோக்கி விரைவாக செல்ல வேண்டியது அவசியமாகும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (அ)

# புற்றுநோய் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

கொழும்பு, செப். 17

புற்றுநோய் மருந்துகள் நிறைவடைந்துள்ள நிலையில் அதற்கான விலைமனுக் கோரலை சுகாதார அமைச்சு திடீரென நிராகரித்து விட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ருக்சான் பெல்லன - ஐம்பதிற்கும் அதிகமான புற்றுநோய்க்கான மருந்துகள் நிறைவடைந்துள்ளன.

சீக்கிரமாக புற்றுநேய்க்கான மருந்துகளை கொள்வனவு செய்யுமாறு சுகாதார அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கு அமைவாக நடவடிக்கை எடுத்த போதிலும் நேற்று முன்வைக்கப் படவிருந்த விலைமனுக் கோரலை முன்வைக்காமல் அதனை மூடி நிராகரித்து விட்டார்கள்.

சரியான விடயங்களை செய்வதற்கு அமைச்சருக்கு அதிகாரம் இருக்கின்றது. ஆனால் அமைச்சர் அதிகா ரிகள் கூறும் விதத்திலும் மருந்து நிறுவனங்கள் கூறும் விதத்திலும் செயற்படுகின்றார்.

இவர்கள் செய்த இந்த வேலையினால் அரச மருத்துவ அதிகாரிகள் திருட்டுதனமான செயலாளர்கள் மற்றும் அதிகாரிகளின் கட்டளைபடி செயற்பட நேரிடுகின்றது - என்றார். (அ)

# மனைவியும் மகனும் நாடு திரும்பவில்லை; ஜப்பானிய தந்தை பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, செப். 17

இலங்கைக்கு சென்ற தனது மனைவியும் மகனும் மீண்டும் ஜப்பானுக்கு திரும்பவில்லை என ஜப்பானிய தந்தை ஒருவர் இலங்கை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையை சேர்ந்த தனது மனைவியும் மகனும் ஜப்பானில் வசித்து வருவதாகவும் அவர்கள் கடந்த ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இலங்கைக்கு சென்ற நிலையில் தற்போது வரை நாடு திரும்பவில்லை எனவும் தந்தை முறைப்பாடளித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட ஜப்பானியரால் மின்னஞ்சல் மூலம் முறைப்பாடு அனுப்பப்பட்டுள்ளதுடன் இந்த முறைப்பாடு சுற்றுலா பொலிஸாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் ஒகஸ்ட் 22 ஆம் திகதி ஜப் பானுக்கு திரும்ப வேண்டியவர்கள் எனவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் தற்போது சுற்றுலாப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# கழுத்தறுப்பை தடுக்கவே தயாசிறி நீக்கம்!

கொழும்பு, செப். 17

அருகில் இருந்துக் கொண்டு கழுத்தை அறுக்கும் செயற்பாட்டைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே தயாசிறி ஜயசேகர சுதந்திர கட்சியில் இருந்து நீக்கப்பட்டார் என விவசாயத் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலில் குழந்தை அல்லர். அவர் சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவர்.

கட்சியின் செயலாளர் என்ற ரீதியிலும் தலைவர் என்ற ரீதியிலும் பொறுப்புடன் செயற்பட்டவர்.

அவர் மற்றவர்களின் கதைகளை கேட்டுச் செயற்படுபவர் அல்லர்.

இந்த பிரச்சினைகள் கடந்த 7 மாதங்களுக்கு முன் எழுந்தவை. தங்கள் வாயை காப்பாற்றிக் கொண்டால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது.

கட்சித் தலைவருடன் பயணிக்க முடியவில்லை என்றால், தலைவர் என்று ஏற்றுக்கொண்டு பயணிக்க வில்லை என்றால் யாராக இருந்தாலும் இந்த நிலை தான் ஏற்படும்.

அருகில் இருந்து கழுத்தை அறுக்கும் முன் சில தீர்மானங்களை எடுக்க வேண்டியது தலைவர்களின் பொறுப்பு.

அருகில் இருந்துகொண்டு கழுத்தை அறுப்பது போன்ற செயற்பாட்டை தவிர்ப்பதற்காகவே தயா சிறி கட்சியிலிருந்து நீக்கப் பட்டதாக எமக்கு அறிய கிடைத்தது.

குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த பின்னர் உண்மை விடயங்களை அறிந்துகொள்ள முடியும். அவர் மீது தற்போதும் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன - என்றார். (அ)

# நாணய நிதியத்தின் 2ஆம் தவணை இம்மாதம் இலங்கைக்கு கிடைக்காது

## வெரிட்டி ரிசேர்ச் நிறுவனம்

கொழும்பு, செப். 17

**சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்படும் நிதி நிவாரண தொகுதியின் இரண்டாம் தவணை இந்த மாதம் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்ட போதும், குறித்த நிதி இந்த மாதத்தில் கிடைக்கப்பெறாது என வெரிட்டி ரிசேர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது.**

வெரிட்டி ரிசேர்ச் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி நிஷான் டி மெல் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அத்துடன், குறித்த நிதி இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படுமாயின் இரண்டு மாதங்களுக்கு முன்னதாக மதிப்பாய்வினை மேற்கொண்டிருக்க வேண்டுமென அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் செயற்பாடுகள் சற்று மந்த கதியில் காணப்படுவதால் காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீட்டு பணிகள் தாமதமடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, சர்வதேச நாணய நிதியம் வழங்கிய பல்வேறு நிபந்தனைகளை இலங்கை பூர்த்தி செய்துள்ளதாக வெரிட்டி ரிசேர்ச் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி நிஷான் டி மெல் தெரிவித்தார். (அ)

# பாராளுமன்றத்துக்கு புதிதாக பிரதிச் செயலாளர் நியமனம்

கொழும்பு, செப். 17

பாராளுமன்றத்திற்கு புதிய பிரதி செயலாளர் நாயகமாக சட்டத்தரணி சமிந்த குலரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர அனுபவமிக்க நிர்வாக அதிகாரியான சட்டத்தரணி சமிந்த குலரத்னவை புதிய பிரதிச் செயலாளர் நாயகமாக நியமித்துள்ளார்.

சமிந்த குலரத்ன, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மேலதிக செயலாளராகவும், பிரதமரின் செயலாளர் மற்றும் அரசாங்கத்தின் பிரதம கொறடாவின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

மேலும், லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தின் ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ருவன்வெல்ல ராஜசிங்க மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர், கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் இங்கிலாந்தின் பக்கிங்ஹாம்ஷயர் பல்கலைக்கழகங்களில் வணிக மேலாண்மை மற்றும் நிர்வாகத் துறையில் பட்டம் பெற்றுள்ளார். (அ)

# ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துகின்றது சுதந்திர மக்கள் முன்னணி

கொழும்பு, செப். 17

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்த சுதந்திர மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

முழு நாடும் ஏற்றுக்கொள்ளும் புகழ்பெற்ற ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்த வேண்டும் என முன்னணி முடிவு செய்துள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

அண்மையில் உள்ளூராட்சிச் சபை தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அந்த தேர்தலில் போட்டியிடுவதற்காக எதிர்க் கட்சியின் பல கட்சிகள் இணைந்து சுதந்திர மக்கள் முன்னணி என்ற கூட்டணியை உருவாக்கின.

தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் அந்த முன்னணியின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், மீண்டும் கூட்டணிக் கட்சிகளுடனான பேச்சுவார்த்தை அண்மையில் நடைபெற்றுள்ளது.

சுதந்திர மக்கள் முன்னணியின் அரசியல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்து எதிர்வரும் தேர்தலை எதிர் கொள்ளவேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் மோத வேண்டுமாயின் எதிர்க்கட்சிகள் ஒன்றாக ஒன்றிணைய வேண்டும் எனவும் இதன் போது பேசப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்துவது தொடர்பில் விமல் வீரவங்ஸ மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அரசியல் அறிவுள்ள புகழ்பெற்ற நபரை பொதுவேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அப்படியான ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்துவதன் மூலம் விமல் வீரவன்ஸ மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோரின் ஒத்துழைப்புகளை பெற்று ஒன்றை இணைந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள முடியும் என பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (அ)

# சதொசவில் 300 ஊழியர்களை கட்டாய ஓய்வில் அனுப்ப முடிவு

கொழுமு, செப். 17

கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தின் (சதொச) மறுசீரமைப்பின் கீழ், 300 ஊழி யர்களை இம்மாதம் 30ஆம் திகதி முதல் கட்டாய ஓய்வு பெறுவதற்கு அதன் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

அதன்படி, பொது மேலாளர், மேலாளர், கணக்காளர், உதவி கணக்காளர், மேலாண்மை உதவியாளர், மேற்பார்வையாளர், மண்டல மேற்பார்வையாளர், பொறியியல் மேற்பார்வையாளர் , சாரதி, துணை சாரதி உள்ளிட்ட பல பதவிகளில் பணியாற்றிய 292 பேர் பணியிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

வர்த்தக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ அமைச்சரவை யில் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ள நிலையில் சதொச நிர்வாகம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்த கட்டாய ஓய்வூதியத் திட்டத்தின்படி, சதொச நிறுவனத்தின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் வழங்கப்பட்ட சுற்றறிக்கையில், சம்பளம் வழங்கியதன் பின்னர் செப்ரெம்பர் 30ஆம் திகதி முதல் அனைத்து ஊழியர் களுக்கும் மாதாந்த சம்பளம் அல்லது வேறு கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது.

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு சதொச நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் நட்டஈடு சூத்திரத்தை தயாரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சதொச ஊழியர்களின் கடன் மற்றும் சதொச ஊழியர் களுக்கு செலுத்தவேண்டிய பணம் மற் றும் ஒழுக்காற்று உத்தரவின் பேரில் செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகளையும் கழித்து, மீதமுள்ள பணம் இழப்பீட்டு சூத்திரத் தின்படி வழங்கப்படும் என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையுடன், ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி ஆகியவற்றின் சட்டப்படியான கொடுப்பனவுகளுக்கு ஊழியர்களுக்கு உரிமை உண்டு என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை பொருட்களை விநி யோகித்து வந்த கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்திற்கு (சதொச) சொந்தமான அனைத்து சொத்துக்களையும் கலைப்பதற்கும் அதன் நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், கட்டாய ஓய்வு மற்றும் சதொச சொத்துக்களை கலைக்கும் தீர்மானத்திற்கு அதன் ஊழியர்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மேய்ச்சல் தரைகளை மீட்டுத் தரக்கோரி சுழற்சி முறையில் போராட்டம் ஆரம்பம்

மட்டக்களப்பு, செப். 17

மட்டக்களப்பு பெரியமாதவணை, மயிலத்தமடு பண்ணையாளர்கள் தங்களது மேய்ச்சல் தரைகளை மீட்டுத்தரக் கோரி சுழற்சி முறையிலான போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு சித்தாண்டி பாடசாலைக்கு முன்பாக நேற்று காலை முதல் குறித்த போராட்டம் முன்னெக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கையில்,

“மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவசாய கூட்டத்தின் போது மேய்ச்சல் தரை தொடர்பாக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது என மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

இதனையடுத்தே தங்களது மேய்ச்சல் தரையை மீட்டுத் தருமாறு கோரி போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

இந்த போராட்டமானது சுழற்சி முறையிலான போராட்டமாக தொடர்ச்சி யாக முன்னெடுக்கப்பட உள்ளது. இதற் கான தீர்வு கிடைக்கா விடத்து கால்நடைகளைக் கொண்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தை முற்றுகையிட வுள்ளோம்.

எமது இந்த போராட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்”- என தெரித்தனர். (அ)



# அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகள் காணாமல்போனமை குறித்து விசாரணை

கொழும்பு, செப். 17

பதிவுத் தபாலில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகள் காணாமல் போனமை குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என நீதி மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகம் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகள் பதிவு தபால் மூலம் அந்தந்த நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும்.

குறிப்பிடப்படும் பல அறிக்கைகளை மீண்டும் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றங்களால் கோரப்படுவதாகவும் அந்த அறிக்கைகள் கிடைக்கப்பெறவில்லை என காரணங்களை நீதிமன்றங்கள் தெரிவிக்கின்றன எனவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் முறையான விசாரணை நடத்துவதே பொருத்தமானது என குழு அவதானித்துள்ளது.

அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகளை திருப்பி அனுப்ப சிறிது கால அவகாசம் தேவைப்படுவதால், அதுதொடர்பான நடவடிக்கைகள் தாமதமாகி, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு பெரும் அநீதி இழைப்பதாகவும் துறைசார் குழு தாக்கல் செய்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த பகுப்பாய்வுகளை மேற்கொள்ள இரசாயனங்கள், இதர பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இயந்திர உதிரி பாகங்கள் பற்றாக்குறை இருப்பதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இதேவேளை , அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தில் 113 பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் இவற்றின் தாமதத்திற்கு காரணமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சில பொலிஸ் உத்தியோகத்தர்களின் சட்டத்திற்கு முரணான தன்னிச்சையான செயற்பாடுகளினால் சிறைச்சாலைகள், நீதிமன்றங்கள், அரச பரிசோதகர்கள் என பொது மக்களும் பெரும் அநீதிக்கு ஆளாவதாக இந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# எனக்கெதிரான குற்றச்சாட்டுகளை மீள்பரிசீலனை செய்யவேண்டும்!

## முன்னாள் ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, செப். 17

சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்படம் மூலம் ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான பல சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், தமக்கு எதிரான குற்றச்சாட்டுகளை மீள்பரிசீலனை செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது சட்டத்தரணி ஊடாக உயர்நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட 12 அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று முன் தினம் மீள விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால



சிறிசேன சார்பில் மன்றில் முன்னிலையான பைசர் முஸ்தபா இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

குறித்த மனுக்கள் புவனேக அலுவிஹாரே, முர்து பெர்னாண்டோ, எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டி.நவாஸ், குமுதுனி விக்ரமசிங்க மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய நீதியரசர்கள் அடங்கிய ஆயம் முன்னிலையில் நேற்று முந்தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

இதேவேளை, வழக்கு விசாரணையின் பின்னர் சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை காரியாலயத்திற்கு அடுத்த வாரம் சென்று ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துமாறு மனு ஒன்றை கையளிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார். (அ)

# ஹரக் கட்டாவுக்கு உடந்தையாக இருந்த பிறிதொரு பொலிஸ் அதிகாரி இடமாற்றம்!

கொழும்பு, செப். 17

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் 'ஹரக் கட்டா' என்ற நந்துன் சிந்தக்க, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து தப்பிச் செல்ல முயன்றதை அடுத்து, அந்த சந்தர்ப்பத்தில் கடமையில் இருந்த குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், முன்னதாக, ஹரக் கட்டாவிடம் விசாரணைகளை முன்னெடுத்த ஏழு பேர் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இதேவேளை, திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் 'ஹரக் கட்டா' என்ற நந்துன் சிந்தக்க, குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இருந்து தப்பிச் செல்வதற்கு உதவி புரிந்ததாக கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளை கைது செய்வதற்கான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஹரக் கட்டாவின் கையில் போடப்பட்டிருந்த கைவிலங்கை அகற்றி அவர் தப்பி செல்வதற்கு முயற்சித்திருந்த நிலையில் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த 10 நாட்களாக தலைமறைவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசாங்கத்தின் நிதி சாராத சொத்துகளை கணக்கிடும் செயற்பாட்டில் குறைபாடுகள்

கொழும்பு, செப். 17

அரசாங்கத்தின் நிதி சாராத சொத்துகளைக் கணக்கிடும் செயற்பாட்டில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றமை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களின் நிதிச் சொத்துகளை முகாமைத்துவப்படுத்தும் செயற்பாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்வதற்காக இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தெரியவந்துள்ளது.

நாட்டின் சொத்துகள் தொடர்பில் கூட்டறிக்கையொன்றை தயாரிப்பதற்கான முறைமையொன்று இதுவரை காணப்படவில்லை என கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன சுட்டிக்காட்டினார்.

இது பாரதூரமான நிலைமை என அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினரான பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (அ)

# தியாக தீபம் திலீபனின் நினைவூர்தி பேரணிக்கு அக்கரைப்பற்றில் எதிர்ப்பு

மட்டக்களப்பு, செப். 17

உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு உயிரிழந்த தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு பொத்துவில் முதல் யாழ்ப்பாணம் வரை முன்னெடுக்கப்படும் நினைவூர்தி பேரணிக்கு அக்கரைப்பற்று பகுதியில் எதிர்ப்பு வெளியிடப்பட்டமையை அடுத்து அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட தரப்பினரால் குறித்த வாகன பேரணி பொத்துவில் நகரில் நேற்று முன் தினம் பிற்பகல் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த வாகன பேரணி செல்லும் வீதியின் இருமருங்கிலும் மக்கள் தியாக தீபம் திலீபனின் உருவப்படத்துக்கு மலர்த்தூவி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இந்தநிலையில், அக்கரைப்பற்று பகுதியில் பதாகைகளை ஏந்திய சிலர் வீதியை மறைத்து குறித்த வாகன பேரணிக்கு எதிர்ப்பை வெளியிட்டனர்.

முஸ்லீம் மக்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நடத்திய தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துமாறு சர்வதேசத்தை வலியுறுத்துவதாக தெரிவித்து அவர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர் என தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு வாகன நெரிசல் ஏற்பட்டது. இந்நிலையில் குறித்த வாகனப் பேரணி மாற்று வீதியில் அங்கிருந்து சென்றதாக கூறப்பட்டது.

உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு உயிரிழந்த திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு பொத்துவில் முதல் யாழ்ப்பாணம் வரை முன்னெடுக்கப்படும் வாகன பேரணி நேற்று களுவாஞ்சிக்குடியில் இருந்து வாகரை ஊடாக திருகோணமலையை சென்றடைந்தது. (அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளுடன் தொடர்புடைய 100 பேர் இவ்வருடத்தில் கைது!

கொழும்பு, செப். 17

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளுடன் தொடர்புடைய நூறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி செனரத் யாப்பா இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் இந்த வருடத்தில் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடத்தில் வெகுவான அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

குறிப்பாக அனுமதிப் பத்திரமின்றி வெளிநாட்டுக்கு பணியாளர்களை அனுப்பியமை தொடர்பிலும் தனிநபராக அல்லது குழுவாக வெளிநாட்டு தொழிலுக்கு அனுப்புவதாக தெரிவித்து பண மோசடியில் ஈடுபட்டமை தொடர்பிலும் ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 100 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் தனிநபர்களாக குழுக்காளாக செயற்பட்ட 90 பேரும் அனுமதி பத்திரம் இன்றி வெளிநாட்டுக்கு பணியாளர்களை அனுப்புவதற்கு முற்பட்ட 9 நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதி பத்திரத்தை பெற்று தவறாக செயற்பட்ட நிறுவனமொன்றின் உரிமையாளரும் அதில் அடங்குவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி செனரத் யாப்பா தெரிவித்தார். (அ)

# பெருமளவு ஹெரோயினுடன் 70 வயதானவர் யாழில் கைது!

யாழ்ப்பாணம், செப். 17

யாழ். நகர மத்தியில் ஒரு கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 70 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் மாலை 3 மணியளவில், தபால்நிலைய வீதியில் உள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றின் முன்பாக இவர் கைதானார்.

வாகனமொன்றில் போதைப் பொருளை பரிமாற்ற முயன்ற போது, விசேட அதிரடிப்படையினரால் அவர் கைதானார்.

வல்வெட்டித்துறையை சேர்ந்த ஒருவரே கைதானார். (அ)

# பயணப்பையில் இருந்து ஒருவரின் சடலம் மீட்பு!

கொழும்பு, செப். 17

சீதுவ பகுதியில் பயணப்பையில் இருந்து நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

சீதுவ தன்டுகம் ஓயாவிலிருந்து குறித்த பயணப்பை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கட்டுகஸ்தோட்டையில் ஒருவர் வெட்டிக் கொலை

கொழும்பு, செப். 17

கட்டுகஸ்தோட்டை மெனிக்கும்புர பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடி வீடொன்றில் தனியாக இருந்த 57 வயதுடைய நபர் ஒருவர் நேற்று அதிகாலை வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சிசிர பிரியந்த குமார என்ற 57 வயதுடைய நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வெளிநாட்டில் இருக்கிறார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பு கொல்லப்பட்டவர் மட்டும் இலங்கைக்கு வந்து, புதிய வீடு கட்டி வருகிறார்.

இந்த வீட்டின் பாதுகாப்பிற்காக தனியார் பாதுகாப்புச் சேவையை சேர்ந்த இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களான தந்தை மற்றும் மகன் ஆகியோர் மாறி மாறி பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வீட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டவரான 33 வயதுடைய நபரே கொலையை செய்ததாக சந்தேகிக்கப்படுகிறது.

அவரை பிரதேசவாசிகள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ)

# வீட்டு வேலைக்காக ஜோர்தானுக்கு செல்லும் தொழிலாளர்களுக்கு காப்புறுதிக்கொள்கை

கொழும்பு, செப். 17

வீட்டு வேலைக்காக ஜோர்தான் செல்லும் தொழிலாளர்களுக்காக புதிய காப்புறுதிக் கொள்கையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன் கீழ் பணி ஒப்பந்த காலத்தில், குறித்த தொழிலாளர் உயிரிழந்தால் அல்லது அவசர விபத்துகளால் நிரந்தர ஊனமுற்றால் இழப்பீடு வழங்கப்படும்.

இது தவிர மருத்துவ சிகிச்சை, அறுவை சிகிச்சை மற்றும் கோவிட் போன்ற தொற்று நோய்களுக்கும் இந்த காப்புறுதி மூலம் இழப்பீடு வழங்கப்படவுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
17.09.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 31

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 205 2300**

# தமிழ் கட்சிகள் என்ன செய்கின்றன?

அண்மையில், சி. வி. விக்னேஸ்வரன் அனைத்து கட்சிகளையும் நோக்கி ஓர் அழைப்பை விடுத்திருந்தார். அதாவது, அனைவருமாக ஒன்றிணைந்து - இந்திய பிரதமர் மோடியை சந்திப்பதற்கான ஆலோசனையை முன்வைத்திருந்தார். இந்தியாவில் ஒரு தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் அதில் ஒப்பீட்டடிப்படையில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி சவால்களை எதிர்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் தேர்தல் வெற்றியை இலக்கு வைத்து பாரதிய ஜனதா கட்சி பல்வேறு நகர்வுகளை முன்னெடுத்துவருகின்றது. தமிழ்நாட்டில் தங்களின் ஆதரவை பெறும் முயற்சியில் ஈழத் தமிழர் மீதான கரிசனையும் ஒரு கருவியாக பயன்படுத்தப்படுவதான தோற்றம் தெரிகின்றது. உள்ளூர் அரசியலில் வெற்றியை பெறும் நோக்கில் கட்சிகள் பல்வேறு நகர்வுகளை முன்னெடுப்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை ஆனால், இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு மோடியை சந்திப்பதும், பிரச்னைகளை அவரிடம் நேரடியாக முன்வைப்பதும் நல்லதோர் ஆலோசனைதான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சி வெளியேறிய பின்னர் குத்துவிளக்கு சின்னத்தில் கூட்டமைப்பாக பயணிக்கும் ஐந்து கட்சிகளும் அவ்வாறானதொரு கோரிக்கையை இந்திய தூதரகத்திடம் முன்வைத்திருந்தனர். ஆனால், அனைத்து கட்சிகளும் இணைந்து அதற்கான முயற்சியை மேற்கொள்வதற்கு இது பொருத்தமான காலம். ஆனால், இதில் ஒரு விடயத்தில் கட்சிகள் தெளிவாக இருக்க வேண்டும். தங்களின் அப்புக்காத்து செருக்கை காண்பிப்பதற்கான ஒரு களமாக இதனை பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. இந்தியா எதனை கூறிவருகின்றதோ அதனையே மோடியிடம் ஒரு கோரிக்கையாக முன்வைக்க வேண்டும். சமஷ்டியை இந்தியாவிடம் வலியுறுத்துவது விழலுக்கு நீரிறைப்பதற்கு ஒப்பானது. முதலில் இந்தியாவின் நிலைப்பாடாக இருப்பதை முன்வைத்து பின்னர் அதிலிருந்து முன்னேறும் தீர்மானத்தில் தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டும். அவ்வாறில்லாது மோடியை சந்திக்க முயற்சிப்பதில் பயனில்லை.

தற்போதைய சூழலில் பிரதமர் மோடி தமிழ் கட்சிகளை சந்திப்பதற்கான வாய்ப்பான சூழல் காணப்படுகின்றது. கட்சிகள் அனைத்தும் ஒரு நிலைப்பாட்டை கைக்கொள்ளுமாக இருந்தால் முயற்சி கைகூடலாம். முன்னர் மோடி வழங்கிய அழைப்பை சம்பந்தன் துஷ்பிரயோகம் செய்திருந்தார். எனவே, புதுடில்லி நிச்சயம் தமிழ் கட்சிகள் தொடர்பில் நம்பிக்கை கொண்டிருக்க வாய்ப்பில்லை. உண்மையில் இந்தியா சில விடயங்களில் உறுதியான நிலைப்பாட்டை காண்பிக்காமல் இருப்பதற்கு தமிழ் கட்சிகள் பக்கத்திலுள்ள பலவீனங்களே பிரதான காரணமாகும். இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தின் கசப்பான அனுபவங்கள் இலகுவாக மறந்துவிடக் கூடியவைகள் அல்ல. இதில் என்னதான் விளக்கங்களை கொடுத்தாலும்கூட ஒரு பிராந்திய சக்தியென்னும் வகையில் இந்தியா கடந்தகாலத்தை சாதாரணமாக புறந்தள்ளி விடயங்களைக் கையாளாது. ஏனெனில், இப்போதும் தமிழ் கட்சிகள் மத்தியில் அரசியல் தீர்வு தொடர்பில் சாத்தியமான பாதையில் பயணிப்பது தொடர்பில் தெளிவான நிலைப்பாடில்லை. தேர்தலுக்காக ஒன்றும், பின்னர் வேறொன்றுமாகவே பேசிவருகின்றனர். இந்திய பிரதமருக்கு மூன்று கடிதங்களை அனுப்பி தங்களின் இயலாமையை காண்பிக்கின்றனர். இந்த நிலையில் எந்த அடிப்படையில் இந்தியா தமிழ் கட்சிகளை நம்பி கொழும்புடன் உரையாட முடியும். பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், தமிழர் பிரச்னையில் இந்தியா நடுநிலையாளராக வரவேண்டுமென்று கூறுகின்றார். முதலில் தமிழ் கட்சிகளுக்குள் கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டல்லவா, இந்தியாவின் நடுநிலையான தலையீட்டைக்கோர வேண்டும். இந்தியாவின் ஆதரவு வேண்டுமென்றால் முதலில் தமிழ் கட்சிகள் நடைமுறை சாத்தியமான விடயங்களில் ஒன்றுபட வேண்டும்.

# வடக்கு-கிழக்கில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படுவது மிக அவசியமானது!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம்

*வவுனியா, செப். 17*

இலங்கையின் வடக்கு-கிழக்கில் பொதுவாக்கெடுப்பை நடத்துவதற்கு ஐ.நா பயன்படுத்திய வழிமுறையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பின்பற்ற வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் இதனை கூறினார்.




அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்துடன்,13ஆவது திருத்தத்தை யாரேனும் விரும்பினால், இலங்கை நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டும்.

1987ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசியலமைப்பில் அங்கம் வகிக்கும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோர வேண்டும்.

13ஆவது திருத்தம் நாட்டின் சட்டமாகும்.

எனவே எந்த அரசாங்கமும் அதனை நடைமுறைப்படுத்த மறுத்தால் அதனை விரும்பும் தமிழ் அரசியல் வாதிகள் நீதிமன்றத்தை நாடவேண்டும்.

இலங்கையின் நீதித்துறை அதனை அமுல்படுத்துவதில் தோல்வியடைந்தால், இலங்கை தனது சொந்த அரசியலமைப்பை மதித்து பின்பற்றவில்லை என்பதையே உலகிற்கு காட்டுகின்றது.

சிங்கள அரசியலமைப்பு எமக்கு வேண்டாம். 13ஆவது திருத்தம் என்பது தமிழர்களின் அரசியல் தீர்வோ அல்லது தமிழர்களுக்கு உதவுவதற்காகவோ அல்ல.

இந்தியா எப்போது இலங்கை மீது படையெடுக்க விரும்புகிறதோ அல்லது இலங்கைக்கு வர நினைக்கிறதோ, அப்போதெல்லாம் 13ஆவது திருத்தம், அவர்களின் துரும்பாக இருக்கும்.

எனவே, பாதிக்கப்பட்டவர்களாகிய நாங்கள், இலங்கையின் வடகிழக்கில் சுதந்திர வாக்கெடுப்பு நடத்தவும், அதற்காகப் பிரசாரம் செய்யவும் ஐ.நாவை கோருகிறோம்.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் பொதுவாக்கெடுப்பை நடத்துவதற்கு கிழக்கு திமோரில் ஐ.நா பயன்படுத்திய முறை மற்றும் வழிமுறையை ஐநா மனித உரிமைகள் பேரவை பின்பற்ற வேண்டும்-என்றார். (அ)

## தேர்தல் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான காலஅவகாசம் நீடிப்பு!

*கொழும்பு, செப். 17*

தேர்தல் செலவுகள் தொடர்பான சட்டமூலத்தின்படி தேர்தல் வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான காலஅவகாசத்தை 21 நாட்களில் இருந்து 42 நாட்களாக அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குடியியல் வழக்கு நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைக்கான திருத்தம் மற்றும் தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பில் நீதி மற்றும் சட்டம் மீதான துறைசார் மேற்பார்வைக் குழுவில் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலின்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேர்தல் சட்டமூலங்களால் நிர்ணயிக்கப்பட்ட அபராதத் தொகை போதுமானதாக இல்லாததால், தற்போதைய நிலைமைக்கு உரியவாறு அபராதத் தொகையை புதுப்பிக்கவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

## 17 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது!

*கொழும்பு, செப். 17*

17 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்களை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்கு சட்டவிரோதமாக கடத்த முற்பட்டதாக கூறப்படும் இலங்கைப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

டுபாயில் இருந்து வந்த குறித்த பெண்ணிடமிருந்து 17 ஆயிரம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -95

# சமூகப் பொறுப்புணர்வோடு.....

கணபதி சர்வானந்தா

தமது குடும்பத்தில் நடைபெறுகின்ற சிறிய நிகழ்வு கூட சமூகத்துக்கு நன்மை அளிப்பதாக இருக்க வேண்டும் என்று ஒரு சிலர் சிந்திப்பதை அவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. அதே வேளை புலம் பெயர் தேசத்தில் வாழ்கின்ற எம்மவர் அது பற்றி அதிகம் சிந்திக்கின்றனர் என்றதை கருவி நிகழ்வுகளில் நடைபெற்றுவரும் வாழ்வாதாரக் கொடுப்பனவுகளில் காணக்கூடியதாக இருக்கின்றது.

கருவி மாற்றுத் திறனாளிகள் சமூக வள நிலையத்தில் கடந்த 10 ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற சமூகக் கொடுப்பனவுகள் ஊடாக 5000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பயன் பெற்றிருக்கின்றனர் என்ற விபரத்தை அவர்கள் தமது 10வது ஆண்டு மலரில் பதிவு செய்திருக்கின்றனர். அந்தக் கொடுப்பனவுகள் எல்லாம் பலர் தத்தம் குடும்பங்களில் நடைபெற்ற பிறந்த தின மற்றும் இறந்ததின ஞாபகார்த்த மாக வழங்கியிருக்கின்றனர். வழங்கப்பட்ட அனைத்தும் வாழ்வாதாரத்துக்கான உணவுப் பொதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் ஒரு குடும்பம் சமூகத்தைப் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றியிருக்கிறது. அது பெருமைக்குரிய விடயம். யாழிலும், மட்டக்களப்பிலும் தமது வணிகச் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் எவகிறீன் அச்சகத்தினர் பணி தொடர்பாகவே இன்றைய பகிர்வு அமைகிறது.

அண்மையில் மறைந்த தமது நிறுவனத்தின் ஆரம்பகர்த்தாவான அமரர் மயில்வாகனம் ஆனந்தரெட்ணசாமி அவர்களின் நினைவு நிகழ்வைத் தமது குடும்பச் சூழலோடு நிறுத்திக் கொள்ளாமல் அதனூடாகச் சமூகமும் பயன்பெறவேண்டும் என்ற எண்ணத்தில் அதனை ஒரு சமூகப் பொறுப்புள்ள செயற்பாடாக மாற்றியிருக்கின்றனர்.

கடந்த 14.08.2023 அன்று இறைபதம் அடைந்த அமரர் மயில்வாகனம் ஆனந்தரெட்ணசாமி அவர்கள் ஞாபகார்த்தமாக 13.09.2023 அன்று வெளியிட்ட நினைவு மலரில் சில பக்கங்களில் அமரர் பற்றிய விபரங்களைப் பதிவு செய்த அதே சமயம் ஏறத்தாழ 55 பக்கங்களில் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ் அவர்கள் எழுதிய “பொறுப்பான பிள்ளை வளர்ப்பு” (Responsible Parenting) என்ற நூலை இணைத்து அதனை ஒரு பெறுமதி மிக்க நூலாக மாற்றியிருக்கின்றனர்.

ஒரு குடும்பம் தமது குடும்பக் கொண்டாட்டத்தைச் சமூக நிகழ்வாக மாற்றியிருப்பது இது முதல் தடவையல்ல.பல குடும்பங்கள் இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் தம்மை சூழ்ந்தவர்களை மட்டும் அறிவூட்டுவதோடு நின்றுவிடாது சமூகத்தை அறிவூட்டுகின்ற செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதைப் பார்த்திருக்கிறேன்.சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் எனப் பலவேறு சமூகப் பொறுப்புள்ள நிறுவனங்களுக்கு அவர்கள் சென்று அங்குள்ளவர்களோடு இணைந்து அவர்களை மகிழ்விக்கின்ற அதே வேளை தமது செயற்பாடுகளையும் பயனுள்ளதாக மாற்றிக் கொண்டிருக்கின்றனர். அதன் சமூகப் பெறுமதியைத் தமது குடும்ப அங்கத்தவர்களுக்குக் கடத்துகின்ற பணியினைச் செய்திருக்கின்றனர்.

அவ்வாறு தற்காலச் சூழலில் சமூகத்தின் குறைநிறைகளை அறிந்து தமது செயற்பாடுகளைக் கட்டமைப்பவர்கள் வரிசையில் அமரர் மயில்வாகனம் ஆனந்தரெட்ணசாமி அவர்களின் குடும்பத்தவர்கள் செயற்பட்டிருப்பது பெறுமதி மிக்க செயற்பாடுகளில் ஒன்று. ஒரு குடும்பம் பல குடும்பங்களைப் பற்றிச் சிந்தித்ததன் விளைவே இச் செயற்பாடாகத் தோற்றும் பெறக் காரணமாக இருந்திருக்கிறது.

தற்காலச் சூழலில் மாறுபட்டுக் காணப்படும் தனிக் குடும்பச் செயற்பாடுகளில் பிள்ளை வளர்ப்பு என்ற விடயம் ஒரு சவாலாகிப் போயிருப்பதை அவதானிக்க முடிகிறது. பலர் தமது பிள்ளைகளை நல்ல பிள்ளைகளாக வளாத்தெடுக்க வேண்டும் என்ற விடயத்தில் திக்குமுக்காடிப் போய்விடுகின்றனர். எம்மிடையே சிறப்பம்சமாகப் போற்றப்பட்ட கூட்டுக் குடும்பம் என்ற வகமை அருகிப் போய்விட்ட நிலையில் அது கொண்டிருந்த பொறுப்பை முகாமைப்படுத்துவதில் தனிக் குடும்பங்கள் பல சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றன. கூட்டுக் குடும்பங்களில் அக வளமும் பௌதீக வளமும் ஒன்றிணைந்து பராமரிக்கப்பட்ட விடயம் திட்டமிட்டு நடைபெற்ற ஒன்றல்ல. அவைகள் தம்மை அறியாமலே தாமாக நடந்தேறியவை.அவை குடும்பப் படிமுறைகளின் வழி வந்த பழக்கங்களாகவும் வழக்கங்களாகவும் நடைபெற்று வந்திருக்கின்றன. அப்போது காணப்பட்ட குடும்ப உறவுகள் அவ்வாறான பொறுப்புகளை மகிழ்வோடு ஏற்றெடுத்துச் சுமந்து வந்திருக்கின்றனர். ஆனால் தற்போது நிலைமை மாறியிருக்கிறது.

அக்காலக் குடும்ப உறவுகளில் தந்தை வழி மற்றும் தாய் வழிச் சொந்தங்களுக்கெனப் பல கடமைகள் பொறுப்புகளாகவும் சடங்குகளாகவும் உள்ளிணைக்கப்பட்டு வந்திருக்கின்றன. இதில் பல விடயங்கள் சமயச் சடங்குகளில் புகுத்தப்பட்டு அதனூடாகக் குடும்ப நலன்களைப் பேணிப்பாதுகாத்து வந்திருக்கின்ற னர்.

பிள்ளை வளர்ப்பைப் பொறுப்புள்ளதொன்றாக அறியாத குடும்பங்களில் பிள்ளைகள் சுயம்புலிங்கங்களாகவே வளர்ந்து வருவதைப் பார்த்திருக்கிறோம். அவ்வாறான குடும்பங்களில் அவர்கள் வாழும் சூழலே அவர்கள் குண நலன்கள் பற்றித் தீர்மானிப்பவையாகக் காணப்படுகிறது. பொதுவாகத் தீய சூழலில் காணப்படுகின்ற நல்ல குணம்படைத்தவர்கள் தமது நிலையைத் தக்க வைக்கப் போராடிவருவதைப் பார்க்கின்றபோது அங்கேயுள்ள முழுச் சமூகத்தையும் வளப்படுத்த வேண்டியிருப்பது தெரிகிறது.

எனவே அத்தகைய சூழலில் வளவாளர்களாகச் செயற்பட முனைபவர்களுக்கு அல்லது விருப்பம் கொண்டவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக, ஒரு கையேடாக வைத்திய கலாநிதி எஸ். சிவதாஸ் அவர்களின் பொறுப்பான பிள்ளை வளர்ப்பு என்ற நூலைப் பார்க்கலாம். யாழ்.போதனா வைத்தியசாலையில் உள மருத்துவ நிபுணராகக் கடமையாற்றும் அவர் பெறுமதி மக்க பல மருத்துவப் பணிகளைச் செய்து வருகிறார். அவரின் எண்ணக் கருவில் தோன்றியதொன்றாகவே “அரும்பு” என்ற குழந்தைகள் தொடர்பான செயற்பாடுகளைப் பார்க்கலாம்.

சமூக நலன் வேண்டி, எப்பொழுதும் சமூகத்துக்குக் கிடைக்கக் கூடியவர்களாகத் தம்மை நிலைநிறுத்துக் கொள்ளும் சமூக சேவகர்களுள் ஒரு முக்கியமானவராக நான் மருத்துவர் எஸ். சிவதாஸ் அவர்களைப் பார்க்கிறேன். அவர் பணிகள் சிறப்புற அமைய எமது வாழ்த்துகள். •

# இந்தவார ராசிபலன் 17.09.2023 -23.09.2023

ஞாயிற்றுக்கிழமை

சோபகிருது வருடம் - ஆவணி 31

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துதியை

### மேஷம் [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

பண வரவுகள் போதுமான அளவு இருந்தாலும் பலவிதங்களில் செலவுகள் ஏற்படும். நண்பர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து தக்க சமயங்களில் கைகொடுப்பர். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் கவனமாக இல்லாவிட்டால், மேலதிகாரிகளின் கோபப்பார்வைக்கு இலக்காக நேரிடும். அனைவரிடமும் சுமுகமாக நடந்துகொள்வது அவசியம். பணப் பொறுப்பில் உள்ளவர்களின் பணிகளை அவ்வப்போது கண்காணிப்பது அவசியம்.

### ரிஷபம் [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

சிறிய இடையூறுகள் ஏற்பட்டாலும் அதை சமாளித்து வெற்றிபெறுவீர்கள். பண வரவு தாமதமானாலும், பக்குவமாகக் கையாளுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு ஆக்கப்பூர்வமான முன்னேற்றம் ஏற்படும். அதிகாரிகளின் அன்பான ஆதரவு இருந்தாலும் எதிர்பார்க்கும் சலுகைகள் கிடைக்காது. சொந்தத்தொழில் சுமாரான லாபம் தரும் சூழ்நிலையில் இருக்கும். வேலை தந்த வாடிக்கையாளர்களுக்கு தேவையானபோது வேலைகளை முடித்துத் தர கூடுதல் நேரத்தை செலவு செய்ய வேண்டியது இருக்கும்.

### மிதுனம் [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

நன்மைகளை அதிகமாக சந்திக்கும் வாரம் இது. முன்னேற்ற திட்டங்களை முறைப்படுத்தி வாழ்க்கைக்கு பயன்படும் வகையில் மாற்றுவீர்கள். பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பெற்றோர் வழியில் சேர வேண்டிய பூர்வீக சொத்துக்களில் காணப்பட்ட சிக்கல்கள் விலகும். உத்தியோகஸ்தர்கள் சிலருக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் ஏற்படக்கூடும். சொந்தத் தொழிலில் நல்ல வருமானம் காணப்படும். வாடிக்கையாளர்களின் தேவையை உணர்ந்து செயல்படுவீர்கள்.

### கடகம் [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

வருமானத்தை அதிகப்படுத்த புதிய முயற்சிகளைப் பற்றி சிந்திப்பீர்கள். அவசியமான காரியம் ஒன்றைச் சாதிப்பதற்காக முக்கிய நபரைச் சந்திப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் கோரிக்கைகள் நிறைவேறும் சூழல் உருவாகும். அவசியமான வேலையொன்றை உடனே செய்து முடிக்க வேண்டியிருக்கலாம். எதிர்பார்த்த பண வரவுகள் கிடைத்து, பாதியில் விட்டிருந்த பணியைத் தொடங்குவீர்கள். கூட்டுத்தொழிலில் பழைய பொருட்களை மாற்றிக் கொள்வீர்கள்.

### சிம்மம் [ மகம், பூரம், உத்திரம் 1 ]

நிறுத்தி வைத்திருந்த காரியங்களை முக்கிய நண்பர்கள் உதவியுடன் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் கடமையைச் செய்வதில், சகப் பணியாளரின் பணியையும் சேர்த்துச் செய்ய வேண்டியிருக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள் கையிலுள்ள பணிகளை முடிக்க முடியாமல் திணறும் நிலை ஏற்படலாம். கூட்டுத்தொழிலில் பணியாளர்கள், தங்களின் வேலையை ஒழுங்குபடுத்துவீர்கள்.

### கன்னி [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

முக்கியமான பணியொன்றைச் செய்யும் முயற்சியில் ஓய்வின்றி உழைப்பீர்கள். வழியில் சந்தித்த நீண்ட கால நண்பர் ஒருவரால் வாழ்க்கையில் முக்கிய திருப்பம் ஏற்படலாம். பண வரவுகளில் பாதிப்பு இருந்தாலும், அவற்றை சாமர்த்தியமாக சமாளித்து விடுவீர்கள். உத்தியோகத்தில் பணியாற்றுபவர்கள் பேச்சைக் குறைத்து, பணிகளில் கவனம் செலுத்துவது நன்மை தரும். கடிதம் மூலம் வெளியூரில் இருந்து நல்ல தகவல் வந்து சேரும். சொந்தத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்த கடுமையாக உழைப்பீர்கள்.

### துலாம் [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

எடுத்த காரியங்களில் தீவிர முயற்சியினால் வெற்றிபெறும் வாரம் இது. தடை, தாமதங்களைத் தவிடு பொடியாக்கி முன்னேறுவீர்கள். உத்தியோகஸ்தர்களில் சிலர், தங்கள் பொறுப்புகளை சரிவரச் செய்யாமல் அதிகாரியின் கோபத்திற்கு ஆளாவீர்கள். சொந்தத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்காமல் போகலாம். வாடிக்கையாளர் ஒருவரால் அறிமுகப்படுத்தப்பட்ட நபரிடம் பண விஷயத்தில் மன வருத்தம் உண்டாகக்கூடும். கூட்டுத் தொழிலில் கூட்டாளிகளின் பேச்சும், செயலும் அதிருப்தியை அளிக்கலாம்.

### விருச்சிகம் [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

பயணங்களை தள்ளி வைப்பது நல்லது. உங்கள் சொந்த முயற்சியால் திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டவாறே செய்து முடிப்பீர்கள். பண வரவுகளில் இருந்த இன்னல்கள் அகலும். எதிர் பார்க்கும் தொகை கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில், சக ஊழியர்களுடன் எதிர்பாராத மனக்கசப்பு உருவாகலாம். உயரதிகாரிகளின் விருப்பப்படி அவசியமான காரியம் ஒன்றை உடனடியாக செய்ய நேரிடும்.

### தனுசு [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் போது கவனம் அவசியம். சில வியங்களுக்காக முக்கியமான நபர்களைச் சந்தித்து அவசியமான காரியங்களை ஆக்கப்பூர்வமாக செய்து முடிப்பீர்கள். மற்றவர்களால் கடினமாகக் கருதப்படும் செயலொன்றை வெகு எளிதாக செய்து நண்பர்களால் பாராட்டப்படுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அலுவலக சம்பந்தமான வெளியூர் பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

### மகரம் [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

தன வரவுகள் தள்ளிப் போகும். நீண்டகாலமாகச் சந்திக்காத ஒருவரை சந்தித்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் மந்தமான நிலை மாறி சுறுசுறுப்பு ஏற்படும். கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு குறைந்த லாபம் இருந்தாலும், வியாபாரம் நன்றாக நடைபெறும். வியாபார நுணுக்கம் தெரிந்த கூட்டாளி ஒருவரை, அதிக மூலதனத்துடன் சேர்த்துக் கொள்ள மற்றக் கூட்டாளிகளுடன் ஆலோசிப்பீர்கள்.


### கும்பம் [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

உற்சாகமாக உழைத்து வெற்றிகளைப் பெறுவீர்கள். எதிர்பார்த்த தனவரவுகள் சிறிய தடைகளுக்குப்பின் கிடைக்கும். இருப்பினும் எதிர்பாராத செலவுகள் காத்திருக்கும். உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சிலருக்கு பதவி உயர்வோடு வேறு இடங்களுக்கு மாற்றம் கிடைக்கக்கூடும். சொந்தத் தொழிலில் ஈடுபடுவோர் வாடிக்கையாளர்களிடம் சுமுகமாக நடந்து கொள்வது நல்லது. கூட்டுமுயற்சியில் உள்ளவர்கள் வியாபார அபிவிருத்திக்காக கூட்டாளிகளுடன் கூடி ஆலோசிப்பார்கள்.

### மீனம் [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

முன்னேற்றமளிக்கும் காரியங்களைச் செய்வதில் முயற்சியோடு ஈடுபடுவீர்கள். அவசியமான செயல்களில் முக்கியமானவர் களின் ஆலோசனைகளைப் பெற்று செயல்படுத்துவீர்கள். பணவரவுகள் எதிர்பார்த்தபடி சரளமாக இருக்கும். புத்திர வழியில் முக்கியமான நல்ல திருப்பங்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு விரும்பிய இடமாற்றமும், பதவி உயர்வும் கிடைக்கக்கூடும். அலுவலகத்தின் மூலமாகக் கேட்டிருந்த கடன்கள் கைக்கு வந்து, பாதியில் நின்ற பணிகளைத் தொடருவீர்கள். சொந்தத்தொழிலில் இருந்த இறுக்கமான நிலை மாறும்.

# இலங்கை தமிழர் பிரச்னையில் முதன்முதலாக சிவில் சமூகம்!



சென்னை மடல்
-பகவான் சிங்-

சென்ற மாதம், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து உருவான ஒரு சிவில் சமூகக் கூட்டணியின் உறுப்பினர்கள், 13ஆவது சட்ட திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை மேலும் தாமதமின்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒப்புக்கொள்ள இந்தியாவின் உதவி கோரி, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்ஷங்கருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த, பதவியில் இருக்கும் மற்றும் ஓய்வுபெற்ற பல்கலைக்கழக வேந்தர்கள், துணை வேந்தர்கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பெண் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மத குருமார் உள்ளிட்ட பெருமளவு தமிழ் மக்கள் கையெழுத்திட்ட அந்த மனுவில், "13 ஆவது சட்டதிருத்தம் (13A) மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் நடைமுறைப்படுத்தல் குறித்த தமிழ் எம்.பி.க்களின் முரண்பட்ட அணுகுமுறைகளை, இந்தத் தேர்தல்களை மேலும் தள்ளிப்போடவும், 13 ஏ-ஐ நீர்த்துப் போகச் செய்யவும் ஜனாதிபதி பயன்படுத்திக் கொள்கிறார்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில், அமைச்சர் டாக்டர் ஜெய்ஷங்கரைச் சந்திக்க நேரமும் கோரப்பட்டுள்ளது. "எங்கள் மக்கள் சந்திக்கும் பிரச்னைகள் குறித்தும், அதற்கான சாத்தியமான தீர்வுகள் குறித்த எங்கள் தாழ்மையான ஆலோசனைகளையும் தங்களை நேரில் சந்தித்து விவரிக்க இந்த சிவில் சமூகக் கூட்டணியின் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பளிக்குமாறு கோருகிறோம்" என்று அம் மனுவில் இருந்தது.

நீண்ட காலமாக நிலவி வரும் தமிழர் பிரச்னை குறித்து, வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் ஒரு கூட்டமைப்பு இத்தகைய ஒரு பெருமுயற்சியை எடுப்பது எனக்குத் தெரிந்த வரை, இதுவே முதல் முறை. இது ஒரு ஆரோக்கியமான நகர்வு என்பது என் கருத்து. இந்த முயற்சியுடன் நெருக்கமான தொடர்பு கொண்ட நண்பர் ஒருவர், இதில் கையெழுத்திட்டிருக்கும் சில நூறு பேர் என்ற எண்ணிக்கை, விரைவில் பன்மடங்கு அதிகரிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற அரசியல் தலைவர்கள்மேல் மக்கள் நம்பிக்கையிழக்கத் தொடங்கியுள்ளதன் அறிகுறி இது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் 'ஈழநாடு' கட்டுரைகளில் பல முறை நான் சுட்டிக்காட்டியதுபோல், மக்களுக்கு அரசியல் தலைவர்கள் மீதான நம்பிக்கை குறைந்ததற்கு அந்தத் தலைவர்களே பொறுப்பாவார்கள். இந்த சனிக்கிழமை காலைதான், முக்கிய தமிழ் ஈழக் கட்சித் தலைவர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். தலைமையின் ஒற்றுமையின்மை மற்றும் சமூகப் பொறுப்பின்மைதான் தமிழ்ச் சமூகத்தின் மிகப்பெரிய சாபமாக இருக்கிறது என்றும் அது ஈழத்தில் மட்டுமல்லாமல், அயல் நாடுகளிலும் அவர்கள் மீதான நம்பிக்கை இழப்பிற்குக் காரணமாகிறது என்றும் ஒப்புக்கொண்ட அவர், "நமது எதிர்காலத்தை நல்ல விதமாக அமைத்துக் கொள்ள முக்கியமான பங்களிப்பாளராக இந்தியாவை முன்னிறுத்த, அனைத்துப் பிரதான கட்சிகளையும் தலைவர்களையும் ஒரு குடையின் கீழ்க் கொண்டுவர நான் தீவிரமாக முயன்று வருகிறேன். விரைவில் இதைச் சாதிப்போம்" என்றார். மேலும் அவர், இந்தத் தமிழ் அரசியல் கூட்டமைப்பின் ஒருங்கிணைக்கும் தலைவராக ரெலோ தலைவர் செல்வம் அடைக்கல நாதன் உருவெடுக்கக்கூடும் என்றும் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தங்கள் அரசியல் தலைவர்கள் மீதான நம்பிக்கையை இழந்து டாக்டர் ஜெய்ஷங்கருக்கு விடுத்த சிவில் சமூகக் கூட்டமைப்புக் கோரிக்கையைப் பார்ப்போம். உலகின் பல முக்கிய அரசியல் நிகழ்வுகள் குறித்த செய்திகளை வழங்கியுள்ள ஒரு பத்திரிகையாளனாக, இந்த நவீன உலகில், தனது மக்களுக்கான சிறந்த வளர்ச்சியை நோக்கி உழைக்கும் எந்த ஒரு சமூகமும், அரசியல் தலைவர்களை ஈடுபடுத்தாமல் அதை அடைய முடியாது என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். காரணம், இருண்ட நிலையிலிருந்து ஒளியை நோக்கித் தங்களை இட்டுச்செல்ல, தங்களிடையிலிருந்து, தங்களால் தேர்ந்தெடுக்கப்படுவபர்கள்தானே அந்தத் தலைவர்கள்? இருந்தாலும், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாண சிவில் சமூகத்தினரின் கூட்டமைப்பு எடுத்துள்ள இந்த வரவேற்கத் தக்க முன்முயற்சி, இரு பெரும் லாபங்களைப் பெற்றுத்தரக்கூடும் - ஒன்று, சமூக-அரசியல் களத்தில் சாமானியனின் பங்கை அதிகரித்து, முன்னேற்றி, எதிர்காலத்தை வடிவமைக்கும் பொறுப்பை முழுவதும் அரசியல்வாதிகளிடம் விட்டுவிடாமல் தாங்களும் ஏற்கும் சூழலை ஊக்குவிக்கும். இரண்டாவது, சிறப்பான பணியாற்றியாகவேண்டிய கட்டாயத்தையும், அதில் தவறினால், அரசியல் களத்தில் காணாமல் போய்விடும் அபாயத்தையும் அரசியல்வாதிகளுக்கு ஏற்படுத்துகிறது.

சிவில் சமூகக் கூட்டமைப்பின் கோரிக்கை, அரசின் உயர் மட்ட நிலையில் பரிசீலிக்கப்படுவதாகவும் ஒரு நல்ல முடிவு விரைவில் எட்டப்படும் என்றும் எனது டில்லி நண்பர்கள் சிலர் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். இந்தக் கூட்டமைப்பின் பலம் பன்மடங்கு அதிகரிக்கும் என்ற எனது நண்பரின் கணிப்பு விரைவில் உண்மையாகும் போலத் தெரிகிறது. 13ஆவது சட்ட திருத்த அமல்படுத்தலுக்கான அழுத்தத்தை இலங்கைக்கு அதிகரிக்கும் பணியை இந்தியா ஏற்கெனவே தொடங்கிவிட்ட நிலையில், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க சர்வதேச உதவிகளைப் பெற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த முயற்சிகளில் இந்தியா பெரும் பங்களிப்பு செய்த பின்னணியில், தேர்தல் நடத்தும் செலவுகளைக் கருத்தில் கொண்டால், மாகாணத் தேர்தல்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதை ஜெய்ஷங்கர் ஆதரிக்க மாட்டார் என்றே தோன்றுகிறது.

இது இப்படியிருக்க, இந்தியாவில் தேர்தல் ஜூரம் நன்றாகப் பிடித்துவிட்டது. மத்தியில் ஆளும் பாஜகவுக்கும் பல கட்சிகள் அடங்கிய எதிரணி 'I.N.D.I.A' கூட்டணிக்கும் இடையில் நடக்கும் போட்டியைச் சாமானியனும் கூர்ந்து கவனிக்கும் நிலையை நகர்ப்புறக் குடிசைப் பகுதிகளிலும் ஊரக வயல் வெளிகளிலும்

## உயர்மட்ட நிலையில் பரிசீலனை?

ஒன்றுபோல உருவாக்கியுள்ளன, பலம் பொருந்திய சமூக ஊடகங்கள்.

எனது எழுதும் மற்றும் உங்கள் படிக்கும் வசதி கருதி, இந்த எதிர்க்கட்சிகள் கூட்டணியை நான் 'ஐ-டொட்' கூட்டணி என்றே குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில், மூன்றாவது முறையாக நரேந்திர மோடியைப் பிரதமராக்கும் காவிக்கட்சியின் முயற்சிகள் எரிச்சலூட்டுவதல்லாமல், இந்தக் கூட்டணி, எந்த விதத்திலும் எனது நாடான இந்தியாவிற்கு முக்கியத்துவம் தருவதாக




## "எங்கள் 'பாரத' நாடு"

இப்போதைக்குக் காணப்படவில்லை. வரும் மாதங்களில், தேர்தல் நெருங்க நெருங்க, எனது இந்த எண்ணம் பொய்த்துப்போக வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். 'இந்தியாவின் எதிர்காலம்' என்றோ நரேந்திர மோடிக்கு ஒரு மாற்றாகவோ நம்பப்பட்டு வாக்குகள் பெறாவிட்டாலும், இந்த ஐ-டொட் கூட்டணியில், இருக்கும் 'டொட்'களை விடுத்து, ஓர் உருப்படியான கூட்டணியாகவாவது இது உருவெடுக்க வேண்டும் என்று நான் மனதார விரும்புகிறேன்.

அட, மறந்து விட்டேனே! 'இந்தியாவின் எதிர்காலம்' என்பதை 'பாரதத்தின் எதிர்காலம்' என்றும் கொள்ளலாம். காரணம், மத்தியில் ஆளும் பாஜக விரும்புவதுபோல நடந்தால், நாட்டின் பெயர் இனி 'பாரத்' என்று மாற்றப்படலாம். செப்ரெம்பர் 9 அன்று நடந்த ஜி-20 உச்சி மாநாட்டின் தொடக்க உரையின் போது, பிரதமர் நரேந்திர மோடியின் மேசையின் முன் இருந்த, தேசத்தைக் குறித்த பதாகையில் 'இந்தியா' என்றில்லாமல் 'பாரத்' என்றிருந்தது. இது, தேசத்தின் பெயர் மாற்றம் குறித்த சர்ச்சையை மேலும் தீவிரமாக்கியது. செப்ரெம்பர் 18 முதல் 22 வரையில் நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வை அரசு கூட்டியுள்ளது. இதற்கான உண்மையான நோக்கம், இந்தப் பெயர் மாற்றம் பற்றிய முன்னெடுப்புதான் என்று பரவலாகப் பேசப்பட்டது. குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு சார்பில் நடந்த ஜி-20 உச்சி மாநாட்டுக்கு வருகை தரும் உலகத் தலைவர்களுக்கான விருந்துக்கான அழைப்பிதழில் பாரத் குடியரசுத் தலைவர் என்றும் மோடியை பாரத் பிரதமர் என்றும்தான் குறிப்பிட்டிருந்தது. ஆசியான்-இந்தியா உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இந்தோனேசியா சென்ற மோடியின் பயணக் கையேட்டிலும் 'பாரத் பிரதமர்' என்றே குறிப்பிடப்பட்டிருந்தது.

இங்கிலாந்தின் இணைய இதழான 'த எக்கனாமிஸ்ட்', "2014இல் பாஜக ஆட்சிக்கு வந்ததிலிருந்தே, தனது ஹிந்து நாடு என்ற நோக்கத்துக்கேற்பவே கொள்கைகளை அமல் படுத்தி வருகிறது. தேசத்தின் பெயர் மாற்றம் என்ற மிகவும் கவர்ச்சிகரமான மாற்றத்தைச் செயல்படுத்த இப்போது தீர்க்கமாக முடிவெடுத்திருக்கலாம்" என்று குறிப்பிட்டுள்ளது.

'பாரத்' என்பது, இந்தத் துணைக்கண்டத்தை 2000 ஆண்டுகளுக்கும் மேலாக அமைதியாகவும் வளமாகவும் ஆண்ட பரத மன்னனின் நல்லாட்சியைக் குறிக்கும் பெயர் என்ற வாதத்தை பாஜக ஆதரவாளர்கள் முன்வைக்கின்றனர். ஹிந்து புராணங்களில் இந்தப் பெயர் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ஆங்கிலேயர்கள், ஒப்புமை இல்லாத் தங்கள் ஆளுமைக்கு உட்பட்ட நிலப்பரப்பைக் குறிக்கப் பயன்படுத்திய பெயர்தான் இந்தியா என்றும், காலனி ஆதிக்க அடிமை உணர்ச்சியின் எச்சமாக அது இருப்பதாகவும் கூறுகின்றனர். வரலாற்றாய்வாளர்களின் கூற்றுப்படி இதில் உண்மையில்லை. பிரிட்டிஷ் காலத்துக்கும் முன்பிருந்தே இந்தியா என்ற பெயர் வழக்கிலிருந்து வருகிறது. வடக்கில் பாயும் நதியான சிந்து என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து 'இண்டஸ்' என்ற பெயர், பண்டைய கிரேக்கர் காலத்திலிருந்து வழங்கி வருகிறது.

எனினும், பாஜக எதிர்ப்பாளர்கள் - குறிப்பாக, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சிக் கூட்டணித் தலைவர்கள் - தங்கள் கூட்டணிக்கு அவர்கள் I.N.D.I.A(Indian National Developmental Inclusive Alliance) என்று பெயர் வைத்து, 'நாட்டில் உள்ள அனைவரையும் உள்ளடக்கிய ஒரு நல்ல வளர்ச்சியை' அளிக்கப்போவதாக உறுதியளித்து அதன் மூலம், எதிர்வரும் தேர்தலில் தங்களுக்கு ஒரு சாதகமான சூழலை உருவாக்கியதையடுத்துத்தான், மோடி இந்தப் பெயர் மாற்றத்தை முன்னெடுத்துள்ளார் என்று குற்றம் சாட்டுகின்றனர். " 'B.H.A.R.A.T' என்பதைச் சுருக்கமாகக் கொண்ட ஒரு புதிய பெயரை நாங்கள் உருவாக்குவோம். அப்போது மோடியும் அவரது ஆலோசகர்களும் என்ன செய்கிறார் கள் என்று பார்ப்போம்" என்று ஒரு மூத்த காங்கிரஸ் தலைவர் கிண்டல் செய்துள்ளார்.

ஆனால், இந்தியா என்பதற்கு மாற்றாக, பாரத் என்ற பெயர் உள்நாட்டில் வெகு இயல்பாக வழங்கி வருகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், "இந்தியா, அதாவது பாரத்" என்றுதான் தொடங்குகிறது. தேசிய கீதத்திலும் இந்தியா என்ற பெயர் இல்லை, பாரத் தான் இருக்கிறது. பல தேச பக்திப் பாடல்கள் பாரத் என்றுதான் தேசத்தைக் குறிப்பிடுகின்றன. 'பாரத்' என்பது ஒரு சமஸ்கிருதப் பெயராக இருக்கலாம். ஆனால் 'பாரதம்' என்பது தமிழ், தெலுங்கு உள்ளிட்ட அனைத்துத் தென்னிந்திய மொழிகளிலும் வழங்கி வருகிறது.

பாஜக 'பாரத்' என்ற பெயர் மாற்றம் குறித்துத் தீவிரமாக இருந்தாலும், அது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்துதான் செய்யப்பட வேண்டும் என்றும், நாடாளுமன்ற இரு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள் பெற்று நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், மக்களவையில் தேவையான பலம் இருந்தாலும் மாநிலங்களவையில் போதிய பெரும்பான்மை இல்லாததால், இதைச் செயல்படுத்துவதில் சிரமம் ஏற்படும் என்று கூறி வருகிறார்கள். தவிர, தேச விடு தலையின்போதிருந்த தலைவர்கள், உலகில் பிரபலமாக அறியப்பட்ட பெயர் என்பதால், 'இந்தியா' என்ற பெயரைத் தொடர விரும்பினர். "ஒரு புதிய தொடர்பை ஏற்படுத்துவது கடினம் என்பதை மோடி உணர வேண் டும். அயல் நாட்டு முதலீட்டைக் கோரும் ஒரு புதிய திட்டத்தைப் பிரதமராக அவர் முன்னெடுத்த போது, அதற்கு 'மேக் இன் இந்தியா' என்று தான் பெயரிட்டார்" என்று "த எக்கனாமிஸ்ட்" எழுதியுள்ளது.

'மாற்றுவது கடினம்' என்ற வாதத்தை அர்த்தமற்றது என்று நான் முற்றிலும் புறந்தள்ளுகிறேன். இந்தியா என்றழைக்கப்பட்டதைவிட, அதிக காலம் நமது நாடு பாரத் என்றே அறியப்பட்டிருந்தது. விரைவிலேயே உலகம் 'பாரத்' என்ற பெயருக்குப் பழகிப்போய்விடும். இலங்கை என்பது முன்னர் சிலோனாகவும் மியான்மர் பர்மாவாகவும்தான் இருந்தன.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# எமது முன்னாள் ஜனாதிபதிகளின் அரசியல்



வீரகத்தி தனபாலசிங்கம்

றொடீசியா என்று முன்னர் அழைக்கப்பட்ட ஆபிரிக்க நாடான சிம்பாப்வேயில் சிறுபான்மை வெள்ளையரின் ஆட்சிக்கு எதிரான கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு தலைமை தாங்கியவர் றொபேர்ட் முகாபே.

வெள்ளையர் ஆட்சிக்கு முடிவுகட்டப்பட்ட பிறகு அவர் 1980 தொடக்கம் 1987 வரை அந்த நாட்டின் பிரதமராகவும் 1987 தொடக்கம் 2017 வரை ஜனாதிபதியாகவும் பதவிவகித்தார். மொத்தமாக 37 வருடங்கள் அவர் ஆட்சியதிகாரத்தில் இருந்தார்.

அதிகாரத்தில் இருந்து இறங்கவிரும்பாமல் நீண்டகாலமாக பதவியில் இருந்த முகாபேயிடம் ஒரு தடவை செய்தியாளர் ஒருவர், "நீங்கள் எப்போது சிம்பாப்வே மக்களுக்கு பிரியாவிடை கொடுக்கப்போகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு பதிலாக அவர், "ஏன் எனது நாட்டு மக்கள் வேறு எங்காவது போகப்போகிறார்களா?" என்று கிண்டலாக ஒரு கேள்வியைத்தான் கேட்டார்.

இன்னொரு தடவை வேறு ஒரு செய்தியாளர் முகாபேயிடம் "நீங்கள் எப்போது ஓய்வுபெறுவீர்கள்? உங்களுக்கு பிறகு பதவிக்கு வரப்போகிறவர் யார்? " என்று கேட்டார். அதற்கு அவர்,"எனக்கு ஓய்வுபெறும் நோக்கம் இல்லை. எனக்கு பிறகு பதவிக்கு வருவதற்கு எவரையும் நான் நியமிக்கப்போவதில்லை. நான் 100 வயது வரை வாழ்வேன்" என்று பதிலளித்தார். அப்போது அவருக்கு 92 வயது.

அந்த செய்தியாளர் தொடர்ந்தும் ஓய்வு குறித்து கேள்விகளைக் கேட்கவே முகாபே ஆத்திரமடைந்து "நான் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கிறேன் என்பதை உங்களுக்கு ஒரு குத்துவிட்டு நிலத்தில் வீழ்த்தித்தான் நிரூபித்துக்காட்டவேண்டும் என்று விரும்புகிறீர்களா ? என்று கேட்டார்.

சிம்பாப்வே மக்களுக்கு விடுதலை வேண்டிக்கொடுத்த முன்னாள் புரட்சிவாதி அதிகாரவெறி காரணமாக மிகவும் அவமானப்படுத்தப்பட்ட நிலையில் தான் பதவியில் இருந்து இறங்க வேண்டிவந்தது. முகாபேயின் கட்சியினரே அவருக்கு எதிராக சதி செய்து உப ஜனாதிபதியை பதவிக்கு கொண்டுவந்தார்கள். அல்லாவிட்டால் அவர் இறங்கியிருக்கவே மாட்டார். இறுதியில் 2019 செப்டெம்பரில் தனது 95 வயதில் முகாபே மரணமடைந்தார்.

இவரைப் போன்றே ஆபிரிக்காவில் வெள்ளையர் ஆட்சியில் இருந்து கறுப்பின மக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்த இன்னொரு வரலாற்று முக்கியத்துவம் கொண்ட போராட்டத்துக்கு தலைமை தாங்கிய ஒரு தலைவர் பதவி ஆசை கிஞ்சித்தும் இல்லாமல் அரசியல் ஞானியாக நடந்துகொண்ட காரணத்தால் உலகின் பெருமதிப்பைப் பெற்றார். அவர் தான் தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலா.

சிறுபான்மை வெள்ளையரின் இன ஒதுக்கல் ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாக 1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த மண்டேலா ஒரு ஐந்து வருடப் பதவிக்காலத்துக்கு பிறகு 1999 ஆம் ஆண்டில் பதவியில் இருந்து இறங்கி ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அடுத்த மட்டத் தலைவர்களுக்கு வழிவிட்டார். அவர் தொடர்ந்தும் ஜனாதிபதியாக பதவியில் இருக்கவேண்டும் என்று விரும்பியிருந்தால் எவரும் எதிர்த்திருக்க மாட்டார்கள்.

2004 ஆம் ஆண்டு அரசியலில் இருந்து முற்றாக ஓய்வுபெற்றுக்கொண்ட மண்டேலா 2013 டிசம்பரில் தனது 95 வயதில் மரணமடைந்தார்.

தங்களது மக்களுக்கு வெள்ளையர் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றுக்கொடுத்த இரு ஆபிரிக்கத் தலைவர்களில் ஒருவர் பதவிவெறி காரணமாக சொந்த மக்களினால் வெறுக்கப்பட்டு அபகீர்த்திக்குள்ளான அதேவேளை மற்றவர் பதவி ஆசையே இல்லாமல் இலட்சிய வாழ்க்கை வாழ்ந்தமைக்காக உலகில் எமது யுகத்தின் தலைசிறந்த அரசியல்ஞானிகளில் ஒருவராகப் போற்றப்படுவதைக் காண்கிறோம்.

இந்த கதைகளை இன்று கூறி ஒரு பீடிகையைப் போடுவது நாட்டின் உயர் பதவியை வகித்து பதவிக்காலம் முடிந்து வீட்டுக்கு போய்விட்ட பின்னரும் அரசியலைக் கைவிட மனமில்லாதவர்களைப் பற்றியும் மற்றும் அதிகாரத்தில் இருந்து மக்களால் விரட்டியடிக்கப்பட்டாலும் கூட மீண்டும் பதவிக்கு வருவதற்கு துடிக்கும் அரசியல்வாதிகளைப் பற்றியும் வெளியாகின்ற செய்திகள் மீது ஒரு பார்வையை செலுத்துவதற்கேயாகும்.

தற்போது இலங்கையில் நான்கு முன்னாள் ஜனாதிபதிகள் இருக்கிறார்கள். சந்திரிகா குமாரதுங்கவும் மகிந்த ராஜபக்சவும் இரு பதவிக்காலங்களுக்கு அதிகாரத்தில் இருந்தவர்கள். மைத்திரிபால சிறிசேன ஒரு பதவிக்காலத்துக்கு மாத்திரம் அதிகாரத்தில் இருந்த அதேவேளை கோட்டாபய ராஜபக்ச தனது பதவிக்காலத்தின் இடைநடுவில் கடந்த வருடம் மக்கள் கிளர்ச்சியை அடுத்து பதவியில் இருந்து விலகியவர்.இவர்களில் எவருமே அரசியலில் இருந்து ஓய்வுபெறத் தயாராயில்லை. வாழும் முறையால் வழிகாட்டவேண்டும் என்று நினைக்கக்கூடிய அளவுக்கு நயநாகரிகம் இல்லாதவர்கள்.

திருமதி குமாரதுங்கவைப் பொறுத்தவரை பதவியில் இருந்து இறங்கிய பின்னர் அவரது அரசியல் ஈடுபாடு என்பது பெருமளவுக்கு ராஜபக்சாக்களுக்கு எதிரான அணிதிரட்டல்களுக்கு உதவும் நோக்குடனேயே இருந்து வந்திருக்கிறது.

மகிந்தவுக்கு எதிராக இரு ஜனாதிபதி தேர்தல்களில் எதிரணியின் பொது வேட்பாளர்களை களமிறக்குவதில் திருமதி குமாரதுங்க முன்னின்று செயற்பட்டார். மற்றும் படி முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் அவ்வப்போது ஊடகங்களுக்கு நேர்காணல்களை வழங்குவது, அறிக்கைளை வெளியிடுவதுடன் அவரது செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே உள்ளன.

கடந்த நூற்றாண்டில் ஐக்கிய தேசிய கட்சியின் 17 வருடகால ஆட்சிக்கு பிறகு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவந்த பெருமைக்குரிய திருமதி குமாரதுங்க இந்த நூற்றாண்டின் முற்பகுதிவரை தங்களது குடும்பத்தின் தலைமைத்துவத்தில் இருந்த கட்சி இன்று சிறிசேனவின் தலைமைத்துவத்தில் மக்கள் செல்வாக்கை இழந்து நிற்பதை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. மீட்பு முயற்சி எதையும் முன்னெடுக்கக்கூடிய வல்லமை அவரிடம் இல்லை.

மகிந்தவைப் பொறுத்தவரை 2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற பிறகு சுதந்திர கட்சியை பண்டாரநாயக்க குடும்பக் கட்சி என்ற நிலையில் இருந்து ராஜபக்ச குடும்பக் கட்சியாக மாற்றினார். இரு பதவிக் காலங்களுக்கு ஜனாதிபதியாக இருந்த அவரினால் 2015 ஜனவரி ஜனாதிபதி தேர்தலில் சிறிசேனவிடம் தோல்விகண்ட பிறகு சுதந்திர கட்சியின் தலைமைத்துவத்தை தங்கள்வசம் வைத்திருக்க முடியாமல் போய்விட்டது. பிறகு ராஜபக்சாக்கள் தங்களுக்கென்றே சிறீலங்கா பொதுஜன பெரமுனவை தொடங்கி மீண்டும்









ஆட்சியையும் பிடித்தார்கள்.

ஆனால், ராஜபக்சாக்கள் கனவிலும் ஒருபோதும் நினைத்துப்பார்த்திருக்க முடியாதவகையில் கடந்த வருடம் மக்கள் கிளர்ச்சி அவர்களை அதிகாரத்தில் இருந்து விரட்டியது. ஆனால் மீண்டும் அதிகாரத்துக்கு வருவது குறித்து கனவுகண்டு கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் முன்னென்றும் இருந்திராத பல படு மோசமான தவறான அரசியல் மற்றும் ஆட்சிமுறைப் போக்குகளுக்கு வழிவகுத்தவராக விளங்கும் மகிந்த நாட்டின் உயர்பதவியை வகித்துவிட்டு சாதாரண ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதில் எந்த அளெகரியத்தையும் எதிர்நோக்கியதாக தெரியவில்லை.

2015 ஆகஸ்ட் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்தில் கூட்டு எதிரணியின் தலைவராக இருந்த அவர் 2020 பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தனது சகோதரரின் அரசாங்கத்தில் பிரதமராக பதவிக்கு வந்தார். அதற்கு பிறகு நடந்தவை எல்லாம் அண்மைக் கால வரலாறு.

இலங்கையின் அரசியல் வரலாற்றிலே மக்கள் கிளர்ச்சியின் விளைவாக பதவியில் இருந்து இறங்கிய அரசாங்கம் என்றால் அது ராஜபக்சாக்களின் அரசாங்கம்தான். 1953 ஆகஸ்ட் ஹர்த்தால் போராட்டம் பிரதமர் டட்லி சேனநாயக்கவின் அரசாங்கத்தை உலுக்கியது எனினும் அவர் உடனடியாகப் பதவி விலகவில்லை. இரு மாதங்கள் கழித்து அக்டோபர் மாதமே அவர் பதவி விலகினார்.

முன்னரும் இலங்கை அரசியல் குறிப்பிட்ட சில உயர் வர்க்கக் குடும்பங்களின் ஆதிக்கத்தில் இருந்திருக்கிறது என்றபோதிலும் ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராக வீதிகளில் இறங்கியதைப் போன்று அந்த குடும்பங்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழவில்லை. இத்தகைய வரலாற்று அவமதிப்புக்குள்ளான ஒரு குடும்பம் இன்னமும் கூட அரசாங்கத்தை பின்னணியில் இருந்து இயக்கக்கூடியதாக இருப்பது இலங்கை அரசியலின் ஒரு பெரிய முரண்நகையாகும்.

மகிந்தவைப் பின்பற்றி முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவும் கடந்த பொதுத்தேர்தலில் அதுவும் பொதுஜன பெரமுவுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு வந்தார். ஜனாதிபதியாக நாட்டை ஆட்சி செய்த இலட்சணத்தில் மீண்டும் ஜனாதிபதியாவதற்கான தனது விருப்பத்தை அவர் இடைக்கிடை வெளியிடுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

இரு முன்னாள் ஜனாதிபதிகள் இலங்கை பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். சந்திரிகா குமாரதுங்க மாத்திரம் அவ்வாறு செய்யவில்லை.

அடுத்து கோட்டாபய ராஜபக்ச மீண்டும் அரசியலுக்கு வருவது குறித்து வெளிப்படையாக எதையும் பேசாவிட்டாலும், அவரைப் பயன்படுத்தி தங்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கை தேடிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் சில சக்திகள் செயலில் இறங்கியிருக்கின்றன.

உலகின் வேறு எந்த நாட்டிலும் மக்கள் கிளர்ச்சியை அடுத்து வெளியேறிய எந்தவொரு தலைவரும் கோட்டாபய போன்று விரைவாக நாடு திரும்பக்கூடியதாக இருந்ததில்லை. வெளிநாடுகளில் தஞ்சமடைவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்காத நிலையில் அவருக்கு இப்போது இலங்கையைத் தவிர பாதுகாப்பான நாடு இல்லை என்ற நிலை.

கோட்டாபய பதவி விலகிய பின்னர் அவரை மீண்டும் அரசியலுக்கு இழுப்பதற்கு விசுவாசிகள் பல தடவைகள் விருப்பத்தை வெளிப்படுத்திவந்தனர். கடந்த வருடம் ஆகஸ்டில் தாய்லாந்தில் தங்கியிருந்த வேளையில் கூட அவரை பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் மூலமாக பாராளுமன்றத்துக்கு கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்டதாகவும் அதற்கு வசதியாக தனது பதவியை துறக்க அந்த கட்சியின் பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தயாராக இருந்ததாகவும் செய்திகள் வெளியாகின.

பிறகு ஒரு கட்டத்தில் கோட்டாபயவை பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்து பிரதமராக்கவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றக் குழுவில் செல்வாக்கு மிக்க ஒரு பிரிவினர் முயற்சிப்பதாகவும் கூறப்பட்டது.

ஆனால் இப்போது ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்காரவின் சகோதரர் ஹேமகுமார நாணயக்கார வசமிருந்த மௌபிம (தாய்நாடு ) ஜனதா கட்சியை கோட்டாபயவின் நெருங்கிய சகாவும் பல ஊடக நிறுவனங்களின் உரிமையாளருமான திலித் ஜயவீர பொறுப்பேற்றிருப்பதாகவும் அதற்கு அவர் தனது ஆசீர்வாதத்தையும் ஆதரவையும் வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கடந்த வாரம் செய்திகள் வெளியாகின.

மக்கள் கிளர்ச்சிக்கு வழிவகுத்த ஆட்சிமுறைத் தோல்விக்கு கோட்டாபய மாத்திரமே காரணம் என்று கூறி அவரை தனிமைப்படுத்த பொதுஜன பெரமுன முயற்சிக்கும் ஒரு நேரத்தில் -- அதுவும் அடுத்த வருடத்தைய ஜனாதிபதி தேர்தல் குறித்து பேசப்படும் நிலையில் அவர் தனது சகாவின் கட்சியை ஆதரிக்கக்கூடும் என்ற பேச்சுக்கள் கிளம்பியிருக்கின்றன.

எது எவ்வாறிருந்தாலும், அவருக்கு அரசியலில் ஒரு இடத்தை தேடிப்பிடிப்பித்து கொடுப்பதற்கு விசுவாசிகள் இயன்றவரை முயற்சிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. வெளிநாட்டுக்கு செல்லாமல் இலங்கையில் தொடர்ந்து வசிப்பதற்கு அவர் முடிவெடுத்தால் அவருக்கு எதிர்காலத்தில் ' சிறப்புரிமைகளுடன்' வாழ்வதற்கு குறைந்தபட்சம் பாராளுமன்றத்தில் ஒரு ஆசனமாவது

(14ம் பக்கம் பார்க்க)

# ராஜபக்ஷக்களுக்கு பாவமன்னிப்பு வழங்க கர்தினால் மல்கம் ரஞ்சித் விரும்புவது ஏன்?

**பனங்காட்டான்**

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 54வது அமர்வு கடந்த 12ம் திகதி ஆரம்பமானபோது எதிர்பார்க்கப்பட்டவாறு ஓர் அறிக்கையுடன் எல்லாம் சப்பென்று போனதே கசப்பான உண்மை.

46:1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது பெரும் நம்பிக்கை கொடுக்கப்பட்டது. 51:1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது பொறுப்புக்கூறல், சர்வதேச நீதிப் பொறிமுறை, போர்க்கால ஆவணங்களைத் திரட்டி ஆவணப்படுத்துவதற்கான தனி அலுவலகம் ஒன்று அமைக்கப்படுவது என்று பல முன்னெடுப்புகள் காட்டப்பட்டன.

இந்த மாதம் ஆரம்பமான 54ம் அமர்வில் பொறுப்புக்கூறலுடன் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவது கோரப்பட்டது. ஆனால் சர்வதேச நீதிப்பொறிமுறை என்பது காணாமல் போய்விட்டது.

முன்னைய அமர்வுகளின் போது ஏட்டிக்குப் போட்டியாக ஜெனிவா சென்ற தமிழ் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் எவரும் இம்முறை செல்லவில்லை. சிலவேளை அமர்வின் இறுதி நாட்களான அக்டோபர் இரண்டாவது வாரத்தில் செல்வார்களோ தெரியாது. இலங்கை அரசாங்கமும் தங்கள் குழுவினரையோ அல்லது வெளிவிவகார அமைச்சரையோ அங்கு அனுப்பவில்லை. இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியான சுபாசினி அருணதிலக மட்டும் சகலதையும் கையாள அனுமதிக்கப்பட்டார்.

ஜெனிவா கோரும் பொறுப்புக்கூறலை இலங்கை அரசு முழுமையாக நிராகரிக்கிறது என்ற ஒற்றை வரியுடன் அனைத்தையும் தூக்கி வீசிவிட்டார். பொறுப்புக்கூறலை ஜெனிவா கூறுவது சந்தேகத்துக்குரிய ஒரு விடயமாகத் தெரிவதாகவும் இவர் சுட்டிக்காட்டினார். முன்னைய இரு தீர்மானங்களையும் இலங்கை முழுமையாக நிராகரிப்பதாகவும், ஜெனிவாவின் எழுத்து மூல அறிக்கைகளையும் பரிந்துரைகளையும்கூட இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் இவர் அழுத்திக் கூறினார்.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் 51வது அமர்வின் போது பிரித்தானியா தலைமையில் அமெரிக்கா உட்பட ஏழு நாடுகளின் அனுசரணையில் 51:1 தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது. 193 அங்கத்துவ நாடுகளில் 37 இதற்கு அனுசரணை வழங்கின. உலகின் ஐந்து பிராந்தியங்களின் வழியான நாற்பத்தேழு நாடுகளுக்கு மட்டுமே வாக்குரிமை உண்டு.

51:1 வாக்கெடுப்பில் 47 நாடுகளில் 20 நாடுகள் தீர்மானத்தை ஆதாரித்தன. 7 நாடுகள் மட்டும் எதிர்த்து வாக்களித்தன. வாக்களிப்பில் பங்குபற்றிய 27ல் 20 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்ததால் 13 மேலதிக வாக்குகளால் தீர்மானம் நிறைவேறியது. வாக்களிப்பில் பங்குபற்றாத 20 நாடுகளையும் எந்தத் தரப்புக்கும் சேர்த்துக் கொள்ள முடியாது.

ஆனால், 47 நாடுகளில் 20 மட்டுமே தீர்மானத்தை ஆதரித்தன என்றும், மிகுதி 27 நாடுகளும் இதனை ஆதரிக்கவில்லை என்றும் இலங்கை அரசு கள்ளக்கணக்கு காட்டியது. அதனையே சரியான கணக்கென வலியுறுத்தும் வகையில், 'தீர்மானங்களில் தெரிவிக்கப்பட்ட உள்ளடக்கங்களை ஏற்றுக்கொள்ளாத பல நாடுகள் இதனை எதிர்த்தன அல்லது வாக்களிப்பைத் தவிர்த்தன" என்று சுபாசினி அருணதிலக தமது உரையில் சுட்டியது இலங்கையின் படுகேவலமான அரசியல் போக்கை வெளிப்படுத்தியது.

அக்டோபர் 13ம் திகதி முடிவடையும் ஜெனிவா அமர்வில் புதிதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும் சாத்தியம் காணப்படவில்லை. இனிவரும் காலங்களில் மனித உரிமை ஆணையாளர்கள் வாய்ப்பாடு வாசிப்பது போன்று இலங்கை பற்றிக் குறிப்பிடுவதுடன் ஷமுற்றும்; என்றாகி விடுமா அல்லது திசைமாறி நடவடிக்கைகள் செல்லுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

13ம் திருத்தத்தை முழுமையாக அமுல் செய்யவேண்டும், விரைவாக மாகாணசபைத் தேர்தல்களை நடத்த வேண்டுமென இந்தியாவின் பிரதிநிதி மறவாமல் எடுத்துக் கூறுவதற்காகவாவது ஜெனிவா அமர்வு பயன்படுவது சிலவேளை ஏமாந்திருப்பவர்களுக்கு திருப்தியைக் கொடுக்கலாம்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக சனல் - 4 வெளியிட்ட ஆவணம் ஜெனிவா காலத்தில் வெளியிடப்பட்டதால் போலும், 54வது அமர்வு பெருமளவு முக்கியத்துவம் பெறாமல் போய்விட்டது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். சனல் -4 தான் இப்போது சூடு பிடித்துள்ள பேச்சுக்களம். ஒவ்வொரு அரசியல்வாதியும் தங்கள் பங்குக்கு எதனையும் கூறலாம் என்றாகிவிட்டது.

முள்ளிவாய்க்கால் பேரினஅழிப்பை வெளிக்கொணர்ந்த சனல் - 4 ஆவணம் வெளியானபோது, அதற்கு சர்வதேச விசாரணை வேண்டுமென தமிழர் தரப்பிலிருந்தே பெருங்குரல்கள் வந்தன. ஜெனிவாவும்கூட இதனை முன்னிலைப்படுத்தியே சர்வதேச நீதிவிசாரணைப் பொறிமுறையை கோரியது. அப்போது சிங்களத் தரப்பிலிருந்து இதற்குக் கடும் எதிர்ப்பு வந்தது.

அன்று, அதனை எதிர்த்தவர்கள் இன்று ஈஸ்டர் தாக்குதல் சனல் - 4 ஆவணத்துக்கு சர்வதேச விசாரணை கேட்கின்றனர். தமிழினப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை நீதிப்பொறிமுறையை 46:1 ஜெனிவா தீர்மானம் கோரியபோது அதற்கு இணைஅனுசரணை வழங்கிய நல்லாட்சி அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் அதனை மறுதலித்து நிராகரித்துவிட்டார். இதன் பெயர்தான் நீதி, இதுதான் சட்ட முறைமை என்றவாறு கதை அளக்கப்படுகிறது.



**2010இல் மல்கம் றஞ்சித்தின் ஏற்பாட்டில் இத்தாலிக்குச் சென்ற மகிந்த ராஜபக்ஷ இலங்கைக்கு ஒரு கர்தினால் வேண்டுமென கேட்டுக் கொண்டதால் மல்கம் றஞ்சித் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். 2019இல் பாப்பரசர் பிரான்சிஸ் இலங்கைக்கு விஜயம் செய்தபோது பதவியிழந்திருந்த மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்கு கர்தினால் மல்கம் றஞ்சித்தே காரணமாகவிருந்தார். அவ்வேளை மகிந்த முன்னிலையில் பொதுப்பணிக்கென பாப்பரசரிடம் அவரால் கையளிக்கப்பட்ட சுமார் 9 மில்லியன் ரூபாவை பாப்பரசர் ஏற்க மறுத்ததன் காரணம் என்ன?**

ஈஸ்டர் தாக்குதலுக்கு நம்பகமான வெளியார் பங்களிப்புடன் விசாரணை தேவையென பலரும் கேட்க, இரண்டு விசாரணைக் குழுக்களை நியமிக்கப் போவதாக ரணில் தெரிவித்தார். அதன்படி ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் இரண்டு உறுப்பினர்களையும் இணைத்து ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார். அடுத்து, நாடாளுமன்ற தெரிவுக்குழுவும் அமைக்கப்படுமென்று தெரிவித்துள்ளார்.

ஒரு விவகாரத்துக்கு சமவேளையில் இரண்டு விசாரணைக் குழுக்கள் என்பது ரணிலின் சமயோசித யுக்தி. இரண்டு குழுக்களும் தனித்தனியாக விசாரித்து கண்டுபிடிப்பவைகளும், பரிந்துரைப்பவைகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவும், ஏறுக்கு மாறாகவுமே அமையும். இதனை எதிர்பார்த்தே இரண்டு குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

கோதபாய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது ஈஸ்டர் தாக்குதலை விசாரிக்கவென நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றினை வைத்தார். அதன் அறிக்கையும் அவரிடம் கையளிக்கப்பட்டது. அதற்கு என்னானது? ஏன் வெளியிடப்படவில்லை? எதற்காக அந்த அறிக்கையை தேடி எடுத்து பகிரங்கப்படுத்த ரணில் விரும்பவில்லை?

அந்த அறிக்கையை வெளியிடுமாறு தொடர்ச்சியாக கர்தினால் மல்கம் றஞ்சித் கேட்டு வந்தார். அரசியலில் பிரச்சனைக்குரியவரான விமல் வீரவன்சவும் அதனைக் கேட்கிறார். அதுபற்றித் தமக்கு எதுவுமே தெரியாதது போல் மௌனம் சாதிப்பதே ரணிலின் பதில். மாறாக, ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையிலான ஆணைக்குழுவை நியமித்துவிட்டு வெளிநாடு பறந்துவிட்டார்.

இந்த விவகாரத்தில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயம் கர்தினால் மல்கம் றஞ்சித்தின் இரட்டை நிலைப்பாடு. தொடர்ச்சியாக சர்வதேச விசாரணையையும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்தி வந்த இவர், சனல் - 4 வெளியானதன் பின்னர் தமது சுருதியைக் கீழிறக்கி நிலைப்பாட்டை மாற்றிவிட்டார். சம்பந்தப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டால் அவர்களை மன்னிக்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார். இந்தத் திடீர் மனமாற்றம் எவ்வாறு வந்தது?

ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தப்பட்ட விடயங்களில் மைத்திரியும் ரணிலும் சம்பந்தப்பட்டிருப்பதாகவே அவர் எண்ணியிருந்ததாகவும், அவர்களை சட்டத்தின் பிடிக்குள் தள்ளிவிடவே உரிய நடவடிக்கைகளை அவர் கேட்டு வந்ததாகவும், ஆனால் குற்றச்சாட்டில் ராஜபக்ச குடும்பம் இருப்பதால் அவர்களைக் காப்பாற்ற அவர் முனைவதாகவும் உயர்மட்ட அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. இதனை நிரூபிக்கும் வகையில் ராஜபக்ச - மல்கம் றஞ்சித் சம்பந்தப்பட்ட சில விவகாரங்கள் பகிரங்கமானவை.

16ம் ஆசீர்வாதப்பர் பாப்பரசராக இருந்தபோது முதலாவது சம்பவம் இடம்பெற்றது. மல்கம் றஞ்சித் அவர்களின் சிபார்சில் மகிந்த ராஜபக்ச 16ம் ஆசீர்வாதிப்பரை இத்தாலியில் சந்திக்க ஏற்பாடானது. இச்சந்திப்பின் போது பாப்பரசர் என்ன கேட்பார், மகிந்த என்ன கேட்க வேண்டும் என்பவை பற்றி மல்கம் றஞ்சித்துக்கும் மகிந்தவுக்கும் இடையே ஒத்திகை இடம்பெற்றது.

2010ம் ஆண்டு பாப்பரசர் பிரான்சிஸ் பதவியேற்ற பின்னரே மகிந்தவின் இத்தாலிய பயணம் இடம்பெற்றது. பாப்பரசருடனான மரியாதைச் சந்திப்பின் பின்னர், இலங்கைக்கு என்ன செய்யலாம் என்று பாப்பரசர் வினவியபோது, 'எங்களுக்கு (இலங்கைக்கு) ஒரு கர்தினால் நியமிக்கப்பட வேண்டும்" என்று மல்கம் றஞ்சித் அவர்கள் சொல்லிக் கொடுத்ததையே மகிந்த கூறினாராம். அடுத்த ஆறு மாதத்தில் மல்கம் றஞ்சித் கர்தினாலாக நியமிக்கப்பட்டார். ஒரு நாடகம் திட்டமிட்டவாறு வெற்றிகரமாக நிறைவேறியது.

2015 தேர்தலில் மகிந்த தோல்வியடைய மைத்திரி ஜனாதிபதியானார். 2019ல் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை சென்ற பாப்பரசர் பிரான்சிஸ் அரசியல் தலைவர்களில் ஜனாதிபதியான மைத்திரியை மட்டும் சந்திப்பதாக இருந்தது. ஆனால், கர்தினால் மல்கம் றஞ்சித்தின் விருப்பத்தின்பேரில் மகிந்தவையும் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது மகிந்தவின் முன்னிலையில் சுமார் ஒன்பது மில்லியன் ரூபாக்களுக்கான காசோலை ஒன்றை பாப்பரசரிடம் கர்தினால் மல்கம் றஞ்சித் கையளித்தார். இலங்கை ஆயர் சபையினால் பொதுப்பணிக்கென சேகரிக்கப்பட்ட நிதி அதுவென பாப்பரசரிடம் கூறப்பட்டது. ஆனால் பாப்பரசர் அந்தக் காசோலையை கர்தினாலிடம் திருப்பிக் கையளித்து, உங்கள் வறிய நாட்டுக்கு இதனைப் பயன்படுத்துங்கள் என்று கூறிவிட்டார்.

அந்த ஒன்பது மில்லியன் ரூபாக்களும் இரத்தக்கறை படிந்த இடத்திலிருந்து வந்தவை என்பதை பாப்பரசர் தெரிந்து கொண்டதால் அதனை ஏற்க மறுத்தார் என்பது கர்தினாலுக்கு தெரியவந்தது. இந்தச் சம்பவமானது ராஜபக்சக்களுக்கும் கர்தினாலுக்குமிடையிலான நெருங்கிய உறவை ரோமுக்குத் தெரியக்கொடுத்தது.

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம் தான் நெருங்கிப் பழகும் ராஜபக்சக்களை பாதிக்க வைக்குமென்று கர்தினால் பதற்றமடைகிறார். அதனால்தான் குற்றத்தை ஒப்புக் கொள்பவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்கத் தயாராகியுள்ளார். ஆனால், ரணில் விக்கிரமசிங்க தமது காலுக்குள் வசமாக வந்துள்ள பந்தை எவ்வாறு அடிக்கப் போகிறார் என்பதை எவராலும் கற்பனை பண்ண முடியாது.

**அடிக்குறிப்பு: ரணில் விக்கிரமசிங்கவின் தந்தையார் எஸ்மன்ட் விக்கிரமசிங்கவின் கூடப்பிறந்த சகோதரரே குருநாகல் பிஷப் ஆகவிருந்த பேராயர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க. 1983 ஜூலையில் தமிழினப் படுகொலை இடம்பெற்ற வேளையில் அதனைக் கண்டித்து அறிக்கைகள் விடுத்த பேராயர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க அடுத்த சில மாதங்களில் மாரடைப்பால் காலமானார்.**

# சனல் 4

# ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்குதலை மடைமாற்றுகின்றதா?

யதீந்திரா

சனல் 4 தொலைகாட்சியின் காணொலி இலங்கை அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின் றது. அந்தக் காணொலியின் இலக்கு என்ன, என்பதற்கான பதில் அந்தக் காணொலியிலேயே இருக்கின்றது. பிள் ளையானின் பேச்சாளராக இருந்தவரான ஆசாத் மௌலானா என்பவரால் கூறப் படும் விடயங்கள்தான், குறித்த காணொலியின் பிரதான விடயமாகும். அவரது கூற்றின்படி, இந்தக் தாக்குத லானது, ராஜபக்ச குடும்பத்தை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு சதி நடவடிக்கையாகும். இதில் பிள்ளையானும் தொடர்புபட்டிருக்கின்றார். பிள்ளையானுடன் இருந்த ஒருவர் என்னும் வகையில் பிள்ளையானுடன் தொடர்புடுத்தியே, மௌலானா விடயங்களை கூறுகின்றார். அப்படிக் கூறும் போதுதான் தனது பேச்சு எடுபடுமென்றும் அவர் கருதியிருக்கலாம்.

காணொலியின் இலக்கு மிகவும் தெளிவானது. அதாவது, ராஜபக்சக்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவது. இந்த ஒரு நோக்கத்தின் அடிப்படையில்தான் குறித்த காணொலி வெளியிடப்பட்டிருக்கின்றது. ராஜபக்சக்களின் செல்வாக்கு ஏற்கனவே சரிவுநிலையில்தான் இருக்கின்றது. பின்னர் எதற்காக ராஜபக்சக்கள் இலக்கு வைக்கப்பட வேண்டும்? கோட்டபாய ராஜபக்சவோ அல்லது ராஜபக்ச குடும்பத்தை சேர்ந்தவர்கள் எவருமே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பும் இல்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கும் போது, இந்தக் காணொளிக்கு பின்னால் இரண்டு நோக்கங்கள் இருக்கலாம்.

ஒன்று, ராஜபக்சக்கள் மற்றும் ராஜபக்சக்களின் நிழலிலிருந்த கடும்போக்குவாதிகள் எழுச்சியடைவதற்கான வாய்ப்புக்களை தடுப்பது. அண்மைக்காலமாக அவ்வாறானதொரு தோற்றம் தென்பட்டது. இரண்டு, இவ்வாறான தடைகளையும் மீறி, ஒரு வேளை, ராஜபக்சக்கள் எழுச்சியடைந்தாலும் கூட, அவர்களை இறுக்குவதற்கான ஒரு துருப்புச் சீட்டாக ஈஸ்டர் தாக்குதலை பயன்படுத்துவது. ஏனெனில், இதில் இலங்கையர்கள் மட்டும் கொல்லப்படவில்லை. ஐரோப்பியர்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஐந்து அமெரிக்கர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். எனவே குறித்த காணொலி க்கு உடனடி இலக்குமுண்டு அதே வேளை, நீண்டகால இலக்கும் உண்டு. ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டிருக்கும் நிலையில், அது தொடர்பில் தலையீடு செய்வதற்கான நியாயபூர்வமான உரிமை ஐரோப்பிய ஊடகம் ஒற்றிற்குண்டு. அந்த வகையில் சனல் 4 இதில் தலையீடு செய்திருப்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்று எண்ணுவதும் நியாயமானதுதான்.

ஆனால் ஒரு சாதாரண நபரது வாக்குமூலத்தை மட்டும் முன்வைத்து, இவ்வாறானதொரு காணொலியை வெளியிட்டிருப்பதுதான் சிக்கலானது. தவிர, இந்தக் காணொளி தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டுகொள்ளவில்லை. இது ஓர் இஸ்லாமிய பயங்கரவாதத் தாக்குதல். இந்தக் தாக்குதல் இடம்பெற்று, இரு தினங்களின் பின்னர், எல்லைதாண்டிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.எஸ்.ஐ, இந்தக் தாக்குதலுக்கு உரிமைகோரியிருந்தது. அதன் உத்தியோகபூர்வ செய்தி அமைப்பான அமாக், (Amaq News Agency) இதனை உறுதிப்படுத்தியதுடன், தாக்குதலில் ஈடுபட்ட தற்கொலை குண்டுதாரிகளை, அமைப்பின் போராளிகளென்றும் அறிவித்திருந்தது. அதே வேளை, ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப் பின் வாராந்த வெளியீடான அல் நபா, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் மூலம், சிலுவை யுத்தக்காரர்களுக்கான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் அச்சுறுத்தல் நிறைவேற்றப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருந்தது.

இந்தக் தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்தே, ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல் பாக்தாதி சில வருடங்களுக்கு பின்னர் தனது இருப்பை வெளிப்படுத்தியிருந்தார். சுமார் ஐந்து வருடங்களுக்கு பின்னர் பாக்தாதியின் முகம் ஊடகங்களில் காண்பிக்கப்பட்டது. ஐ.எஸ்.ஐ.எஸ், அமெரிக்காவினால் பலவீனப்படுத்தப்பட்டுவிட்டது, அதன் சர்வதேச வலையமைப்புகள் முற்றிலுமாக, வீழ்சியுற்றுவிட்டது என்னும் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில்தான், இலங்கையில் இந்தக் தாக்குதல் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்தே அல் பாக்தாதி உற்சாகமாக தனது இருப்பை வெளிப்படுத்துகின்றார். அமெரிக்காவின் முன்னணி ஆய்வு நிறுவனமான ராண்ட் அப்போது, பாக்தாதி வெளியிட்ட காணொளியின் பொருள் என்ன என்னும் தலைப்பில் கட்டுரையொன்றை வெளியிட்டிருந்தது. அந்தக் கட்டுரையில் இந்த விடயங்கள் விவாதிக்கப்பட்டிருந்தன.

இலங்கையில், இவ்வாறானதொரு



தாக்குதல் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் தொடர்பில் ஏற்கனவே இந்திய உளவுத்துறை, இலங்கை புலனாய்வு பிரிவை எச்சரித்திருந்தது. ஆனால் அதன் பின்னரும் இந்தக் தாக்குதல் இடம்பெற்றிருந்தது. அப்போது, இலங்கையின் முப்படைகளின் தலைவராக இருந்தவர் மைத்திரிபால சிறிசேன. அவ்வாறாயின் இது தொடர்பான முதல் குற்றவாளிவாக மைத்திரிபால சிறிசேனவைத்தான் குறிப்பிட வேண்டும். இந்த அடிப்படையில் ஏற்கனவே மைத்திரியால நீதிமன்றத்தினால் குற்றவாளியாகவும் இனம் காணப்பட்டிருக்கின்றார்.

இந்தக் தாக்குதலில் ஐந்து அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதன் பின்னணியில், இந்த விடயம் தொடர்பில் அமெரிக்க உள்ளக உளவுத்துறையான எப்.பி.ஐ விசாரணைகளை முன்னெடுத்திருந்தது. இரண்டு வருட விசாரணைகளின் விளைவாக 2020 டிசம்பர் மாதம் 11ம் திகதி, லொஸ்ஏஞ்சல் மாவட்ட நீதிமன்றத்தில் இது தொடர்பில் வழக்கொன்றையும் தாக்கல் செய்திருந்தது. இந்தக் தாக்குதலின் மூளையாக செயற்பட்டவர் மற்றும் தாக்குதலுக்கான உதவிகளை செய்தவர்கள் என்னுமடிப்படையில் மூன்று முஸ்லிம் நபர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டது.




நிலைமை இவ்வாறிருக்கின்ற போது, மூன்று வருடங்களின் பின்னர், ஆசாத் மௌலான என்னும் ஒரு நபரின் வாக்குமூலத்தை முன்வைத்து, ஈஸ்டர் தின தற்கொலைக் தாக்குதலானது, உள்ளூர் அரசியலுக்காக மேற்கொள்ளப்பட்டதாக சனல் 4 ஒரு புதிய கதையை கூற முற்படுகின்றது. விடயங்களில் இலங்கை புலனாய்வுத் துறை கவனக் குறைவாக இருந்திருக்கின்றது என்னும் குற்றச்சாட்டை முன்வைக்கலாம். ஆனால் எல்லைதாண்டிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.எஸ்.ஐ அமைப்பின், தொடர்பை முற்றிலும் நிராகரிக்கும் வகையில், இவ்வாறானதொரு காணொளியை வெளியிட்டிருப்பது, சனல் 4 இதற்கு முன்னர் வெளியிட்ட காணொளிகள் தொடர்பான நம்பகத் தன்மையையும் கேள்விக்குள்ளாக்கின்றது.

கோட்டபாய ராஜபக்சவை அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்காக பிள்ளையானின் உதவியுடன், தற்கொலை குண்டுதாரிகள் பயிற்றுவிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது தர்க்கரீதியில் நம்பக் கூடிய கதையாக இல்லை. ஆசாத் மௌலானா என்னும் நபர் தனது சொந்த தேவைகளுக்காக அல்லது வேறு எவருடைய தேவைகளுக்காகவோ, சில விடயங்களை வலிந்து புனைவதான தோற்றமே தெரிகின்றது. கோட்டபாய ராஜபக்ச முஸ்லிம்கள் தொடர்பில் ஆதரவான நிலைப்பாட் டைக் கொண்டவரல்லர். இது முஸ்லிம் களுக்கும் தெரிந்த விடயம். இந்த நிலையில் கோட்டபாயவின் தேவைக் காக, பிள்ளையானின் ஆதரவுடன், முஸ்லிம் இளைஞர் யுவதிகள் வெடித்து சிதறியிருக்கின்றார்கள் என்பது விடயத்தின் கனதியை மலீனப்படுத்து வதாகவே இருக்கின்றது. பிள்ளையா னால் முஸ்லிம்களை தற்கொலை குண்டுதாரிகளாக்க முடியுமா?

கோட்டபாய மற்றும் பிள்ளையான் தொடர்பில் அரசியல்ரீதீயில் பலவாறான அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஜனநாயக தளத்தில் அதனை வெளிப்படுத்துவதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. அது வேறு விடயம். கோட்டபாய ராஜபக்ச தமிழ் மக்களை பொறுத்தவரையில் முற்றிலும் எதிர்மாறானதொரு சிங்கள அரசியல் வாதி. தன்னையொரு சிங்கள பௌத்த தலைவன் என்று பிரகடனம் செய்த ஒருவர். இப்படியான பல்வேறு சிக்கல்கள் கோட்டபாயவின் பக்கத்திலுண்டு. அடிப்படையில், கோட்டபாய போன்ற ஒருவர் ஆட்சிக்கு தகுதியான ஒருவருமல்ல. கோட்டபாய தொடர்பில் இந்த அடிப்படையில் ஒருவர் விவாதித்தால் அதில் முரண்பட ஒன்றுமில்லை. ஆனால் ஒரு எல்லைதாண்டிய பயங்கரவாதத் தாக்குதலை வெறும் உள்ளூர் விவகாரமாக சுருக்குவது ஆபத்தானது. இது மீண்டும், இஸ்லாமிய அடிப்படைவாத சிந்தனைகள் எழுச்சிகொள்வதற்கான களத்தை இலகுபடுத்தவே பயன்படும்.

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னரே, கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமிய அடிப்படைவாத கருத்தியல் வேர்கொண்டுவருவது தொடர்பில், பல்வேறு தகவல்கள், ஆங்காங்கே வெளியாகியிருந்தன. அதே வேளை, ஐ.எஸ்.ஐ.எஸ் கருத்தியலால் ஈர்க்கப்படும் போக்கும் துளிர்விடுவதான அவதானத்தையும் சிலர் வெளியிட்டிருக்கின்றனர். இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம்கள், சிரியாவிற்கு சென்று, ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் இணைந்து செயற்படுவது தொடர்பான தகவல்களும் வெளியாகியிருந்தன. இவ்வாறானவர்கள் இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் வலமைப்பின் மூலமாகவே, சிரியாவிற்கு சென்றிருப்பதாகவும் ஏற்கனவே இந்திய புலனாய்வு தகவல்கள் உண்டு.

ஆசாத் மௌலான என்னும் நபரும் இந்தியாவிற்கு சென்று, அங்கிருந்தே ஐரோப்பாவில் தஞ்சமடைந்திருக்கின்றார். இவர் எவ்வாறான தொடர்புகளின் வழியாக சென்றார், இவர் எதற்காக இவ்வாறான தகவல்களை வெளியிட்டார். ஆசாத் மௌலானாவின் தகவல்களின் அடிப்படையில் இந்த விடயத்தை வேறுவிதமாக விசாரிக்க வேண்டிய அவசியமுண்டு. அதாவது, எல்லை தாண்டிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் உறுப்பினர்கள், தங்களின் இலக்கிற்காக, உள்ளூர் அரசியல்வாதிகளை பயன்படுத்தியிருக்கின்றனரா? இந்தக் கோணத்தில் விசாரணை செய்வதற்கான தேவையுண்டு. குறித்த மௌலானாதான் இதற்கான பிரதான சாட்சியாகும். ஏனெனில் அவர் வெளிப்படுத்தியிருக்கும் தகவல்களின் அடிப்படையில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் இலங்கைக்கான தொடர்பாளராக அவர் செயற்பட்டிருக்கின்றார் என்னும் முடிவுக்கே வரவேண்டியிருக்கின்றது. ஐரோப்பிய புலனாய்வுத் துறைகள், விடயத்தை, இந்தப் பின்புலத்தில் விசாரிக்க முற்பட்டால்தான், இதன் உண்மைத் தன்மை வெளியில்வரும்.

# இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரிகள்: ஆரோக்கியமான கலந்துரையாடல்களின் அவசியம்

கந்தையா அருந்தவபாலன்



இலங்கையின் உயர்கல்வித்துறையை மேம்படுத்துவதற்கான உத்திகளில் ஒன்றாக வெளிநாட்டுத்தனியார் பல்கலைக் கழகங்களை உள்நாட்டில் நிறுவுவது தொடர்பான ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின் முன்மொழிவுகளைத் தொடர்ந்து சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இலங்கையில் மூன்று தனியார் மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்கான ஆரம்பகட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அண்மையில் தெரிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து இவ்விடயம் இன்னொரு முக்கிய விவாதப் பொருளாக இன்று மாறியிருப்பதுடன் வழமை போலவே மருத்துவத் துறைசார்ந்தோரிடமிருந்தும் பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்தும் இதற்கு எதிர்ப்புகள் கிளம்பத் தொடங்கிவிட்டன. அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சார்பில் அவர்களின் சங்கத்தின் செயலர் வைத்தியர் ஹரித அளுத்கே அரசாங்கத்தின் இந்த முன்னெடுப்புக்குத் தமது கண்டனங்களைத் தெரிவித்திருப்பதுடன் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் தங்களது எதிர்ப்பையும் எச்சரிக்கையையும் தெரிவித்துள்ளது. ஏலவே இலங்கையில் 2013 ஆம் ஆண்டில் அனுமதியளிக்கப்பட்டு இயங்கி வந்த தனியார் மருத்துவக் கல்லூரியான 'SAITM' (South Asian Institute of Technology and Medicine) இவர்களின் வலுவான எதிர்ப்புகளாலும் போராட்டங்களாலும் 2017 இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது நினைவிருக்கலாம். அது போன்றதொரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு இத்தரப்புகள் முயற்சி எடுக்கும் என எதிர் பார்க்கப்படும் அதேவேளை இந்த முன்னெடுப்பை முன்னரைப்போல அரசாங்கம் கைவிடுமா என்பதும் கேள்விக்குறியாக உள்ளது. ஏனெனில் இலங்கையில் இன்று இடம்பெற்று வரும் தனியார் மயமாக்கலும் வெளிநாட்டு முதலீடுகளும் அரசாங்கத்தின் கைக்குள் மட்டும் அடங்காது வெளிநாட்டு உதவிகளுடனும் பின்னிப் பிணைந்த ஒன்றாக மாறிவிட்டமை ஒன்று. மற்றது இன்றைய உலகப் பொருளாதார ஒழுங்கு பெரும்பாலான நாடுகளில் இவ்வாறானதொரு கோலத்தை வேகமாக ஏற்படுத்தி வருவது. இவற்றுக்கு மேலாக இதனை எதிர்க்கும் தரப்புகளுக்கு பொதுமக்களின்ஆதரவு முன்னரைப் போல கிடைக்குமா என்ற ஐயமும் காணப்படுகிறது. இந்நிலையில் இலங்கையில் தனியார் மருத்துவக்கல்லூரிகளின் அவசியம், அதற்கெதிராக முன்வைக்கப்படும் வாதங்களின் வலிதுடைமை, அதனால் தோன்றக்கூடிய பாதிப்புகளைத் தடுப்பதற்கான வழிவகைகள், தேவையான கட்டமைப்புகளின் உருவாக்கம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் இடம்பெறுவது அவசியமாகின்றன.

முதலில் எழும் கேள்வி இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் அவசியம் தானா? அவசியம் என்பது அதானால் அடையக்கூடிய நன்மைகளுடனும் தொடர்பு பட்டது. வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் சுகாதார, வைத்தியத் துறை மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்தாலும் தெற்காசிய நாடுகளில் அது முன்னிலையில் இருந்து வருகிறது. இத்துறையில் நாடு தற்போது அடைந்துள்ள தரத்தை தக்க வைப்பதுடன் மேலும் அத்தரத்தை மேம்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் எழக்கூடிய அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் வைத்தியர்கள் மற்றும் வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். 10000 பேருக்கான சராசரி வைத்தியர் எண்ணிக்கை இலங்கையில் 1.2 ஆகும். இது மிக உயர்வாக கட்டாரில் 77 வைத்தியர்களாக இருக்கும் போது ஐரோப்பிய நாடுகளில் சராசரி 50 தொடக்கம் 60 வைத்தியர்களாக உள்ளனர். உண்மையில் இலங்கையின் 1.2 என்ற இக்குறிகாட்டி கிட்டத்தட்ட உலக சராசரியை ஒத்ததாக கீழ்மட்டத்திலுள்ளது. இலங்கையில் தற்போது சுமார் 20000 வைத்தியர்களும் 2800 வைத்தியநிபுணர்களும் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் ஆண்டுதோறும் சுமார் 1500 பேர் உள்நாட்டு வைத்திய பீடங்களிலிருந்தும் சுமார் 350 பேர் வெளிநாடுகளில் படித்தவர்களாகவும் வைத்தியத் துறையில் இணைகின்றனர். எனினும் இவ்வெண்ணிக்கை போதுமானதன்று. இதேவேளை ஆண்டுதோறும் கணிசமான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். வழமையாக இடம்பெறும் வைத்தியர்களின் வெளியேற்றத்துக்கு மாறாக இன்றைய நாட்டு நிலைமைகள் காரணமாக வெளியேறும் வைத்தியர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டிலிருந்து மிக வேகமாக உயர்வடைந்து வருகிறது. 2022 இல் 700 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியறியுள்ளதுடன் இவ்வாண்டு இதுவரை 500 க்கு மேற்பட்டவர்கள் வெளியேறி விட்டதாகக் கூறப்படுகிறது. இந்நிலை தொடர்வதற்கான வாய்ப்புகளே அதிகம் காணப்படுகிறது. இதனால் எதிர்காலத்தில் எழக்கூடிய மோசமான பற்றாக்குறையை தற்போதுள்ள 12 மருத்துவ பீடங்களால் நிவர்த்தி செய்ய முடியுமா? மாணவர் எண்ணிக்கையைக் கூட்டவும், புதிய பீடங்களை உருவாக்கவும், அவற்றின் தரத்தை உறுதிப் படுத்தவும் இன்றைய நிலையில் அரசாங்கத்திற்குச் எவ்வளவுக்குச் சாத்தியமா கும்? ஏலவே சில மருத்துவபீடங்களைச் சேரந்த மாணவர்கள் தமக்கான வளக்குறைபாட்டினை சுட்டிக்காட்டி போராட்டங்களில் இறங்கியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று நாடுகளின் உற்பத்தி என்பது உள்நாட்டுச் சந்தையை மட்டும் அடிப்படையாக கொண்டிருப்பதில்லை. அதைவிட வெளிநாட்டுச் சந்தைகளையும் குறிவைத்தே அதுமேற்கொள்ளப்படுகிறது. இது பண்டங்களுக்கு மட்டுமன்றி பணிகளுக்கும் பொருந்தும். இந்த வகையில் எமது நாட்டின் தேவைக்கு மேலாக வெளிநாடுகளுக்கும் வழங்கக் கூடியவகையில் வைத்தியர்களை உருவாக்குவதற்கு தனியார் மருத்துவக் கல்லூரிகள் பங்களிக்கலாமல்லவா? இன்று உலக நாடுகளுக்கு மிகச் சிறந்த தாதியர்களை வழங்கும் ஒரு நாடாக பிலிப்பைன்ஸ் இருக்கிறது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? மேலும் வைத்தியர் எண்ணிக்கை உள்நாட்டில் அதிகரிக்கும் போது பணியிலுள்ள வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குத் தற்போதுள்ள கட்டுப்பாடுகள்கூடத் தளர்த்தப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும். அது வைத்தியர்களுக்கு மட்டுமல்ல நாட்டுக்கும் நன்மையைத்தரும்.

> **ஏழைகளுக்காக எதிர்ப்பதாகக் கூறும் வைத்தியர்களில் எத்தனை பேர் ஏழைகளுக்கு வெளியில் இலவசமாக அல்லது மிகக் குறைந்த கட்டணத்தில் சேவை செய்கின்றனர்?**

தான் விரும்பும் கல்வித் துறையைத் தெரிவு செய்வதற்கான உரிமை தகைமையுள்ள ஒவ்வொரு மாணவர்க்கும் உள்ளது. அதேபோல தமது பிள்ளைகளைகளுக்கான கல்வி எதுவென தீர்மானிப்பதற்கு பெற்றோருக்கும் உரிமையுண்டு. எமது கல்வி முறை மற்றும் பல்கலைக்கழகத் தெரிவு முறைபோன்றவற்றால் மருத்துவக் கல்விக்கான தகைமையும் விருப்பமும் உடைய மாணவர்கள் பலர் தவிர்க்க முடியாத வகையில் வேறு துறைகளுக்கு செல்லவேண்டியுள்ளது. உயர்ந்த பெறு பேறுகளைப்பெற்றிருந்தும் வெட்டுப்புள்ளிக்குக் கீழ் புள்ளி பூச்சியம் ஒன்று அல்லது இரண்டு குறைந்த எத்தனை மாணவர்களதும் அவர்தம் பெற்றோர்களதும் ஆசைகள் நிராசைகளாக்கப்பட்ட்டுள்ளன. அப்படியானவர்கள் வேறு தடத்தினூடாக தமது விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை வழங்குவது தானே பொருத்தப்பாடாக அமையும். அது மட்டுமன்றி ஏனைய துறைகளில் தனியார் உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி அளித்துவிட்டு மருத்துவத் துறைக்கு மட்டும் தடை விதிப்பது அத்துறையைச் சேரந்தவர்களுக்குச் செய்யும் அநீதியாகவே அமையும்.

உள்நாட்டில் தனியார் மருத்துவக்கல்லூரிகள் உருவாக்கப்படும் போது தற்போது மருத்துவக்கல்விக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களால் செலவழிக்கப்படும் நாட்டின் செலாவணி மீதப்படுத்தப் படுவதுடன் வெளிநாட்டு மாணவர்களை அக்கல்லூரிகளில் உள்வாங்குவதன் மூலம் (அக்கல்லூரிகளில் மட்டுமல்ல மருத்துவ பீடங்களிலும் கூட) வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டவும் வாய்ப்பேற்படும். இன்று உலக நாடுகள் பலவற்றின் வெளிநாட்டு வருமானத்தில் கல்வி ஏற்றுமதி என்பது முக்கிய இடத்தைப் பெற்று வருவது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. மேலும் இதன்மூலம் வெளிநாட்டு முதலீடுகள் மட்டுமன்றி முன்னேறிய நுட்பமுறைகள், தரமேம்பாடு போற்றவற்றையும் நாடு பெறமுடியும். தனியார் மருத்துவக்கல்லூரிகளுடன் இணைந்த வகையில் தரமான தனியார் வைத்தியசாலைகளும் உருவாகுவதற்கும் வாய்ப்பேற்படும். இவற்றுக்கு மேலாக இத்துறையில் ஆரோக்கியமான போட்டி நிலவுவது விலை, தரம் என்பவற்றில் மாணவர்க்கும் நோயாளிகளுக்கும் நன்மையாக அமையும்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் உட்பட மருத்துவத் துறையுடன் தொடர்புடைய சிலதரப்புகள் தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான காரணங்கள் என்ன? ஒன்று தகைமையற்றவர்கள் அல்லது குறைந்தவர்கள் இதன்மூலம் வைத்தியராக வருவதற்கான வாய்ப்பு இருப்பதால் பொது மக்கள் பாதிப்படைவர். மற்றது ஏழை மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். அதாவது வசதியுள்ள வகுப்பினர்க்கு சாதகமாக அமைவதால் இலவசக்கல்வியின் நோக்கம் கேள்விக்குறியாகும். இன்னொன்று தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கற்பதற்கு பொருத்தமான சிகிச்சைக்கூடங்கள் மற்றும் விரிவுரையாளர்கள் இன்மையால் அவர்கள் வைத்தியருக்கான திறன்களைப் பெறமாட்டார்கள் என்பது. அடுத்தது தனியார் மருத்துவக் கல்லூரிகளை வளர்ப்பதற்காக அரசாங்கம் தனது மருத்துவ பீடங்களை நலிவடைய விடக்கூடும் என்பது. இவர்கள் முன்வைக்கும் இவ்வாறான வாதங்களை உண்மையற்றவை என முற்றாக நிராகரிக்க முடியாது. ஆயினும் தர்க்க ரீதியாக ஆராய்வோமானால் அவற்றிலுள்ள பலவீனங்களை விளங்கிக் கொள்ளமுடியும். ஏனெனில் அவர்களால் முன்வைக்கப்படும் வாதங்கள் வெறும் கருதுகோள்கள் மட்டுமே. அவை ஆய்வு முடிவுகளன்று. அவர்கள் கூறுவது போல நிகழ்வதற்கான வாய்ப்புகள் இருந்தாலுங் கூட அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கையாள வேண்டுமே அன்றி தடைபோடுவது அறிவுபூர்வமானதன்று. முள்ளுதொண்டையில் சிக்குமென்பதற்காக யாரும் மீன் சாப்பிடாமல் விடுவதில்லை.

தகைமை அற்றவர்கள் அல்லது குறைந்தவர்கள் என்ற குற்றச்சாட்டு எவ்வளவு தூரம் சரியானது? அடிப்படையான தவறே க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறை மட்டுமே வைத்தியத்துறைக்கான தகுதியாகக் கருதப்படுவது. எமது நாட்டின் பரீட்சை முறையே குறைபாடு கொண்டது. அதுபெருமளவுக்கு மனனம் செய்யும் மற்றும் நினைவில் வைத்திருக்கும் மாணவர்களுக்குச் சார்பானது. இந்தத் தகுதி மட்டும் ஒருவர் வைத்தியராவதற்குப் போதுமானதா? வளர்ந்த பல நாடுகளில் வைத்தியத்துறைக்கான மாணவனைத் தெரிவு செய்வதற்கு இவ்வாறான கல்வித் தகைமையுடன் மனப்பாங்கு உட்பட வேறு பல திறன்களும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஆனால் இங்கு எழுத்துப் பரீட்சை ஒன்றை மட்டுமே தகைமையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதுவே சரியெனக் கொண்டாலும் இங்கு உண்மையில் அத்தகைமையைக் கொண்டு தெரிவு இடம்பெறுவதில்லை. பதிலாக மருத்துவபீடங்களின் கொள்ளளவே தகைமையை வரையறுக்கிறது. அதாவது குறித்த ஆண்டில் உள்வாங்கக் கூடிய மாணவர் எண்ணிக்கையே மாணவனின் தகுதியைத் தீர்மானிக்கிறது. இவ்வடிப்படையில் வைத்தியத் துறைக்குத் தெரிவு செய்யப்படும் மாணவன் பெற்ற புள்ளியிலும் பூச்சியம் ஒன்று அல்லது இரண்டு குறைந்தவன் பல்லுக்கும் மேலும் ஒன்றிரண்டு குறைந்தவன் மாட்டுக்கும் வைத்தியம் பார்க்கத்தான் தகுதியுள்ளவன் எனத் தீர்மானிப்பது எவ்வளவு தூரம் பொருத்தமானது? இதற்கு மேலாக இங்கு இந்த அணுகுமுறையில்கூட முழுமையாகத் திறமை அடிப்படையில் தெரிவுகள் இடம் பெறுவதில்லையே. மாவட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் மாணவனின் பெறுபேறு இன்னொரு மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட மாணவனொருவனின் பெறுபேற்றை விட மிகக் குறைவாக இருக்கிறதே. அதை நியாயமென ஏற்றுக் கொள்வோர் அதைவிடத் தகுதி கூடிய ஒருவர் மருத்துவராகும் வாய்ப்பைப் பறிப்பது அநியாயம் என்பதை ஏன் உணர மறுக்கின்றனர்? இதற்கும் மேலாக இவ்வாறு நிராகரிக்கப்பட்டவர்கள் வேறு நாடுகளில் கல்வி கற்று இங்கு வந்து அதற்கான தேர்வெழுதி பணிபுரியமுடியுமென்றால் அதே கல்வியை அவர்கள் இங்கு பெறுவதற்கான வாய்ப்பை ஏன் எதிர்க்க வேண்டும்?

தனியார் மருத்துவக் கல்லூரிகள் வறிய மாணவர்களைப் பாதிக்குமா? அல்லது இலவசக் கல்விக்கு ஆப்பு வைக்குமா? தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிக்கப் டுவதால் தற்போது உள்வாங்கப்படும் முறைகளில் எந்த மாற்றமும் நிகழ்வதற்கு வாய்ப்பில்லத போது எவ்வாறு வறிய மாணவர்கள் பாதிக்கப்படுவர்? ஏனைய துறைகளில் உள்ள தனியார் உயர்கலவி நிறுவனங்களால் தற்போது நிகழாத பாதிப்பு எவ்வாறு மருத்துவத்துறையில்

(14ஆம் பக்கம் பார்க்க)

# உலக மக்களில் பாதி பேருக்கும் மேல் உடற்பருமனுள்ளவர்கள்!



2035ல் உலக மக்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் அதிக உடல் எடையு டையவர்களாக இருப்பார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. அரசுகள் உரிய நடவடிக்கைகளை எடுக்கா விட்டால் இதனால் பெருமளவில் ஆரோக்கியப் பிரச்சனைகள் ஏற்படும் என்று ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். ஏற்கனவே உலக மக்கட்தொகையில் 38 வீதம் அதாவது 2.6 பில்லியன் மக்கள் உடற்பருமன் உடையவர்களாக உள்ளனர். இன்றுள்ள நிலை தொடர்ந் தால் வரும் 12 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 4 பில்லியனாக உயரும். உலக மக்களில் 51 வீதம் அதிக உடல் எடை யால் பாதிக்கப்பட்டு அவதிப்படுவர்.

உடல் நலத்திற்கு கேடு தரும் கொழுப்பு, எண்ணெய், உப்பு மற்றும் ரசாயனப் பொருட்கள் அதிகமுள்ள, சத்துகள் குறைந்த உணவுகள் மீது கூடுதல் வரிகளை விதிப்பது, உற்பத்தி மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்து வது, போதுமான விழிப்புணர்வு போன்ற நடவடிக்கைகளை உலக அரசாங்கங்கள் உடனடியாக எடுக்காவிட்டால் இன்று ஏழு பேரில் ஒருவர் என்ற நிலை மாறி, 2035ல் நால்வரில் ஒருவர் உடற்பருமன் உள்ளவர்களாக மாறி விடுவார்கள் என்று இந்த ஆய்வுகளை நடத்திய உலக உடற் பருமன் அறக்கட்டளை அமைப்பு கூறு கிறது.

இவ்வாறு நிகழ்ந்தால் உலக மக்களில் 2 பில்லியன் பேர் நிரந்தர உடற்பருமனு டையவர்களாக மாறி விடுவார்கள் என்று ஆய்வறிக்கை எச்சரிக்கிறது. உடற்பரு மன் அளவு 25க்கும் கூடுதலாக இருப்ப வர்கள் அதிக உடல் எடையுடையவர் கள். இது 30 அல்லது அதற்கும் அதிக மாக இருந்தால் அவர்கள் உடற்பருமனு டன் இருப்பவர்கள் என்று உலக சுகாதார நிறுவனம் வரையறை செய்துள்ளது.

இது புற்றுநோய், இதய நோய்கள், மற்ற நோய்கள் ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கிறது.

வயது வந்தவர்களை விட குழந்தை கள் மற்றும் விடலைப் பருவத்தினரிடம் இந்த பாதிப்பு அதிகம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்று ஆய்வு கூறுகிறது.

இந்த அளவு 2020ல் இருந்ததை விட 2035ல் இரண்டு மடங்காக அதிகரிக்கும். 18 வயதுக்குள் இருக்கும் சிறுவர்களி டையில் உடற்பருமன் 100 வீதம் அதி கரித்து 218 மில்லியன் சிறுவர்கள் பாதிக்கப்படுவர். இதே வயதில் இருக் கும் சிறுமிகளிடையில் 125 வீத உயர்வு ஏற்பட்டு, 2035ல் 175 மில்லியன் சிறுமிகள் அதிக உடல் எடையால் பாதிக்கப்படுவர்.

**நோயாளிகளின் உலகமாகும் பூமி**

இப்பிரச்சனையை இன்று சரிசெய்யா விட்டால் நாளை இது உலகைப் பாதிக் கும் மிகப்பெரும் சவாலாக மாறிவிடும். இதனால் உடற்பருமன் மூலம் ஏற்படும் உடல் மற்றும் மனநலப் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட மனிதர்கள் வாழும் இட மாக பூமி மாறிவிடும் என்று அறக்கட்ட ளையின் தலைவர் பேராசிரியர் லூயிஸ் போர் (Prof Louise Baur) கூறுகிறார். இளம் தலைமுறையினரிடம் இது பெரும் சமூக பொருளாதாரச் சுமைகளை ஏற்படுத்தும்.

**தீர்வுகள்**

இந்த சவாலை எதிர்கொள்ள உலக ஆட்சியாளர்கள் வரி விதிப்பு முறைகளில் மாற்றம், கொழுப்பு, சர்க்கரை, உப்பு, சுவையூட்டும் வேதிப்பொருட்கள் போன்றவை அடங்கிய உடல் நலத்திற்கு தீங்கு செய்யும் உணவு வகை களின் சந்தைப்படுத்துதலில் கட்டுப்பாடு கள், கவர்ச்சிகரமான விளம்பரங்கள் செய் யப்படுவதைத் தடுத்தல், கண்கவர் பொட்டலமிடுதல் முறையை மாற்றுதல் மற்றும் பள்ளிகளில் சத்துள்ள சுகா தாரமான உணவு வழங்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்ற நட வடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று ஆய்வறிக்கை வலியு றுத்துகிறது.

ஏழை நாடுகளே இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றன. பாதிக்கப்பட் டுள்ள இவற்றில் பத்தில் ஒன்பதும் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உடைய ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா வில் உள்ளன. நைஜர், பாப்புவா நியூ கினி, சோமாலியா, நைஜீரியா மற்றும் மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு ஆகிய நாடுகள் இப்பிரச்சனையை சந்திக்க எந்த நடவடிக்கையும் எடுக்காத நாடுகள் வரிசையில் முன்னணியில் உள்ளன.

**தயார் நிலையில் இருப்பது யார்?**

சாதாரண மக்களுக்குப் போதுமான அளவில் சத்துள்ள உணவுகள் கிடைக்கா ததும் இதற்கு முக்கிய காரணம். இதை சமாளிக்க எந்த முயற்சியும் செய்யாமல் இருக்கும் ஏழை நாடுகளே இதனால் வருங்காலத்தில் மோசமான எதிர் விளைவுகளை எதிர்கொள்ளும் என்று அறக்கட்டளையின் அறிவியல் பிரிவு இயக்குனர் ரேய்ச்சல் ஜாக்சன் லீச் எச்சரிக்கிறார். ஆய்வுகள் நடத்தப்பட்ட 183 நாடுகளில் சுவிட்சர்லாந்து, நார்வே, பின்லாந்து, ஐஸ்லாந்து, ஸ்வீடன், யு கே உட்பட பத்து நாடுகள் இதை சமாளிக்க தயார்நிலையில் உள்ளன.

மக்கள் மற்றும் ஆட்சியாளர்கள் இணைந்து செயல்பட்டால் மட்டுமே இதற்கு நல்லதொரு தீர்வு ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

---



# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**சபா. கதிர், குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர் பில் புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இங்கு இரண்டு வழிகளில் விசாரணைகள் இடம்பெறவுள்ளன என்றும் அந்த விசாரணைகள் சுயா தீனமாக இடம்பெற அனைத்துத்தரப்பினரும் ஒத்து ழைப்பார்கள் என்று நம்புகின்றேன் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளாரே?

**வியுக்தியார்:** அவர் கூறியிருப்பதை நானும் படித் தேன். புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக் கள் என்று அவர் சொல்லியிருப்பது சனல் 4 வெளி யிட்ட காணொளியில் கூறப்பட்டுள்ளவை தான் என்பது தெரிந்ததே. அதாவது பிள்ளையானின் உதவியாளர் அளித்துள்ள குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தொடர் பானது அது. அதாவது இந்த தாக்குதலை ராஜபக்சக்கள் மீண்டும் தேர்தலில் வெற்றிபெறுவதற் காக பிள்ளையானின் உதவியுடன் சிறிலங்காவின் தற்போதைய தேசிய உளவு அமைப்பின் இயக்குனர் திட்டமிட்டு நடாத்தினார் என்பது அந்த புதிய குற்றச்சாட்டு. ஆனால் பிள்ளையான் இப்போதும் ராஜாங்க அமைச்சராக தொடர்கிறார். புலனாய்வு இயக்குநரும் அதே பதவியில் தொடர்கிறார் என்றால் அந்த குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நம்பவில்லை என்பதுதானே. பிறகு விசாரணை என்பது எதற்கு என்பது தெரியவில்லை.

**எஸ் பீற்றர்போல், இரண்டாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை யான முருகன் உள்ளிட்ட நால்வரை இலங்கைக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில், உரிய பயண ஆவணங்கள் கிடைத்தவு டன் நால்வரும் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் எனவும் மத்திய அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளதே. இனியும் ஏதாவது தாமதம் ஏற்பட சந்தர்ப்பம் இருக்கின்றதா?

**வியுக்தியார்:** அவர்கள் இனி இலங்கையர்கள் என்பதற்கான பயண ஆவணங்களுக்காக காத்திருப்ப தாக மத்திய அரசு உயர்நீதிமன்றத்தில் தெரிவித்திருப் பதில் இருந்து ஒரு விடயம் தெரிகிறது. அதாவது சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் அவர்களுக்கு நாடு திரும்புவதற்கான கடவுச்சீட்டை வழங்கினால் அவர்களை தாயகத்திற்கு அனுப்புவதற்கு இந்தியா தயாராக இருக்கின்றது என்பதே அதன் அர்த்தம். இனி அவர்கள் தாயகம் திரும்புவதற்கு இலங்கையின் கருணையே தேவைப்படுகின்றது.

**சி. ராஜேஸ்வரன், கோயில் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் உண்மையில் என்ன நடந்தது என்பதை சனல் 4 காணொலி மூலம் எவ ரும் புரிந்து கொள்ள முடியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளாரே. அவர் எத னைச் சொல்ல வருகிறார் என்பது உங்களுக்கு புரிகின்றதா?

**வியுக்தியார்:** அவருக்கு என்ன புரிந்தது என்பது தெரியவில்லை. ஆனால் அவர் எப்போதும் தான் முதல் சொன்னவற்றை இலகுவில் மறந்துவிடுவார் என்பது மாத்திரம் இந்த வியுக்தியாருக்கு நன்கு தெரியும். ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஒரு தடவை பாராளுமன்றில் பேசிய மைத்திரி, தனது பதவிக்காலத்தில் ராணுவ உளவுத்துறை யின் இயக்குனராக இருந்த திறமையான அதிகாரியை அந்தப் பதவியில் தொடர அப்போதைய பிரதமர் ரணில் விடவில்லை என்றும் அவர் அந்தப் பதவியில் இருந்தி ருந்தால் தாக்குதலையே தடுத்திருக்கலாம் என்றும் பேசியதை அவர் மறந்துவிட்டார் என்று நினைக்கின் றேன். இப்போது அந்த அதிகாரிதான் ராஜபக்சக்கள் வெற்றிபெறுவதற்காக தாக்குதலுக்கு திட்டமிட்டதாக சனல் 4 சொல்கின்றபோது அது சரி என்கிறார். அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது அவருக்கே புரி கிறதோ தெரியவில்லை. பிறகு எனக்கு எப்படி புரியப் போகின்றது?

**கே. கணேஷ், பிரதான வீதி, ஹட்டன்.**

**கேள்வி:** சம்பந்தன் புலிகளுடன் கைகோர்த்திருந்தார், போர் முடிவடைந்தவுடன் அவரை சிறையில் அடைத்திருக்க வேண்டும், ஆனால் மகிந்த ராஜபக்ஷ அவ்வாறு செய்யவில்லை - என்று பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினரான காமினி லொக்குகே தெரிவித்துள்ளாரே. ஒரு மூத்த தமிழ் தலைவரை இப்படி அவர் கேவலப்படுத்துவதை அனுமதிக்கமுடியுமா?

**வியுக்தியார்:** அனுமதிக்க முடியாதுதான். முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தத்தில் உயிர்தப்பி படையினரிடம் சரணடைந்த சுமார் மூன்றுலட்சத்திற்கும் அதிகமான அகதிகளில், ஒருநாள் புலிகளுடன் பணியாற்றியவர்களையும் கூட கைதுசெய்து புனர்வாழ்வளித்த பின்னரே விடுதலை செய்திருந்தனர். அவர்களில் பலர் தமது விருப்பத்துடன் பணியாற்றியவர்களும் அல்ல. ஆனால் அப்போது அதனை சம்பந்தன் கண்டிக்கவும் இல்லை. அவர்களைக் கண்டுகொள்ளவும் இல்லை என்பதுதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது. அதற்காக காமினி லொக்குகேயின் கருத்தை ஆதரிப்பதாக நினைத்துவிடாதீர்கள்.

# பேரழிவின் கோரப்பிடியில் லிபியா:

## "நிதி ஒதுக்கியும் அணைகளை சரிசெய்யாத அரசே பேரிடருக்கு காரணம்"

ஒரு நகரமே அழிந்து கிடக்கிறது. எங்கு பார்த்தாலும் இடிபாடுகள். வீதிகளில் சேறும் சகதியும் நிரம்பி வழிகிறது. மருத்துவமனைகளில் சடலங்கள் நிரம்பி வழிகின்றன. அங்குள்ள மக்களின் முகங்களில் கவலை தோய்ந்துள்ளது.

பேரழிவுக்குத் தள்ளப்பட்ட லிபியாவில் அழுகுரல் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

கிழக்கு லிபியாவில் ஏற்பட்ட சுனாமியை போன்ற பயங்கர வெள்ளத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 18,000 முதல் 20,000 பேர் வரை இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.



கடலில் இருந்து உடல்கள் தொடர்ந்து மீட்கப்பட்ட வண்ணம் உள்ளன. இந்தப் பெரும் வெள்ளத்தால் காணாமல் போன ஆயிரக்கணக்கான மக்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

நள்ளிரவில் டேர்னா அருகே அணை இடிந்து விழும் சத்தம் கேட்டதை செங்கல் தொழிற்சாலை தொழிலாளியான வாலி எடின் முகமது நினைவு கூர்ந்தார்.

"நாங்கள் அதிகாலை 3:00, 3:30 மணியளவில் எழுந்தோம். ஒரு பெரிய இடிச்சத்தம் கேட்டுத்தான் கண் விழித்தோம். டேர்னாவில் இருந்த அனைவருமே அதைக் கேட்டிருப்பார்கள்," என்று அவர் ராட்டர்ஸ் முகமையிடம் கூறியுள்ளார்.

"வெள்ளம் நம்ப முடியாத அளவுக்குப் பெரிதாக இருந்தது. நாங்கள் வெளியே சென்றபோது அங்கு நகரமே இல்லை. தரைமட்டமாகி இருந்தது," என்று அவர் கூறினார்.

### சுனாமி போன்ற வெள்ளம் ஏற்பட்டது எப்படி?

கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று (செப்டம்பர் 10) கிழக்கு லிபியாவில் உள்ள டேர்னா நகரை டேனியல் புயல் தாக்கியது. இரவில் கனமழை கொட்டியது.

லிபியாவின் கிழக்கு மலைப்பகுதியில் இருந்து நகருக்குள் ஓடும் வாதி டேர்னா ஆறு டேர்னா நகர் வழியாகச் சென்று கடலில் கலக்கிறது.

இது பெரும்பாலும் வறண்ட நிலையிலேயே காணப்படும். ஆனால், வரலாறு காணாத மழையால் இந்த ஆற்றில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் டேர்னா நகரத்தில் இருந்து 12 கி.மீ தொலைவில் மேல் பகுதியில் அமைந்திருந்த அணை முதலில் உடைந்தது.

அதன் நீரை இரண்டாவது அணையை நோக்கித் திருப்பியதாக நீர் பொறியியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். மேல் அணையின் கொள்ளளவு 53 மில்லியன் கன அடி. ஆனால், கீழ் அணை, 795 மில்லியன் கன அடி கொள்ளளவு உடையது.

மேல் அணையில் இருந்து தண்ணீர் திருப்பி விடப்பட்டாலும் முறையான பராமரிப்பு இல்லாததால் இரு அணைகளும் உடைய நேர்ந்ததாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இரண்டு அணைகளும் உடைந்து தண்ணீர் கணிக்க முடியாத வேகத்தில் நகருக்குள் சுனாமியைப் போல் சீறிப் பாய்ந்தது.

சுனாமியை போன்ற அந்தப் பெரும் வெள்ளத்தில், நகரம் முழுவதுமாக கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டது. அணை உடைந்ததை அறியாமல் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த பல்லாயிரக்கணக்கானோர் நீரில் மூழ்கினர்.



**பேரழிவின் கோரப்பிடியில் லிபியா**

"நான் ஆறு பேரை இழந்துவிட்டேன். மூன்று பேரின் உடல்கள் கிடைத்துவிட்டன. மீதி 3 பேரைக் காணவில்லை. இன்னும் தேடிக் கொண்டிருக்கிறேன்," என்று இந்தப் பேரழிவால் பாதிக்கப்பட்ட உள்ளூர்வாசி ஒருவர் கூறினார்.

இது மிகப் பெரியதொரு பேரழிவு, உயிரிழந்த அனைவர் மீதும் இறைவன் இரக்கம் காட்டட்டும் என்று பாதிக்கப்பட்ட மக்களிடையே பணியாற்றிக் கொண்டிருந்த ஒரு மருத்துவ ஊழியர் வேதனையுடன் கூறினார்.

"இந்தப் பேரழிவில் நம்மால் ஒன்றுமே செய்ய முடியாது. எங்கள் குடும்பம், எங்கள் சகோதரர்கள், உயிரிழப்புகள் மிக மிக அதிகம்," என்று அவர் அழுதுகொண்டே கூறினார்.

டேர்னாவின் வீதிகளில் கட்டட இடிபாடுகளும் உடல்களும் மட்டுமே எஞ்சியுள்ளதாக, அப்பகுதியைச் சேர்ந்த புகைப்பட செய்தியாளரான தாஹா முஃப்தா தெரிவித்தார்.



பேரழிவின் கோரப்பிடியில் சிக்கியுள்ள லிபியாவுக்கு எகிப்து, துருக்கி உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளும் உதவிக்கரம் நீட்டியுள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தண்ணீர், உணவு என அத்தியாவசிய பொருட்களைத் தாண்டி உடல்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கான பைகளைக் கேட்டு அழைப்பு வருவதாக தன்னார்வலர்கள் கூறுகின்றனர்.

அத்தகைய பைகளை வைத்திருந்த அப்துல் அசீஸ் என்ற தன்னார்வலர், அந்தப் பைகள் 100 குடும்பங்களுக்கு உதவும் என்று தான் நினைப்பதாகக் கூறினார். "இதை நாங்கள் விநியோகித்து விடுவோம். எதற்குமே இல்லை என நாங்கள் கூறுவதில்லை. மக்கள் எதைக் கேட்டாலும் வழங்க முயல்கிறோம்," என்று அவர் கூறுகிறார்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் பெரிய குழி தோண்டப்பட்டு அடக்கம் செய்யப்படுகின்றன. தற்போது ஏற்பட்டுள்ள இந்தப் பாதிப்பால் நகரம் முழுக்கப் பரவியிருக்கும் சுகாதாரமற்ற நீரிலிருந்து தொற்றுநோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக ஐ.நா கவலை தெரிவித்துள்ளது.

### முன்பே எச்சரிக்கப்பட்டதா?

ஐ.நா.வின் சர்வதேச வானிலை அமைப்பு லிபியாவில் வானிலை முன்னறிவிப்பு சேவையை இயல்பாக இயக்கியிருந்தால், பல உயிரிழப்புகளைத் தவிர்த்திருக்கலாம் என்று கூறுகிறது. அதேவேளையில், டேனியல் புயலின் வீரியம் குறித்த தகவல்களைத் தாங்கள் ஏற்கெனவே



வழங்கியதாகவும் லிபிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

லிபியாவின் தேசிய வானிலை ஆய்வு மையம் இந்த வாரத் தொடக்கத்தில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. வெள்ளம் ஏற்படுவதற்கு 72 மணிநேரத்திற்கு முன்பு மழைப்பொழிவு குறித்து அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கையின் அடிப்படையில் கிழக்கு பிராந்தியங்களில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல உதவிப் பணியாளர்கள் டேர்னாவிற்கு வரத் தொடங்கியுள்ளனர். ஆனால், அவர்கள் தேடல் மற்றும் மீட்புப் பணியைவிட, இறந்தவர்களின் உடல்களை மீட்பதே அவர்களின் முன்னுரிமையாக இருக்கிறது.

இந்தப் பேரழிவில் பிழைத்தவர்கள், தங்கள் அன்புக்குரியவர்களின் உடல்களை இன்னமும் தேடி வருகின்றனர். சடலங்கள் தொடர்ந்து கடலுக்குள் இருந்து கரையில் ஒதுங்கிக்கொண்டே இருக்கின்றன.

கடற்கரையானது ஆடைகள், பொம்மைகள் மற்றும் பொருட்களால் மூடப்பட்டுள்ளது. இவையனைத்தும் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட வீடுகளில் இருந்து சிதறியவை.

ஏற்கெனவே எச்சரிக்கப்பட்டிருந்தும் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இரண்டு அணைகளில் விரிசல் ஏற்பட்டால், அது உடைந்து விழப் போகிறது என்பது ஏன் மக்களுக்கு எச்சரிக்கப்படவில்லை என்பது குறித்துக் கேள்விகள் கேட்கப்படுகின்றன.

லிபியாவை சேர்ந்த அரசியல்வாதி ஒருவர் பேசிய



போது, நாட்டின் இந்தக் கொடிய பேரழிவு நடக்க "அனைத்துமே" காரணம் என்று கூறினார்.

லிபிய கல்வியாளரும் தக்பீர் கட்சியின் தலைவருமான குமா எல்-காமதி, "அரசின் தோல்வி, பலவீனமான வழிமுறைகள், பலவீனமான அரசுகள், பலவீனமான நிறுவனங்கள் என எல்லாமே இதற்குக் காரணம்," என்று அவர் விமர்சித்தார்.

கடந்த 12 முதல் 13 ஆண்டுகளில், 'அந்த அணைகளை சரிசெய்ய நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒதுக்கப்பட்ட நிதி செல்லவேண்டிய இடத்திற்குச் செல்லவில்லை," என்று எல்-காமதி கூறுகிறார். ●

# அரிசி இறக்குமதிக்கு அவசியம் ஏற்படாது!

## அமைச்சர் அமரவீர கூறுகிறார்

கொழும்பு, செப். 17

வெள்ளம் மற்றும் வறட்சி காரணமாக அதிகளவான பயிர் சேதங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இன்னும் மூன்று மாதங்களில் வெளிநாட்டில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் இல்லை எனவும் அவர் கூறினார்.

இளம் விவசாய தொழில் முனைவோர் மாநாடு கொழும்பு அறக்கட்டளை நிறுவனத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



இளம் விவசாய தொழில் முயற்சியாளர்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகவும் பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படவேண்டும்.

அவர்களுக்கு புதிய தொழில்நுட்பம் மற்றும் தேவையான நிதியுதவி வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2500 கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நம் நாட்டில் பல பிரச்னைகள் எழுந்துள்ளன. இளைஞர்களை விவசாயத்தின் பக்கம் கொண்டு வர நவீன தொழில் நுட்பம் தேவை. இதை வர்த்தக நிலைக்கு கொண்டு வந்து தொழில் முனைவோர்களை உருவாக்க வேண்டும்.

விவசாயத் துறையில் உள்ள சவால்களை ஒவ்வொன்றாக முறியடித்து வருகிறோம். மேலும் அரிசியின் விலை மிகவும் ஏறியது. வெளிநாட்டு சந்தையில் அதிக தேவை உள்ளது.

நமது நாட்டில் அதிகளவில் உணவு வீணாகி வருகிறது. 70000 மெற்றிக் தொன் உணவு வீணாகிறது. இளைஞர் சமுதாயம் அறிவுத்திறன் பெற்றால் பெரும் வளர்ச்சியை அடைய முடியும்.

அதிக அளவில் விவசாயம் செய்ய வேண்டிய அவசியமில்லை, குறைந்த நிலத்தில் விவசாயம் செய்ய வேண்டும். குறைந்த நிலத்தில் அதிகம் சாகுபடி செய்ய வேண்டும்- என்றார்.

(அ)



# பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்துள்ளார் நடிகர் பிரபுதேவா

கொழும்பு, செப். 17

திரைப்பட படப்பிடிப்பிற்காக இலங்கை வந்துள்ள பிரபல நடிகரும், நடனக் கலைஞருமான பிரபுதேவா பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்துள்ளார்.

இது குறித்த புகைப்படங்களை பிரதமர் அலுவலகம் தமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது.

சாம் ரொட்ரிகோஸ் இயக்கத்தில் வெளிவரவுள்ள மூசாய் திரைப்படத்தில் பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கின்றார்.

குறித்த படத்திற்கான பாடல் காட்சியொன்றை பதிவு செய்வதற்கு பிரபுதேவா இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் நடவடிக்கை மீண்டும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திடம்

கொழும்பு, செப். 17

சாரதி அனுமதி பத்திரங்களை அச்சிடுதல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மீண்டும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுதல் உள்ளிட்ட இணையத்தள முறைமை ஊடாக சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை மீண்டும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் குறித்த நடவடிக்கையினை இராணுவம் மேற்கொண்டது.

வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களை தயாரித்து வழங்கும் நடவடிக்கையினை தனியார் நிறுவனத்திடம் வழங்கியதன் காரணமாக பெருந்தொகை நிதி செலுத்தப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்படி, 10 இலட்சத்து 22,763 சாரதி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் 24 இலட்சத்து 34,467 தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களும் அச்சிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# எமது முன்னாள்...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டாமா என்ன? இரு முன்னாள் ஜனாதிபதிகள் அதற்கு ஏற்கெனவே வழிகாட்டியிருக்கிறார்களே!

ராஜபக்சாக்கள் என்னதான் மக்கள் ஆதரவை இழந்திருந்தாலும், அவர்களை மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டுவரவேண்டும் என்று பாடுபடும் கணிசமான ஒரு பிரிவினர் இருக்கவே செய்கிறார்கள். ராஜபக்சாக்கள் அதிகாரத்தில் இருந்தபோது அவர்களின் முழுமையான அனுசரணையுடன் முறைகேடான வழிகளில் சொத்துக்களைக் குவித்த அரசியல்வாதிகளும் கோர்ப்பரேட் முதலாளிகளுமே அவர்கள்.

தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் பொதுச்சொத்துக்களை வாரிச்சுருட்டுவதற்கு வசதியாக ராஜபக்சாக்கள் கடைப்பிடித்த ‘ புரவுக் கலாசாரம்’ ( Patronage Culture ) இத்தகைய பழிபாவத்துக்கு அஞ்சாத கும்பல்களை உருவாக்கியிருக்கிறது என்று முன்னரும் ஒரு தடவை இந்த பத்தியில் எழுதப்பட்டது.

இந்த கும்பல்களின் விசுவாசம் ராஜபக்ச குடும்பத்தின் உறுப்பினர்களிடையே பரவலாக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு பகுதி கோட்டாபயவுக்கும் சேரும். ஜனாதிபதி தேர்தல் நெருங்க நெருங்க கோட்டாபய நெடுகவும் மௌனம் சாதிக்கமுடியாமல் போகும் என்பது நிச்சயம்.

தனது இரண்டில் ஒரு நிலைப்பாட்டை அவர் பகிரங்கமாகக் கூறவேண்டியிருக்கும்.

இவ்வாறாக எமது முன்னாள் ஜனாதிபதிகளின் அரசியல் பற்றி நாம் பேசும்போது இன்னொரு முக்கிய விடயத்தை அவதானிக்கவும் தவறக்கூடாது.

இவர்கள் எல்லோரும் தொடர்ந்தும் கோடிக்கணக்கில் மக்களின் பணத்தில்தான் பராமரிக்கப் படுகிறார்கள். ஓய்வூதியம், பாதுகாப்புடன் கூடிய சிறப்புவசதிகளை அனுபவிக்கிறார்கள். இவர்களில் எவருமே தங்கள் சொந்தத்தில் வசதியாக வாழ முடியாதவர்கள் அல்ல.

பொருளாதார மீட்சிக்கு தவிர்க்கமுடியாதவை என்று கூறிக்கொண்டு மக்களினால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு சேவைகளுக்கான கட்டணங்களையும் பல்வேறு வரிகளையும் அதிகரித்து பொருளாதார மறுசீரமைப்பின் சுமையின் பெரும்பகுதியை நாட்டுமக்கள் மீது சுமத்தும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் ஓய்வுபெற்ற பிறகு மீண்டும் அரசியலுக்கு வராமல் இருந்தால் மாத்திரமே முன்னாள் ஜனாதிபதிகளை அரசாங்கம் பராமரிக்கும் என்று ஒரு புதிய நடைமுறையையாவது குறைந்தபட்சம் கொண்டு வந்தால் என்ன? மகிந்தவும் சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இருக்கும் வசதி வாய்ப்புகளுடன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகளையும் அல்லவா அனுபவிக்கிறார்கள்.

# இலங்கையில் தனியார்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் நிகழும்? பதிலாக அக்கல்லூரிகள் மூலம் வறியமாணவர்களுக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான முறைகளை உருவாக்க முடியும். புலமைப் பரிசில்கள், அரச மானியங்கள், வங்கிக் கடன்கள் மூலம் அதனைச் சாத்தியப் படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். ஆழமாக ஆராய்ந்தால் தற்போதைய தெரிவு முறையில் கூட பண வசதிகள் கணிசமான செல்வாக்குச் செலுத்துவதைக் கண்டறிய முடியும். வசதியுள்ள மாணவர்க்கு பாடசாலைக் கல்விக்கு மேலாக போதிய கற்றல் சாதனங்கள், சிறந்த தனியார் கல்வி நிலையங்கள், பிரத்தியேகப்பயிற்சிகள் எனக் கிடைக்கும் வாய்ப்புகள் பல ஏழை மாணவர்க்கு கிடைப்ப தில்லை.

தனியார் மருத்துவக் கல்லூரிகளை எதிர்ப்போர் முன்வைக்கும் வாதங்களில் பயிற்சிக்குப் பொருத்தமான சிகிச்சை நிலையங்களின் தேவைப்பாடு, தகமையுள்ள வளவாளர்களின் தேவைப்பாடு என்பன நியாயமானவை யாகும். ஏனெனில் இவை தர உறுதிப்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையவை. மாணவர்களின் கற்றலின் போதான செய்முறைகளுக்கு தரமான மருத் துவ சிகிச்சை நிலையங்கள் உருவாக்கப்பட வேண்டும். அல்லது தற்போதுள்ள அரச போதனா வைத்திய சாலை களைப் பாதிப்பில்லாத வகையில் பயன்படுத்துவதற் கான வழிமுறைகள் கண்டறியப் பட வேண்டும். அதேபோலவே வளவாளர்கள் தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். தற்போது மருத்துவபீடங்களிலேயே விரிவுரையாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. 7 மாணவனுக்கு ஒருவிரிவுரையாளர் இருக்கவேண்டிய நிலையில் தற்போது அது 15 க்கு ஒன்றாக உள்ளது. மொத்தமாக 1600 விரிவுரை யாளர் இருக்க வேண்டிய நிலையில் 800 பேரே தற்போது உள்ளனர். இதேவேளை இவை தனியார் மருத்துவக் கல்லூரிகளைத் தடுப்பதற்கான காரணிகளாகவும் அமையக் கூடாது. ஏனெனில் இன்றிருக்கும் 12 மருத்துவ பீடங்கள் அனைத்தும் ஒரே தரத்திலானவை அல்ல. கொழும்புமருத்துவ பீடமும் அண்மையில் தொடங்கிய சப்ரகமுவ மருத்துவ பீடமும் ஒரே தரத்திலானவை அல்ல. இங்கு தேவையானது தடைக்கற்கள் அல்ல. தரமேம்பாட்டுக்கான கட்டுமானங்களே.

தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடர் பாக கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் - நேர்மையானதும் வெளிப்படையானதுமான மாணவர் உள்வாங்கல், தர உறுதிப்பாடு, நியாயமான கட்டணங்கள், மாணவர்க்கான போதிய நலன்புரி வசதிகள் என்பவற்றுக்கு அரச உத்தரவாதம்அடிப்படையா னதாகும். எனவே தனியார் கல்லூரிகளை எதிர்ப்பதற்குப் பதிலாக மேற்குறித்தவற்றை அடைவதற்குப் போராடுவதே வரவேற்கக் கூடியதாகும். நெறிப்படுத்துவதற்கான சுதந்திரமான நிறுவனக்கட்டமைப்பு, பொதுவான பரீட்சைகள், தர உறுதிப்பாட்டுக்கான கருவிகளும் கண்காணிப்புகளும் மிக அவசியமானவை. தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் தற்போது நடைமுறையிலுள்ள முதலீட்டுநிறுவனம் மற்றும் கம்பனிகள் சட்டத்தின் கீழான அனுமதி பெறும் முறை மாற்றப்பட்டு கல்விசார் நிறுவனத்தின் கீழ் கொண்டு வரப்படவேண்டும். உலகத்திலுள்ள மருத்துவக்கல்லூரிகளில் மட்டுமல்ல நமக்கு அயலிலுள்ள தமிழ்நாட்டில் கூட முன்னிலையில் இருப்பவை தனியார் கல்லூரிகளே என்பதை கவனத்தில் கொள்வது அவசியம்.

எதிர்க்கும் தரப்பிற்குப் பின்னால் வேறு மறைமுக நிகழ்ச்சி நிரல்கள் இருப்பதான விமர்சனங்களும் பொதுமக்கள் மத்தியிலிருப்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். வைத்தியர்களின் நிரம்பல் அதிகரிப்பது தங்கள் மவுசுக்கும் அதிகாரத்துக்கும் உழைப்புக்கும் சலுகைகளுக்கும் எங்கே ஆப்படிக்கப்பட்டுவிடுமோ என்ற பயம். ஏழைகளுக்காக எதிர்ப்பதாகக் கூறும் வைத்தியர்களில் எத்தனை பேர் ஏழைகளுக்கு வெளியில் இலவசமாக அல்லது மிகக் குறைந்த கட்டணத்தில் சேவை செய்கின்றனர்? எதிர்க்கும் வைத்தியர்கள் பலர் தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளில் மருத்துவப் படிப்புக்கு அனுப்புவது போல மற்ற வர்க்களாலும் முடியுமா? தங்கள் சுயநலனுக்காக பல்கலைக்கழக மாணவர்களைபகடைக்காய்கள் ஆக்குவது ஏற்றுக் கொள்ளக்கூடியதா? இக்கேள்விகளுக்கான விடைகளைஎதிர்ப்போர்தான் மறுத்துரைக்க வேண்டும்.

# மக்கள் ஆணையின்றி பதவி பெற தயாரில்லை

## அடித்துக்கூறும் சஜித்

கொழும்பு, செப். 17

கொள்கைகளை மீறிக் கொண்டு நாட்டு மக்களை மறந்துவிட்டு தனிப்பட்ட பேராசைக்காக ஜனாதிபதி பதவியையும் பிரதமர் பதவியையும் பெற தாம் தயாராக இல்லை என எதிர்க்கட்சித் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சதஹம் யாத்தரா நிகழ்ச்சியின் 1500 ஆவது நிகழ்வு நேற்று கேகாலை,கலிகமுவ வட்டராம ரஜமஹா விகாரையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

”மொட்டுவின் 134 உறுப்பினர்களின் மட்டுப்படுத்தப்பட்ட ஆணையுடன் ஜனாதிபதி கதிரைக்குச் சென்ற தற்போதைய ஜனாதிபதி, மொட்டு திருடர்கள் குழுவின் பாதுகாவலராக மாறி தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையை மறைத்து வருகின்றார்.

நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் கூட ஆணைக்குழு அறிக்கையின் பிரதிகளை பெற்றுக் கொள்ளமுடியாத விதமாக மறைத்து வைத்துள்ளனர். உண்மையை மறைப்பதால் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும்.

பூரண அரசாட்சியை தருவதாக கூறினாலும் மக்கள் ஆணையின்றி ஜனாதிபதி பதவியையோ அல்லது பிரதமர் பதவியையோ ஏனைய பதவியையோ அரச அதிகாரத்தையோ பெற தாம் தயார் இல்லை.

சமய ஸ்தலங்கள் ஊடாக வெளியிடப்படும் சமய செய்திகளின் அடிப்படையில் ஐக்கிய இலங்கையின் தேசிய பாதுகாப்பு பாதுகாக்கப்பட்டாலும் கடந்த காலங்களில் மலட்டுக் கொத்து, மலட்டு அறுவை சிகிச்சை என கூறி உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நாட்டில் இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்தினர்.

நாட்டை அழித்த தரப்புடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால் தாம் தற்போது நாட்டின் ஜனாதிபதி என்றும்,நாட்டை அழித்த மொட்டுடன் எந்த ஒப்பந்தமும் இல்லை என்றும், ஒப்பந்தமொன்று போட வேண்டிய தேவை ஏற்பட்டால் அத்தகையதொரு ஒப்பந்தம் அரசியல் கட்சிகளுடன் அன்றி 220 இலட்சம் பேருடன்தான் போடப்படும்.

முறைமை மாற்றம் கோரும் நாட்டில் எழுந்துள்ள இந்த வாதங்கள் ஒரு ஜனநாயகப் போக்கின் தொடக்கமாகும். தலைவர் தவறு செய்தாலும் சுதந்திரமாக பேசுவதே அடிமை அரசியலில் இருந்து விடுபட்டு ஜனநாயக பாதையில் பிரவேசிப்பதற்கான இலட்சனமாகும்.

வாத பிரதிவாதங்களை முன்வைப்பதில் இறுதியில் ஒரு நல்ல முடிவு எட்டப்படும். அடிமைத்தனமான குடும்ப அரசியலில் இருந்தும்,மதத்தை விற்கும் குடும்ப அரசியலிலிருந்தும் விலகுவதிலும்,ஜனநாயக சுதந்திரம்,பேச்சு சுதந்திரம்,எதிர்ப்புத் தெரிவிக்கும் சுதந்திரம் உள்ள மத்தியஸ்த பாதையில் சமூக ஜனநாயக பயணத்தை மேற்கொள்வதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாகும்.

புத்த பகவான் கூட ஊழலையும், மோசடியையும் நிராகரித்தார் என்றாலும்,நாட்டு மக்களை அடிமைகளாக கனவு காணும் பெரும் குடும்பங்கள் தேசாபிமான பெருமிதத்துடன் பௌத்தத்தை முன்நிறுத்தி,மக்களை ஏமாற்றி நாட்டைக் காப்பாற்றுகிறோம் என்ற பெயரில் முன் வந்து இறுதியில் நாட்டின் வளங்களையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

சதஹம் யாத்ரா வேலைத்திட்டத்தின் கீழ் திஸ்ஸ அத்தநாயக்க அவர்கள் 1802 மத ஸ்தலங்களுக்குச் சென்று ஐக்கிய மக்கள் சக்தியின் சமயக் கொள்கைகள் மற்றும் சமூக நல்லிணக்கத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

பௌத்த விகாரைகளில் இடம்பெறும் நிகழ்வுகளில் 1500 ஆவது நிகழ்ச்சி நேற்றைய தினம் நடைபெற்றமை பெருமைக்குரியது-என்றார். (அ)

# சட்டவிரோதமான முறையில் தொழிலுக்காக வெளிநாடு செல்வோர் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, செப். 17

சட்டவிரோதமான முறையில் தொழிலுக்காக வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவ தாக வெளிநாட்டு வேலை வாய்ப் புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் அவ்வாறான 2,500 வரையான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பணியகத்தின் பிரதி பொது முகாமை யாளர் காமினி செனவிரத்ன குறிப்பிட்டார்.

கடந்த வருடத்தில் குறித்த எண்ணிக்கை 1900 ஆகக் காணப்பட்டது.

சட்டவிரோதமாக வெளி நாடு செல்வதைத் தவிர்க்குமாறு, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (அ)

## மீண்டும்...

பேசுபொருளாக மாறியுள்ளன.

இந்நிலையில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கோட்டாபயவை நேரில் சந்தித்து ,இது பற்றி வினவியுள்ளனர். இதற்கு பதிலளித்த கோட்டா,

“அரசியலுக்கு ஒரு தடவை வந்தேன், ஒதுங்கினேன். அதிகாரத்தை தக்கவைக்க வேண்டும் என்பது அல்ல என் நோக்கம். மீண்டும் அரசியலுக்கு வரும் அளவுக்கு வாழ்க்கையில் பக்குவம் இல்லாத நபர் நான் அல்லன்.” என குறிப்பிட்டார். (அ)

## வடக்கு...

தளபதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை எனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 14 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் அதிகளவான இராணுவத்தினர் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், பொதுமக்களின் பெருமளவான காணிகளும் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், அவ்வப்போது படையினரின் தேவைக்காக காணிகளும் அளவீடும் செய்யப்படுகின்றன.

இந்நிலையில், வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் என அரசியல்வாதிகளும், பொதுமக்களும், சமூக செயற்பாட்டாளர்களும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையிலேயே, வடக்கு கிழக்கில் படையினரின் எண்ணிக்கையை குறைக்கப் போவதில்லை என இலங்கை இராணுவம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. (அ)

## எரிபொருள்...

எவ்வாறாயினும் இம்மாத இறுதியில் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது.

அதேவேளை, கடந்த மாதம் 80 டொலருக்குள் இருந்த மசகெண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை தற்போது 90 டொலர்களை கடந்துள்ளது. இம்மாத இறுதியில் மசகெண்ணெய் விலை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையிலும் அடுத்த மாத ஆரம்பத்தில் எரிபொருள் விலைகளை கணிசமாக அதிகரிப்பது குறித்து, எரிசக்தி அமைச்சு இப்போதே சிந்திக்க ஆரம்பித்துள்ளதாக அறியமுடிகிறது. (அ)

## நாட்டு...

அரசாங்கம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஆனால் நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் பொருளாதாரத்தில் அதிக ஸ்திரத்தன்மை ஏற்படும். அந்த நேரத்தில் வரி நிர்வாக முறையை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

நாங்கள் அதைப் பற்றி விவாதம் செய்யலாம். இருப்பினும், நாங்கள் முதலில் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தி பலப்படுத்த வேண்டும்.

2023ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் இலங்கை தனது கடன் மறுசீரமைப்பு செயல்முறையை முடிக்க உத்தேசித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாணய நிதியத்தின் முதல் மதிப்பாய்வு இடம்பெற்று வருகிறது. இது ஒரு நீண்ட மதிப்பாய்வாக இருக்கும்.

கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் கலந்தாய்வுகள் நடத்தப்படும். ஜனாதிபதி இறுதிக் கூட்டத்தை 26 ஆம் திகதி (செப்ரெம்பர்) நடத்துவார்-என்றார். (அ)

## பூநகரி...

இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது வாகனம் மோதியதாகக் கூறப்படுகின்றது. சம்பவத்தில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

மற்றுமொருவர் படுகாயம் அடைந்த நிலையில் அங்கு நின்றவர்களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் விபத்தினை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற வாகனம் தொடர்பில் பூநகரி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (அ)

## ஐ.நா...

காரணம் என நான், முன்னாள் சமீபத்து தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் என்ற முறையில் சொன்னதை ஐ.நாவின் இலங்கைப் பிரதிநிதி மார்க் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டார்.

பதினைந்து இலட்சம் மலையக தமிழர் மத்தியில் சுமார் ஏழரை இலட்சம் பேர் இன்னும் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர். அவர்களில் ஒன்றரை இலட்சம் பேர் தோட்ட தொழிலாளர்கள். இந்த பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற மக்களே இலங்கை சமூக பொருளாதார வளர்ச்சியில் மிகவும் பின் தங்கியவர்கள் என்ற தரவுகளுடனான ஆவணத்தை எழுத்து மூலமாக ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி மார்க்-அண்ட்ரேக்கு நாம் வழங்கினோம்.

இலங்கை ஐநா நிகழ்ச்சி வலயத்தில் மலையக தமிழர்களின் பிரச்சினைகள், தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் ஐநாவின் இலங்கை பிரதிநிதி உறுதியளித்தார்-என்றார். (அ)

## சேமலாப..

இலாபத்திற்கு நூற்றுக்கு 14 சதவீதமாக மாத்திரமே வரி விதிக்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட் டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின் படியும், மற்றும் கடன் வழங்குநர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், தற்போது வெளிநாட்டு கடன் மறுசீர மைப்புப் பணிகள் தயார்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புடன், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நாம் வெளிநாட்டுக் கடன்களாகப் பெற்றிருப்பது, அந்தந்த நாடுகளின் மக்களின் வரிப்பணம்தான், நாம் அது குறித்து கவனம் செலுத்த வேண்டும். அதனால், வெளிநாட்டுக் கடனை செலுத்த முடியாத நிலையில் உள்ள நாடு என்ற வகையில், உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்காமல், வெளிநாட்டுக் கடன்களை மாத்திரம் மறுசீரமைக்க இடமளிக்குமாறு கோரிக்கை விடுக்க எமக்கு வாய்ப்பில்லை. எனவே, உள்நாட்டுக் கடனை மறுசீமைப்பதும் கட்டாயம் ஆகும்.

நாம் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மூலமாகவே அதிகளவில் உள்நாட்டுக் கடன்களைப் பெற்றுள்ளோம். அதனாலேயே, இது குறித்து விவாதம் ஏற்பட்டுள்ளது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஏன் வங்கிகளில் முன்னெடுக்கப்படவில்லை என்று சிலர் கேட்கிறார்கள்.

அதற்கு நாம் கூறக்கூடிய தெளிவான பதில் இதுதான், வங்கிகளுக்கு தொடர்ந்தும் சுமார் 30 சதவீத அளவில் வரி விதிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக வங்கிகளுக்கு இன்னும் சுமைகளை வழங்குவதன் மூலம் வங்கிகளில் கொடுக்கல் வாங்கல் செய்யும் பொது மக்களே பொருளாதார ரீதியாக மேலும் பாதிக்கப்படுவார்கள்.

அதற்கிணங்க, அரசாங்கம் என்ற வகையில் பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று, எதிர்வரும் காலத்திற்கு இந்த உள்நாட்டு கடன் மறுசீமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவோம். பொது மக்கள் நிதியங்களின் உறுப்பினர்களுக்கு எவ்வித அநீதியும் ஏற்படாத வகையில் வாக்குறுதியளிக்கப்பட்ட 9 வீத நலனை எதிர்காலத்திலும் வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அதன்படி, ஒருவருக்குச் சொந்தமான பணத்தில் 09 சதவீத வருடாந்த பலன் தொடர்ச்சியாக வழங்கப்படும். அது தவிர, 14 சதவீதம் அல்லது 30 சதவீத வரி விதிக்கப்பட மாட்டாது. இதைப் பற்றிய உண்மைகளை சிலர் திரிவுபடுத் திக் கூறுகின்றனர். மக்களைத் தவறாக வழிநடத்துகிறார்கள்.

ஊழியர் சேமலாப நிதியத்தில் உள்ள பணத்தை முதலீடு செய்த பிறகு கிடைக்கும் இலாபத்திற்கே 14 சதவீத வரி விதிக்கப்படுகிறது.

நமது 2.4 மில்லியன் தொழிலாளர்களில், ஒருவருக்கு இன்று வங்கியில் 10 இலட்சம் ரூபா வைப்பிலிருந்தால், அந்தத் தொகைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. அவர் தமது பணத்தைப் பெறும்போது, அவருக்கு அதற்காக ஆண்டு தோறும் 09 சதவீதம் என்ற வகையில் சேர்க்கப்பட்ட நலனை வழங்கவும் தயாராக உள்ளோம்.

மேலும், உள்நாட்டுக் கடன் மறுசீரமைக்கப்படாவிட்டால் மாத்திரமே நாம் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு பாதிப்பு ஏற்படும். நாம் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பில் உருவாக்கப்படும் கதைகள் வெறுமனே அரசியல் கதைகள் மட்டுமே. கதைகளை உருவாக்கு பவர்களுக்கு எந்தவொரு வேலைத்திட்டமும் இல்லை-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# இந்திய மீனவர்கள் அத்துமீறலை தடுக்க கட்டமைப்பை வலுப்படுத்தும் இலங்கை!

கொழும்பு, செப். 17

**இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளின் ஈடுபடும் பின்னணியில், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் (திருத்தம்) சட்டமூலத்திற்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயத்திற்கான பாராளுமன்றத் துறைசார் மேற்பார்வைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.**

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறும் செயற்பாடுகளில் ஈடுபடும் எவருக்கும் எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கும் வகையில் புதிய சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சின் முக்கிய அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் பாராளுமன்ற உறுப்பினர் டி.வீரசிங்கவின் தலைமையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயத்திற்கான பாராளுமன்றத் துறைசார் மேற்பார்வைக் குழு கூடியபோதே இது தொடர்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின்படி, படகு உரிமையாளரைத் தவிர, படகின் ஓட்டி மற்றும் கப்பலில் உள்ள எந்தவொரு நபருக்கும் தண்டப் பணம் விதிக்கப்படலாம்.

இந்திய மீனவர்கள் இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது அதிகரித்து வருவதால் சட்டத் திருத்தத்தை மேற்கொண்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு கூறியுள்ளது.

மீனவர்களின் விவகாரம் தொடர்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வரும் பின்புலத்தில் இது வரை எவ்வித தீர்வுகளும் எட்டப்படவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணத்திலும் மீனவர் விவகாரம் தொடர்பில் முக்கிய கலந்துரையாடல் நடத்தப்பட்டதாக செய்திகள் வெளியிடப்பட்டமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# தாவடியில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு தாக்குதல்!



யாழ்ப்பாணம், செப். 17

யாழ். தாவடி வன்னிய சிங்கம் வீதியில் உள்ள வீடொன்றின்மீது நேற்று அதிகாலை பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் வீட்டு உடைமைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்த தாக்குதலில் ஐந்து பேர் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ். உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர், பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டில் உள்ள யுவதியை காதலித்தார் எனவும் பெற்றோரிடம் திருமணம் செய்து வைக்குமாறு கூறியபோது பெற்றோர் மறுத்திருந்த நிலையில் குறித்த இளைஞன் தனது குழுவினருடன் வந்து நேற்று அதிகாலை வீட்டைத் தாக்கிச் சேதப்படுத்தி வீட்டில் பெற்றோல் குண்டு தாக்குதலையும் மேற்கொண்டுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சொந்த தேவைக்கு பயன்படுத்தப்படும் அரச அதிகாரிகளின் 2,000 வாகனங்கள்!

கொழும்பு, செப். 17

அரசியல்வாதிகள், பொலிஸ், ஆயுதப்படை மற்றும் பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட சுமார் 2000 உத்தியோகபூர்வ கார்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாக புலனாய்வு அமைப்புகளால் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பெருமளவு பணம் விரயமாகி வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில அரசியல்வாதிகள் தங்களது தனியார் வாகனங்களை தாம் பணிபுரியும் நிறுவனத்துக்கு வாடகைக்கு விடும்போது அவற்றை உத்தியோகபூர்வ வாகனங்களாகப் பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உத்தியோகபூர்வ வாகனங்கள் பிரதானிகளின் மனைவிகள் மற்றும் பிள்ளைகளின் பாடசாலைப் பயணங்களுக்கு பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதாக புலனாய்வு அமைப்புகள் கண்டறிந்துள்ளன.

பாதுகாப்புப் படையினரின் சாரதிகள் குடும்ப உறுப்பினர்களின் பயணங்களுக்கும் அரசாங்கத்தினால் பிரதானிகளுக்கு வழங்கப்படும் எரிபொருளைப் பயன்படுத்துவதாலும் இந்த இழப்பு இரட்டிப்பு, மூன்று மடங்காக அதிகரிப்பதாக தெரிவிக்கின்றன.

இந்த புலனாய்வு அறிக்கை தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. (அ)

# வறட்சியால் சிறுபோகத்தில் 66,234 ஏக்கர் பயிர்கள் அழிவு

கொழும்பு, செப். 17

வறட்சி காரணமாக இம்முறை சிறுபோகத்தில் 66,234 ஏக்கருக்கும் அதிகமான விளைநிலங்களில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்களும் ஏனைய பயிர்களும் அழிவடைந்துள்ளன.

இதன் காரணமாக 67,408 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

இதனிடையே வறட்சி, மழை மற்றும் புழுக்களின் தாக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்பு உள்ளிட்ட காரணிகளால், விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர்ச்சேதம் குறித்த மதிப்பீடு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக விவசாய காப்புறுதிச் சபையின் தலைவர் வீரசேகர குறிப்பிட்டார்.

வறட்சியினால் ஏற்பட்ட பயிர்ச்சேதங்களை மதிப்பிடும் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், மழையினால் ஏற்பட்ட பயிர்ச்சேதங்களை மதிப்பிடும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாய அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

குறித்த நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன், முழுமையான பயிர்ச்சேத மதிப்பீட்டு அறிக்கை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கையளிக்கப்படும் என விவசாய காப்புறுதிச் சபையின் தலைவர் தெரிவித்தார். (அ)

# மோசடியான அரசியல்வாதிகளால் முழு நாடுமே அழிந்து வருகின்றது!

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

கொழும்பு, செப். 17

நாட்டின் மோசடியான அரசியல்வாதிகள் காரணமாக முழு நாடும் அழிந்து வருகிறது என இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

பமுனுகம உஸ்வெட்டகொய்யாவ புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற பொன்விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டில் ஒரு சட்டமில்லை. இரண்டு சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

சாதாரண பொலிஸ் உத்தியோகத்தருக்கு ஒரு சட்டமும் பொலிஸ் அத்தியட்சகர் போன்ற உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு இன்னுமொரு சட்டமும் நடைமுறைப் படுத்தப்படுகிறது. வழக்கொன்றில் குற்றவாளி ஒருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டால், அதனை செலுத்தும் வரை அவரை விளக்கமறியலில் வைத்திருப்பார்கள்.

எனினும் சில அரசியல்வாதிகள், குற்றவாளிகள் என அறிவிக்கப்படும்போது, அவர்கள் சுதந்திரமாகச் சென்று அபராதப் பணத்தைத் தேடத் தேவையான காலத்தை வழங்குகின்றனர்.

பாராதூரமான குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கும் உயர் பொலிஸ் அதிகாரிகள் எந்த தடைகளும் இன்றி அந்த பதவிகளை வகித்து வருகின்றனர்.கடந்த 60 ஆண்டுகளாக நாட்டின் அநீதி அரசாண்டு வருகிறது.

உங்களை போலவே உங்கள் அயலாரை நேசிக்க வேண்டும் என்று கிறிஸ்தவ சமயம் கூறுகிறது.

இதனடிப்படையில் ஈஸ்டர் தாக்குதலில் உயிர்களை இழந்த 273 பேரின் துயரங்களை நாம் உணர வேண்டும்.

எனினும் சில கத்தோலிக்க பக்தர்கள் அது எமது பங்கில் நடக்கவில்லை என்று கூறி அந்த பயங்கரமான அனர்த்தம் பற்றி கவனத்தில் கொள்ளாமல் இருக்கின்றனர்.

எந்த உணர்வுமில்லை. இது எமது சமயத்தின் படிப்பினைகளுக்கு எதிரானது. அத்துடன் மிகப் பெரிய சாபம் - என்றார். (அ)

# மூன்றெழுத்துக்காரரே ஜனாதிபதி வேட்பாளர்

## மொட்டு கட்சி அறிவிப்பு

கொழும்பு, செப். 17

மூன்றெழுத்துடையவரே மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர். இன்னும் ஒன்றரை மாதமளவில் அது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்கக்கூடியதாக இருக்கும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தங்கத்துக்கு ஏன் அதிக விலை? மாணிக்கம், முத்துகளுக்கு ஏன் மதிப்பு? அவை வீதியில் கொட்டிகிடந்தால் கருங்கல்லுக்குரிய மதிப்பே கிட்டும். எனவே, மொட்டு கட்சி ஜனாதிபதி வேட்பாளரும் பெறுமதிமிக்கவர், பதற்றப்பட வேண்டாம், உரிய நேரத்தில் அறிவிப்புவரும்.

அரசியலில் ‘நிராகரிப்பு’ என்பது நிரந்தரம் இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பயணம் இதற்கு சிறந்த சான்று-என்றார். (அ)

# கடினமான சவாலை எதிர்கொண்டுள்ள இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

கொழும்பு, செப். 17

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டுக்கான ஏற்றுமதியை மேம்படுத்துவதில் கடினமான சவால்களை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் கலாநிதி கிங்ஸ்லி பேர்னார்ட் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அத்துடன், வளர்ந்து வரும் நாடுகளில் நாட்டின் பாரம்பரிய ஏற்றுமதி சந்தைகள் பொருளாதார வீழ்ச்சியை எதிர்நோக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ஏற்றுமதியில் சுமார் 12 வீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கிங்ஸ்லி பெர்னார்ட் கூறினார்.

அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி மற்றும் ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், இலங்கையின் ஏற்றுமதித் துறையை மேம்படுத்துவதற்கு நாடு அதிக பிரயத்தனங்களை மேற்கொள்ளவேண்டுமென இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் வலியுறுத்தினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஆயுத எழுத்து

ஆசி கந்தராஜா



மண்சட்டியில் கருவாட்டுக்குழம்பு கொதித்துக் கொண்டிருந்தது. கண்டிக்குப் போகும் வழியில், சுண்டிப் பார்த்துக் கவனமாக வாங்கிய மண் சட்டியது. மண்சட்டியில் கறிசமைக்க வேண்டுமென்ற நீண்டநாள் ஆசை இம் முறைதான் சித்தித்தது. திரும்பிவரும் பறப்பில் முப்பது கிலோ அனுமதிக் கப்பட்டிருந்தாலும் சொந்தச் சாமான் கள் அதிகம் இல்லாததால், வெவ்வேறு சைஸில் மண்சட்டிகளும் கிலோக் கணக்கில் கருவாடும் வாங்கி, பக்குவ மாகப் பொதிசெய்து கொண்டுவந்தி ருந்தார். மனைவி பெரும்பாலும் சைவம். இதனால் மச்சமாமிசம் காச்சுவ தென்றால் சாம்பசிவம் வாய்க்கு இதமா கத் தானே சமைத்துக் கொள்வார்.

இலங்கைப் பல்கலைக் கழகம் ஒன்றில், பொருளாதாரமும் வணிக முகா மைத்துவமும் படித்த சாம்பசிவம், அரச வங்கியொன்றில் உயர் பதவி வகித்தவர். வெளிநாடொன்றில் வசதியோடு வாழ்ந்த மனைவியின் அண்ணன், மச் சான் அழைத்ததால் எண்பத்தி மூன்றாம் ஆண்டு, இலங்கை இனக்கலவரத்துக்கு முன்னரே குடும்பத்தோடு புலம் பெயர்ந்து, அரசியல் தஞ்சம் கோரியவர். இலங்கையில் அவருக்கு எந்தவித அரசி யல் நெருக்கடிகளோ கெடுபிடிகளோ இருந்ததில்லை. இருந்தாலும் நிரந்தர விசா எடுத்து, அகதிகளுக்கான அரச கொடுப்பனவுகளைப் பெற, அகதி அந்தஸ்துக் கோருவதுதான் சுருக்கமான வழியென்றும் காதும் காதும் வைத்தாற் போல விசயத்தை முடித்துவிடலாம் என்றும் மச்சான் சொன்னார். ஈழ விடு தலை இயக்கங்கள் முனைப்படையாத காலத்தில், அகதி விண்ணப்பங்களைப் பரிசீலித்த அதிகாரிகளுக்கு, இலங்கைப் இனப்பிரச்சனை பற்றிய பூரண அறிவோ மனுதாரர்களின் தகிடுதத்தங்களோ தெரியாது. மனுவில் எழுதியது, விசார ணையில் சொன்னது எல்லாவற்றையும் வஞ்சகமில்லாமல் நம்பினார்கள். மச்சா னின் யோசனைப்படி, தமிழர் விடு தலைக் கூட்டமைப்பில் தான் தீவிரமான அங்கத்தவராக இருந்து, உரிமைப் போராட்டங்களில் ஈடுபட்டதாகவும் இதனால் இலங்கைப் பொலீஸ் தன் னைத் தேடுவதாகவும் கற்பனையில் ஒரு மனு எழுதிச் சமர்ப்பித்தார். விசாரணை களிலும் இதையே திரும்பத் திரும்பச் சொன்னதால், ஒரு கட்டத்தில் மனுவில் தான் எழுதியதெல்லாம் உண்மை யென்றே நம்பத் தொடங்கிவிட்டார்.

சாம்பசிவத்தின் மச்சான் வலு சுழி யன். எழுபதுகளிலேயே படிக்கவென வெளிநாடு வந்து பொருளாதார ரீதி யாகத் தன்னை வலுப்படுத்திக் கொண் டவர். சாம்பசிவம் அகதி அந்தஸ்துப் பெற்றதைக் கனகச்சிதமாகப் பயன்படுத் திக் கொண்டார். ஈழ விடுதலை இயக் கம் ஒன்றைச்சாட்டி பல்பொருள் அங் காடி ஒன்றை, சாம்பசிவத்தின் பெயரில் ஆரம்பித்து, எம்மவர்கள் பாவிக்கும் சகல பொருள்களையும் இறக்கி விற்ப னைக்கு விட்டார். அப்பொழுதுதான் இலங்கைத் தமிழர்கள் பெருவாரியாகப் புலம்பெயரத் தொடங்கிய காலம். இலங்கைத் தமிழ்க் கடைகள் எதுவும் புலம்பெயர்ந்த நாடுகளில் இருக்க வில்லை. விற்பனையில் பெறப்படும் இலாபமெல்லாம் விடுதலை இயக்கத் துக்குப் போகுது என மச்சான் பரப்பி விட்ட கதை, இலங்கைத் தமிழர்கள் மத்தியில் நல்லாய் வேலைசெய்ய, வியாபாரம் சக்கைபோடு போட்டது. இத்துடன் சாம்பசிவத்தின் வணிக முகாமைத்துவ அறிவும் கைகொடுக்க, தமிழர்கள் வாழும் குறிச்சியெங்கும் கிளைகளைத் திறந்தார்கள். கால ஓட்டத் தில் நவீன தொழில் நுட்பங்களுடன், புதுப்புது தொழில்களும் ஆரம்பிக்கப் பட்டன.

இப்பொழுதெல்லாம் சாம்பசிவம் ஒரு புரவலர், பிரமுகர், கோவில்களின் தர்மகர்த்தா, முக்கிய ஈழ அமைப்பொன் றின் நிரந்தரத் தலைவர். சமீபத்தில்தான் தனது எழுபதாவது பிறந்த தினத்தை, தடல்புடலாகக் கொண்டாடியவர். தலைக்கு மையடித்து இளமை பேணினாலும் உடல் உபாதைகள் கொஞ்சம் கொஞ்சமாக வாட்டத் துவங்க ஊர்ப்பற்றும் சுடலைஞானமும் மெல்லமெல்லத் தலைதூக்கின. வைத்தியர் சொன்னபடி மன அழுத்தம் வராமல் இருக்க அடிக்கடி இலங்கைக்கு வந்துபோனார்.

கருவாட்டுக் குழம்பு வத்தி வறட்டல் பருவத்துக்கு வந்துகொண்டிருந்தது. அடிப்பிடிக்க விடாமல் ஊரிலிருந்து வாங்கிவந்த சிரட்டை அகப்பையால் விறாண்டி, வட்டமாகத் துழாவிய போது குழம்பின் மையத்தில் அந்த இளைஞனின் முகம் கோட்டோவிய வடிவத்தில் தோன்றிய பிரமை உண்டானது. உடம்பு முழுவதும் உஷ்ணம் பரவி வேர்த்தது. இளைஞனின் நினைவு அலைபோல எழுந்துஎழுந்து விழுந்து மனதை அலைக்கழித்தது. அடுப்பை அணைத்து, மெல்ல வெளியே போய் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து அந்த நினைவை மறக்க முயன்றார்.

ஊரிலிருந்து வாங்கி வந்தது, திறம் பாரைக் கருவாடு. தலை, வால், குடற்பகுதி, நடுமுள்ளு எல்லாம் நீக்கி, நல்ல தசைத் துண்டங்களாக வெட்டிப் பொதிசெய்திருந்தான் அந்த இளைஞன். வெவ்வேறு நாடுகளின் 'குவாரன்டைன்' சட்டதிட்டங்கள் அனுக்கு நன்றாகவே தெரிந்திருந்தன. அட்சரசுத்தமான ஆங்கிலத்தில் உரையாடியபடி, கரு வாட்டை வெட்டி இரண்டடுக்கு பொலித்தீன் பைகளில் சீல்செய்தபின் 'காய்ந்த சுத்தமான கருவாடு' என அழ கான ஆங்கில எழுத்துக்களில் எழுதி னான். கருவாட்டுக்கு முதலாளி சொன்ன விலை கொஞ்சம் கூடத்தான். டொலரை மாத்தின சாம்பசிவத்தாருக்கு அது அதிகமில்லை. காசல்ல பெரிசு, நல்ல கருவாடுதான் அவருக்கு முக்கியம்.

கருவாட்டின் உப்பு இறங்க சுடுதண் ணியில் ஊறவிட்டு, தாளிதத்தின் பின் னர் பழப்புளி, தக்காளி, தேங்காய்ப்பால் சேர்த்துக் கொதிக்க வைத்து, யாழ்ப்பா ணத்து மிளகாய்த்தூள் போட்டு மூடி அவியவிட்டு, பின்னர் நல்லெண்ணை யில் பிரட்டி எடுத்ததால், கருவாட்டின் வாசனை மூக்கைத் துளைத்து வயிற் றைக் கிள்ளியது. 'என்னத்துக்குத்தான் இந்த நாத்தல் கருவாட்டைக் கொண்டு வந்து வீட்டை நாறடிக்கிறியளோ தெரி யாது. இங்கைதானே சந்தையிலை நல்ல ஃப்ரெஸ்ஸான மீன் வாங்கலாம், அதை வாங்கிச் சமைக்கலாமே' எனப் புறு புறுத்தபடி வீட்டின் ஜன்னல் கதவுகளை அகலத் திறந்துவிட்டாள் மனைவி. கருவாட்டு மணம் மனைவிக்கு நாத்தம், சாம்பசிவத்தாருக்கு அது வாசனை. இப்படியான சந்தர்ப்பங்களில் 'அறிந்த வன் அறிவான் அரியாலைப் பனாட்டை' என்ற நினைப்பில் சாம்ப சிவம் அமைதிகாப்பார்.

இன்று நேற்றல்ல, நீண்டகால மாகவே சாம்பசிவம் ஒரு கருவாட்டுப் பிரியர். அதன் அசலான ருசியையும் அதில் எத்தனைவகைச் சமையல் செய்யலாம் என்பதையும் பல்கலைக் கழகத்தில் கூடப்படித்த சிங்களவர்க ளிடம்தான் தெரிந்து கொண்டவர். கண்டியில் இவருடன் அறையைப் பகிர்ந்துகொண்டவன் ஒரு நாட்டுப்புறச் சிங்களவன். அவனுக்கும் தினமும் சோறு வேண்டும். அதனால் பக்கத்து அறைக்காரர்களுடன் சேர்ந்து, முறை வைத்துப் பொதுவான சமையல் நடந்தது. சாம்பசிவம் சமையல் கற்றுக் கொண்டதும் சிங்களவர்களிடம்தான்.

இம்முறை எப்பாடுபட்டாவது திரி யாய்ப் பாரைக் கருவாடு வாங்கவேண் டும் என்ற தீர்மானத்துடன்தான் சாம்பசிவம் யாழ்ப்பாணம் போனார். திரியாய்ப் பாரைக் கருவாட்டின் சுவை பற்றியும் அது அரிதாகவே கிடைப்ப தாகவும் நண்பர் ஒருவர் சிலாகித்துச் சொல்லியிருந்தார். யாழ்ப்பாணம், பருத்தித்துறையை அண்மித்த கடற்கரையோர திரியாய் மீனவக் குறிச்சியில்தான் இப் பாரைக் கருவாடு பதப்படுத்தப்படுகிறது. பதப்படுத்தும் பொறிமுறைச் சூக்குமம் பிறர் அறி யாதது. பதிவில் இல்லாதது. மஞ்சள் தூள் மற்றும் பல சரக்குச் சாமான்கள் சேர்த்துப் பதப்படுத்திக் காயவைத்த திரியாய்க் கருவாட்டை, பிரசவத்தின் பின்னர் பெண்கள் உட்கொள்வதாகவும் இதில் உடல்வலியைப் போக்கும் அன்டி -ஆக்ஸிடன்ற் என்னும் வேதிப்பொருள் உண்டென்றும் சாம்பசிவம் அறிந்திருந் தார். கருவாட்டு விசயத்திலே சாம்ப சிவம் ஒரு விடாக்கண்டர். திரியாய்ப்ப ாரை தேடி பருத்தித்துறை வரை அலைந் தும் கிடைக்கவில்லை. அயலட்டையில் விசாரித்தபோது யாழ்ப்பாணப் பட்டி ணச் சந்தைக்கருகே பல கருவாட்டுக் கடைகள் இருப்பதை அறிந்து அடுத்த நாள் காலையில் அங்கு ஆஜரானார்.

யாழ்ப்பாணத்திலுள்ள மீனவக் கிராமங்களின் பெயர்களுடன் பல கரு வாட்டுக்கடைகள், வீதியின் இருமருங்கி லும் வரிசைகட்டி அவரை வரவேற்றன. ஆமான பாரை, விளை, கொடுவா, வஞ்சிரம் கருவாடுகளுடன் வேறும் பல விதம்விதமான கருவாடுகள் கடைகளின் முகப்பில் வரிசையாகத் தொங்கின. வாடிக்கையாளர்களைத் தங்கள் கடைக்கு கவர்ந்திழுப்பதில் அங்கு பலத்த போட்டி நிலவியது. சாம்பசிவம் திக்குமுக்காடிப்போனார். கருவாட்டு வாசத்துக்கு மத்தியிலும் சாம்பசிவம் வெளிநாட்டுக்காரர் என்பதை வியாபாரி கள் மணந்து பிடித்துக்கொண்டார்கள். அங்கும் திரியாய்ப் பாரை கிடைக்க வில்லை. ஓடர்பண்ணித்தான் எடுக்க வேணும், மாதக்கணக்காகும் என்றார் கள்.

வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் பார்த்துப்பாராமல் கருவாடு வாங்கு வார்கள் என்பது வியாபாரிகளின் பட்ட றிவு. அதனால் வேறு பல கருவாட்டின் மகிமைகளைச் சொல்லி, சாம்பசிவத் தைத் தங்கள் கடைக்கு அழைப்பதில் முனைப்புக்காட்டினார்கள். திடீரென ஒரு கடைக்காரர் கடையின் பின்பக்கத் திலிந்து ஒரு வாலிபவயதைத் தாண்டிய இளைஞனை இழுத்துவந்து சாம்பசிவத் தின் முன் நிறுத்தினார். மேலங்கி போடாமல் முக்கால் களிசான் மட்டும் போட்டிருந்த அவனும் கடைமுகப்பில் தொங்கிய கருவாடுகளைப்போல காய்ந்து கருவாடாகிப் போயிருந்தான். மார்பிலும் முகத்திலும் காயம்பட்ட வடுக்கள் இருந்தன. மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டிருந்த இடக்கையை வலக்கையுடன் சேர்த்துக் கும்பிட்டு 'எங்கடை கடைக்கு வாங்கோ ஐயா, திறம் கருவாடு இருக்கு' என அழைத் தான். கடை முதலாளியும் தன் பங்குக்கு 'இவன் எங்கடை ஊர்ப்பெடியன். கன காலம் இயக்கத்திலை இருந்தவன், ஆமிக்குப் பயந்து ஒருத்தரும் வேலை குடுக்கேல்லை, நான்தான் பாவம் பார்த்து வேலைக்கு வைத்திருக்கிறன்' என அவனைவைத்து விளம்பரம் தேடினார்.

கருவாட்டு முதலாளி, இளை ஞனையே சாம்பசிவத்தின் வியா பாரத்தைக் கவனிக்க விட்டாலும் அவர் என்ன பேசுகிறார் என்பதை உன்னிப் பாகக் கவனித்துக்கொண்டிருந்தார். பேரம் படிந்ததும் அவனே பெரிய பாரைக் கருவாட்டை எடுத்து மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்ட இடக்கையால் கருவட்டை அமத்திப் பிடித்தபடி நீண்ட பட்டாக்கத்தியால் துண்டுகளாக்கத் துவங்கினான். கத்தியின் கூரும் வெட்டின வேகமும் சாம்பசிவத்துக்கு நடுக்கத்தை ஏற்படுத் தின.

'கவனம் தம்பி, கையை இன்னொருக் காத் துண்டாடிப்போடாதை' என்றார் கரிசனையுடன். சாம்பசிவத்தின் கொமன்ற் அவனுக்குப் பிடிக்கவில்லை என்பது அவனுடைய முகத்தில் தெரிந்தது.


'ஐயா, பத்து வருஷங்கள் இயக்கத் திலை இருந்தனான். துவக்குப்பிடிச்ச கை, இலக்குத் தப்பாது' என்றவன் தொடர்ந்து கருவாட்டை வெட்டுவதில் முனைப்பானான்.

இளைஞனின் இயக்கப் பின்னணியும் அவனது பேச்சும் தோற்றமும் சாம்ப சிவத்தின் மனதைக் கலைத்து பழைய நினைவுகளைக் கிளறிவிட, கடந்த காலத்தை அசைபோட்டார். குறைந்த கட்டணத்தில் ரஷ்ய ஏரோஃப்ளோட் விமானத்தில் பறந்து, களவாக எல்லை கடந்து, பொய்யான வாக்குமூலம் கொடுத்து, அகதி அந்தஸ்துப் பெற்ற தும் அதைத் தொடர்ந்து புலம்பெயர் வாழ்வில் பெரும் பிரமுகரானதும் அலை அலையாக மனதில் ஓடின. இளைஞனுடன் சற்று நேரம் கதைப்ப தற்கு பலமுறை முயன்றும், முதலாளி இருவருக்கும் இடையில் குத்துக்கல் லாட்டம் நின்றதும் அவனை அடிமை போல நடத்தியதும் சாம்பசிவத்தாரின் மனதைக் கீறி உப்புத் தடவியது.

மத்தியானம் மலேயன் கபே சாப் பாட்டுக் கடையில் வாழை இலைச்

(20ஆம் பக்கம் பார்க்க)


**திரைப்படம் -மார்க் ஆண்டனி**
**இயக்கம் - ஆதிக் ரவிச்சந்திரன்**
**இசை - ஜிவி பிரகாஷ்குமார்**
**நடிப்பு - விஷால், எஸ்ஜே சூர்யா, ரித்து வர்மா**




காலப்பயணம் அதாவது எதிர்காலத்துக்கு செல்வது நிகழ்காலத்துக்கு போவது என நம்ப முடியாத கதையை வைத்துக் கொண்டு சுவாரசியமாக சொன்ன படங்கள் ஹொலிவூட்டில் நிறையவே வந்திருக்கின்றன. தமிழிலும் இதுவரை ஐந்தாறு படங்கள் வந்துள்ளன. ஆனால், 'கேங்ஸ்டர்' கதையுடன் ஒரு கால பயணம் படம் என்பது இந்திய சினிமாவுக்கும் புதியதுதான்.

இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் சுவாரசியமான ஒரு படத்தை மட்டுமே கொடுக்க வேண்டும் என நினைத்து இந்தப் படத்தைக் கொடுத்திருக்கிறார். அவருக்கு பக்கபலமாக விஷால், எஸ். ஜே. சூர்யா ஆகியோர் இருந்திருக்கிறார்கள்.

ரெலிபோன் வைத்து கால பயண எந்திரம் ஒன்றை 1975இல் கண்டுபிடிக்கிறார் செல்வராகவன். அதை வெற்றிகரமாக சோதித்து பார்த்தபின் விபத்தில் மரணமடைகிறார். அவருடைய கார் பல வருடங்களாக திருத்துவதற்காக மெக்கானிக்காக இருக்கும் விஷாலிடம் இருக்கிறது. ஒருநாள் அந்தக் காரில் இருந்த கால பயண எந்திரத்தை விஷால் உபயோகிக்க நேருகிறது. 70களில் பிரபல ரௌடியாக இருந்த அவருடைய அப்பாமீது மிகுந்த வெறுப்புடன் இருப்பவர் விஷால். அந்த காலப் பயண எந்திரத்தின் மூலம் தன் அப்பா, அவரும் விஷால்தான் ரௌடியாக இருந்தாலும் நல்லவர் என்பதை




உணர்ந்து கொள்கிறார். அப்பாவை கொன்றது அவருடைய நெருங்கிய நண்பரான எஸ். ஜே. சூர்யா என தெரிய வருகிறது. அப்போது கொல்லப்பட்ட தனது அப்பாவை மீண்டும் உயிருடன் மீட்கிறார் விஷால். அதனால், இப்போது மெக்கானிக்காக இருக்கும் விஷால் இடத்தில் அவரது அப்பாவைக் கொன்ற எஸ். ஜே. சூர்யா மகன், இவரும் எஸ். ஜே. சூர்யாதான் மெக்கானிக்காக மாறுகிறார். மகன் எஸ். ஜே. சூர்யாவுக்கு கால பயண எந்திரம் பற்றி தெரிய வர அவர் மீண்டும் விஷால் அப்பாவைக் கொல்ல முயற்சிக்கிறார். இந்தப் போட்டியில் யார் யாரைக் கொன்றார்கள், யார் வாரிசு உயிரோடு இருக்கிறார்கள் என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

ரெலிபோன் மூலம் கால பயண எந்திரம் என்பது மிகவும் சுவாரசியமாக இருக்கிறது. அதை வைத்து 1975க்கும் 1995க்கும் இடையே திரைக்கதை மாறி மாறி வருகிறது - போகிறது. மிகவும் கவனமுடன் பார்த்தால்தான் படத்தின் கதையும் கதாபாத்திரங்களும் புரியும். அதைக் குழப்பமில்லாமல் கொடுத்திருக்கிறார் இயக்குநர் ஆதிக்.

அப்பா அன்ரனி, மகன் மார்க் என இரண்டு வேடங்களில் விஷால். மகன் மார்க் கார் மெக்கானிக்காக எந்த வம்பு தும்புக்கும் போகாமல் இருக்கிறார். ஆனால், அப்பா அன்ரனி அதிரடியான ரவுடியாக இருக்கிறார். மகனை விட அப்பாவின் நடிப்பு அசத்தலாக உள்ளது.

அப்பா ஜாக்கி, மகன் மதன் என இரண்டு வேடங்களில் எஸ். ஜே. சூர்யா. இரண்டு கதாபாத்திரங்களிலும் ஆர்பாட்டமாக நடித்திருக்கிறார். அதிலும் குறிப்பாக 1975 கதாபாத்திரத்தில் அவரது நடிப்பு மிகவும் அமர்க்களம். கொஞ்சம் சத்தமாகப் பேசுவதை மட்டும் குறைத்திருக்கலாம். இருந்தாலும் 70களில் அப்படி நாடகத்தனமாகப் பேசுவது அந்தக் கால சினிமாவில் இருந்ததால் அதை ரசிக்க முடிகிறது.

விஷால், சூர்யா இருவர் மட்டுமே மொத்த படத்தையும் ஆக்கிரமித்துக் கொள்வதால் மற்றவர்கள் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடுகிறார்கள். மகன் விஷாலின் ஜோடியாக ரித்து வர்மா, சில காட்சிகளில் மட்டும் வந்து போகிறார். சுனில், ரெடின் கிங்ஸ்லி ஆகியோரும் படத்தில் இருக்கிறார்கள் என்று சொல்வதோடு அவர்கள் வேலை முடிந்துவிடுகிறது.

ஜி. வி. பிரகாஷ்குமார் பின்னணி இசையில் படத்தைத் தூக்கி நிறுத்தியிருந்தாலும் பாடல்களில் ஏமாற்றியிருக்கிறார். 'ரெட்ரோ' பாடல்களில் கொஞ்சம் முயற்சித்து ஹிட் கொடுத்திருக்கலாம். 1975, 1997 என இரண்டு காலகட்டங்கள் என்பதால் அந்தக் காலங்களைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துவதில் கலை இயக்குநர் ஆர். கே. விஜயமுருகன் கடுமையாக உழைத்திருக்கிறார். அதை அருமையாய் ஒளிப்பதிவு செய்திருக்கிறார் அபிநந்தன் ராமானுஜம். படத்தை அனைவரும் புரிந்து கொள்ளும்படி எடிட் செய்திருக்கிறார் விஜய் வேலுக்குட்டி.

காலப் பயண எந்திரத்துடன் சம்பந்தப்படுத்திய காட்சிகள் மட்டுமே படத்தில் இருக்கிறது. மற்றபடி காதல், உணர்ச்சி, நகைச்சுவை அவற்றுக்கெல்லாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. படம் முழுவதுமே காது கிழியும் அளவுக்கு ஒரு சத்தம் ஆக்கிரமிக்கிறது.

திரையரங்கை விட்டு வெளியே வந்தபின் டிராபிக் சத்தங்கள் கூட அமைதியாக இருக்கிறது. அந்த அளவுக்கு திரையரங்குக்குள் சத்தம் அதிகம்.



ஷாருக்கானுக்கு ஜோடியாக நயன்தாரா நடித்த ஜவான் படம் திரைக்கு வந்துள்ள நிலையில் அடுத்தபடியாக ஜெயம் ரவிக்கு ஜோடியாக அவர் நடித்துள்ள இறைவன் படம் திரைக்கு வரப்போகிறது.

இதன்பிறகு பிரபாஸ் நடிக்கும் கண்ணப்பா என்ற படத்தில் அவருக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கவுள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது. பக்தி கதையில் உருவாகும் இந்த படத்தில் சிவன் வேடத்தில் பிரபாஸூம், பார்வதியாக நயன்தாராவும் நடிக்க இருக்கிறார்களாம். இந்தியளவிலான கதையில் உருவாகும் இதில் மோகன்லால், சிவராஜ்குமார் ஆகியோரும் முக்கிய வேடத்தில் நடிக்க உள்ளார்கள்.

## சல்மான் ஜோடியாக த்ரிஷா

தமிழை தொடர்ந்து தற்போது 13 ஆண்டுகள் கழித்து மீண்டும் ஹிந்தி திரையுலகம் த்ரிஷாவை அழைக்கிறது. இதன்படி, தமிழில் பட்டியல், பில்லா, ஆரம்பம் ஆகிய படங்களை இயக்கிய விஷ்ணுவர்தன் அடுத்து பொலிவூட் நடிகர் சல்மான் கானை வைத்து புதிய படத்தை இயக்குகிறார்.

இந்த படத்தின் படப்பிடிப்பு வருகின்ற நவம்பர் மாதத்தில் தொடங்குகிறது. அடுத்த வருடம் (2024) கிறிஸ்துமஸ் நாளில் வெளியிட திட்டமிட்டுள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து இப்போது இந்த படத்தில் கதாநாயகியாக நடிக்க த்ரிஷா உடன் இறுதிக்கட்ட பேச்சு நடைபெற்று வருகிறது என கூறப்படுகிறது. ஏற்கனவே, விஷ்ணுவர்தன் இயக்கத்தில் சர்வம் படத்தில் த்ரிஷா கதாநாயகியாக நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## மீண்டும் அட்லீ - விஜய்



'தெறி', 'மெர்சல்', 'பிகில்' படங்களைத் தொடர்ந்து மீண்டும் ஒரு படத்தில் விஜய்யுடன் இணைய இருப்பதை இயக்குநர் அட்லீ உறுதி செய்துள்ளார்.

ஷாருக்கானை வைத்து அட்லீ இயக்கியுள்ள 'ஜவான்' திரைப்படம் வசூல்ரீதியாக பெரும் வரவேற்பை பெற்றுவருகிறது. வெளியான ஆறு நாட்களில் இப்படம் உலகம் முழுவதும் ரூ. 600 கோடியைத் தாண்டி வசூலித்துள்ளது.

தற்போது 'தெறி' படத்தை வருண் தவானை வைத்து அட்லீ ஹிந்தியில் மீளுருவாகிறது. இப்படத்துக்குப் பிறகு விஜய் நடிக்கும் படத்தை அட்லீ இயக்க வாய்ப்பிருப்பதாக தெரிகிறது.

## துல்கருடன் இரு நாயகிகள்

நடிகர் துல்கர் சல்மான் நடித்து கடைசியாக வெளிவந்த 'கிங் ஒவ் கொத்தா' படம் சுமாரான வரவேற்பை பெற்றது. இதையடுத்து மலையாளம், தெலுங்கு, தமிழ் மொழிகளில் உருவாகும் புதிய படத்தில் நடிக்கவுள்ளார்.

இந்த படத்தை வாத்தி பட இயக்குனர் வெங்கி அட்லூரி இயக்குகிறார். ஜி.வி. பிரகாஷ் இசையமைக்கும் இந்த படத்தை சித்தாரா எண்டர்டெயின்மெண்ட்ஸ் தயாரிக்கின்றனர். இந்த படத்தில் கதாநாயகியாக சாக்ஷி வைத்தியா, மீனாட்சி சௌத்ரி என இருவரும் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளதாக கூறப்படுகிறது.

கூடுதலாக, பணம் மோசடி குறித்து பேசும் இதன் படப்பிடிப்பு அடுத்த வருடத்தில் அமெரிக்காவில் 50 சதவீதம் நடைபெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



## கமலின் புதிய படம்

இந்தியன்-2 படத்தில் நடித்து முடித்துள்ள கமல் ஹாசன், அடுத்தபடியாக விநோத் இயக்கும் தனது 233ஆவது படத்தில் நடிக்கப் போகிறார். ஒக்ரோபர் முதல் இதன் படப்பிடிப்பு தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது. இதையடுத்து மணிரத்னம் இயக்கத்தில் கமல் நடிக்கும் 234ஆவது படத்துக்கான அறிமுக டீசரில் விரைவில் கமல்ஹாசன் நடிக்க இருப்பதாக ஒரு தகவல் வெளியாகி இருக்கிறது.

தற்போது அமெரிக்காவுக்கு சென்றுள்ள கமல்ஹாசன் சென்னை திரும்பியதும் இந்த டீசரின் படப்பிடிப்பு நடைபெற உள்ளது. இந்த படத்திற்கு ரவி கே. சந்திரன் ஒளிப்பதிவு செய்கிறார். இதற்கு முன்பு மணிரத்னம் இயக்கிய கன்னத்தில் முத்தமிட்டால், ஆயுத எழுத்து போன்ற படங்களில் பணியாற்றியவர் 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மணிரத்னத்துடன் அவர் இணைகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.












# நால்வரும் உலகக் கிண்ணமும்!

நவீன கிரிக்கெட்டின் 'பப் 4' வீரர்களாக அறியப்படுகிறார்கள் இந்தியாவின் விராட் கோலி, அவுஸ்திரேலியாவின் ஸ்ரீவ் ஸ்மித், இங்கிலாந்தின் ஜோ ரூட் மற்றும் நியூசிலாந்தின் கேன் வில்லியம்சன். இவர்கள் நால்வரும் தங்கள் அணிகளுக்காக சர்வதேச கிரிக்கெட்டில் ஓட்டங்கள் குவித்து வரும் மகத்தான துடுப்பாட்ட வீரர்கள்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 தொடர் ஒக்ரோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடைபெறவுள்ளது. தொடரை இந்தியா நடத்துகிறது. போட்டியில் இலங்கை, இந்தியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன.

இந்தத் தொடருக்கான இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகளில் இவர்கள் நான்கு பேரும் இடம் பிடித்துள்ளனர். 30 வயதை கடந்துள்ள இவர்கள் நால்வரும் ஒரே நேரத்தில் பங்கேற்று விளையாடும் கடைசி கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடராக இது இருக்க வாய்ப்பு உள்ளது. ஏனெனில், அடுத்த உலகக் கோப்பை தொடர் 2027இல் நடைபெறும். அப்போது இவர்கள் 30களின் பிற்பாதியில் இருப்பார்கள். அதனால் வெள்ளை பந்து கிரிக்கெட்டில் இவர்களின் பங்களிப்பு எந்தளவுக்கு இருக்கும் என்பதை யாரும் கணிக்க முடியாது. அதிக ஓட்டங்கள் மற்றும் சாதனைகளை படைத்த வீரர்களாக இவர்கள் உள்ளனர். இந்த சூழலில் ஒருநாள் கிரிக்கெட்டில் இந்த மகத்தான வீரர்களின் பங்களிப்பு குறித்து பார்ப்போம்.

**விராட் கோலி**

மூன்று வடிவ கிரிக்கெட்டில் தரமான ஆட்டத்தை வெளிப்படுத்தும் வீரர் இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கோலி. உடல் ஆரோக்கியத்தில் தீவிர ஆர்வம் கொண்டவர். அதுவே இவரது வெற்றிக்குக் காரணம் என்றும் சொல்லலாம். இந்திய அணிக்காக 279 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 13,027 ஓட்டங்கள் குவித்துள்ளார். 47 சதம் மற்றும் 65 அரைச்சதம் பதிவு செய்துள்ளார். இந்திய அணிக்காக அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களில் 2ஆவது இடத்தில் உள்ளார். கடந்த 2011 முதல் 26 உலகக் கிண்ணப் போட்டிகளில் கோலி விளையாடி 1,030 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 2 சதங்கள் மற்றும் 6 அரைசதங்கள் பதிவு செய்துள்ளார்.

**ஸ்ரீவ் ஸ்மித்**

டெஸ்ட் கிரிக்கெட்டின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் என ஸ்மித் போற்றப்படுகிறார். அவுஸ்திரேலிய அணிக்காக 142 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 4,939 ஓட்டங்கள் குவித்துள்ளார். 12 சதங்கள் பதிவு செய்துள்ளார். 24 உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடி உள்ளார். 2015 உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணிக்கு எதிரான அரையிறுதியில் சதம் பதிவு செய்திருந்தார். அந்த தொடரில் நியூசிலாந்து அணிக்கு எதிராக அரைச்சதம் பதிவு செய்திருந்தார். நடப்பு ஆண்டில் 3 ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாடி உள்ளார்.

**ஜோ ரூட்**

161 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 6,217 ஓட்டங்கள் குவித்துள்ளார் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட். 150 இன்னிங்ஸில் 16 சதங்கள் மற்றும் 36 அரைசதங்கள் பதிவு செய்துள்ளார். கடந்த 2019 உலகக் கோப்பை தொடரில் 11 இன்னிங்ஸ் விளையாடி 556 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 2 சதங்கள் மற்றும் 3 அரைசதங்களை அந்த தொடரில் பதிவு செய்தார்.

**வில்லியம்சன்**

நியூசிலாந்து அணிக்காக 161 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 6,554 ஓட்டங்கள் எடுத்துள்ளார் கேன் வில்லியம்சன். 13 சதங்கள் மற்றும் 42 அரை சதங்கள் பதிவு செய்துள்ளார். 23 உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடி உள்ளார். கடந்த 2019 உலகக் கிண்ணத் தொடரில் 10 போட்டிகளில் 578 ஓட்டங்கள் எடுத்திருந்தார். தொடர் நாயகன் விருதையும் வென்றிருந்தார்.

# மீண்டும் வந்தார் நாயகன்...!

உலகக் கிண்ணம் நெருங்குகிறது. அவுஸ்திரேலியாவில் டிராவிஸ் ஹெட், டேவிட் வோர்ணர், மிற்செல் மார்ஷ் ஆடுவதைப் பார்த்தால் அச்சமாக உள்ளது. இங்கிலாந்து ஏற்கெனவே அதிரடி அணியாகத் திகழ்கிறது. இந்நிலையில், பென் ஸ்டோக்ஸ் ஓய்விலிருந்து மீண்டும் அணிக்கு வந்துள்ளார்.

அத்துடன், நியூசிலாந்துக்கு எதிராக 124 பந்துகளில் 15 பௌண்ட்ரிகள், 9 சிக்ஸர்களுடன் 182 ஓட்டங்கள் எடுத்து இங்கிலாந்தின் அதிகபட்ச தனிப்பட்ட ஒரு நாள் ஓட்ட சாதனையை நிகழ்த்தினார். பென் ஸ்டோக்ஸ் காட்டிய அதிரடி ஆட்டம் இங்கிலாந்து அணியை மேலும் அச்சுறுத்தல் அணியாக உயர்த்தியுள்ளது.

நியூசிலாந்து அணிக்கு மீண்டும் திரும்பிய ட்ரெண்ட் போல்ட் நேற்றும் பந்துகளை ஸ்விங் செய்ய இங்கிலாந்து 13/2 என்று தடுமாறிய போது இறங்கினார் பென் ஸ்டோக்ஸ். 76 பந்துகளில் சதம் விளாசி தனது 4ஆவது ஒருநாள் சதத்தை எட்டினார், இவரும் டேவிட் மலனும் (96 ஓட்டங்கள் 95 பந்துகள் 12 பௌண்ட்ரி, ஒரு சிக்ஸர்) சேர்ந்து 199 ஓட்டங்களை 165 பந்துகளில் வெளுத்துக் கட்டினார்கள்.

பந்துவீச்சாளர் யார் என்றெல்லாம் பார்க்கவில்லை. எடுத்த எடுப்பிலேயே மேலேறி வந்து ஆடுவது, இடது விக்கெட் பக்கம் ஒதுங்கிக் கொண்டு ஓவ் திசையில் வெளுத்துக் கட்டுவது என்று பிரண்டன் மக்கலம்மின் 'பாஸ்போல்' முறையை ஒரு நாள் போட்டிகளிலும் ஆடினார்.

முழங்கால் காயத்துடன் ஆடும்போதே இந்த அடி என்றால் காயமில்லை என்றால் இன்னும் என்ன ஆகும் என்று தெரியவில்லை. அவர் ஆடிய கடைசி 31 பந்துகளில் மட்டும் 6 சிக்ஸர்களை விளாசினார். 2019 உலகக் கிண்ண நாயகன் இந்த முறையும் இங்கிலாந்து உலக சம்பியனாவதை உறுதி செய்வார் என்ற நம்பிக்கைப் பிறந்துள்ளது. குல்தீப் யாதவ் தான் நம்மை இவரிடமிருந்து காப்பாற்ற வேண்டும். 182 ஓட்டங்கள் என்பதில் ஜசன் றோயின் 151 பந்து 180 ஓட்டங்கள் சாதனையைக் கடந்தார். அதே போல் அலெக்ஸ் ஹேல்ஸ் 122 பந்துகளில் எடுத்த 171 ஓட்டங்களையும் அநாயசமாகக் கடந்தார்.




அகமதாபாதில் ஒக்ரோபர் 5ஆம் திகதி 2019 உலகக் கிண்ண இறுதிப் போட்டியாளர்களான இங்கிலாந்தும் - நியூசிலாந்தும் மீண்டும் மோதும்போது ரணகளமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கிலாந்து அணியில் உலகக் கிண்ணத்தில் டேவிட் மலன், பெயர்ஸ்ரோ தொடக்கம் கொடுத்தால் நடு வரிசையில் பென் ஸ்டோக்ஸுடன் ஹாரி புருக், ஜோஸ் பட்லர் சேர்ந்தால் அதகளம்தான்.

# ஆயுத எழுத்து.....

சாப்பாடு முடித்து, புழுக்கொடியல் வாங்க சந்தைக் கட்டிடத்துக்குள் நுழைந்தார் சாம்பசிவம்.

வாழைப்பழக் கடை முன்னே, சந்தைப் படிக்கட்டில் அமர்ந்து புகைத்துக் கொண்டிருந்த கருவாட்டுக் கடை இளைஞன், ஐயா எப்ப பயணம்? என்றான் ஆங்கிலத்தில். இதையே தனக்கான வாய்ப்பாக எடுத்தவர் அவனருகே படியில் அமர்ந்து, அதுவரை மூளையைக் குடைந்த அந்தக் கேள்வியைக் கேட்டார்.

'இவ்வளவு இலக்கண சுத்தமாக ஆங்கிலம் பேசுகிறாயே, எங்கு படித்தாய்'?

கருவாட்டுக் கடையில் கேட்க நினைத்த இந்தக் கேள்வி, நீண்ட நேரம் மனதுக்குள் ஊறி அரியண்டப் படுத்திக் கொண்டிருந்தது.

புகையை ஆழமாக உள்ளே இழுத்து அனுபவித்து மூக்குத் துவாரங்களினூடாக வளையம் வளையமாக வெளியே ஊதியவன், சிறிதுநேரம் கழித்து, 'கருவாட்டுக்கடையில் வேலை செய்பவன் ஆங்கிலம் பேசக்கூடாதா ஐயா?' என சாம்பசிவத்தைப் பார்த்தான். சாம்பசிவம் எதுவும் பேசவில்லை. அமைதியாக இருந்தார். இளைஞனே தொடர்ந்தான்.

'வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் இங்குள்ளவர்களை நோண்டி நொங்கெடுப்பது இப்படித்தான். இருந்தாலும் உங்களைப் பார்க்க, என் அப்பாவின் நினைவு வருகிறது' எனத் துவங்கிய இளைஞனின் பழைய நோக்கியோ செல்போன் சிணுங்கவே எடுத்துக் காதில் வைத்தவன் கடுமையான தொனியில் யாருக்கோ கட்டளையிடும் பாவனையில் பேசினான். தொடர்ந்து வந்த இரு அழைப்புக்களும் இந்த வகையே. இனத்துவ அடையாளம் பற்றியதாக இருந்தது.

பொறுமையோடு காத்திருந்த சாம்பசிவம், தொலை பேசி உரையாடல் முடிந்ததும் 'உன் ஆங்கில அறிவு பற்றிக் கேட்டேன்' என சம்பாசனையைத் தொடர அடியெடுத்துக் கொடுத்தார்.

மீண்டும் ஒரு சிகரெட்டை களிசான் பக்கற்றுக்குள்ளிருந்து எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு புகைவழியே தன் கதையை, சுருக்கமாகச் சொன்னான்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மூன்றாம் ஆண்டு பொறியியல் படித்துக் கொண்டிருந்தபோது படிப்பைத் தியாகம் செய்து, ஈழவிடுதலை இயக்கம் ஒன்றில் இணைந்தவனாம். கிளிநொச்சி சமரின்போது முன்னரங்கில் நின்று போர் புரிந்ததாகவும் அங்குதான் இடது கை, மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டதாகவும் சொன்னான்.

உன்னைப்போன்றவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வளமாக வாழ்கிறார்களே, நீ முயற்சிக்கவில்லையா? என வார்த்தைகளைப் பொறிக்கியெடுத்துக் கோர்த்தார் சாம்பசிவம். அவன் எதுவும் பேசாது வீதியை வெறித்துப் பார்த்தபடியிருந்தான்.

கருவாட்டில் மட்டுமல்ல சகல விஷயங்களிலும் சாம்பசிவம் ஒரு விடாக்கண்டர். நெருங்கி உட்கார்ந்து 'உனது ஆங்கில அறிவின் சூக்குமம் பற்றிக் கேட்டேன் நீ சொல்லவில்லையேடா தம்பி' என உரையாடலின் போக்கை மாற்றி, உரிமை கொண்டாடினார்.

அப்பாவைப்போன்ற தோற்றமுடைய ஒருவர் அருகில் அமர்ந்து மனம்விட்டுப் பேசுவதை அவனால் தட்டிக் கழிக்கமுடியவில்லை. சிறிது நேர மௌனத்தின் பின் தெட்டம் தெட்டமாகக் கதை சொன்னான்.

'அப்பா தீவுப்பகுதி பாடசாலையொன்றின் அதிபராக இருந்தவர். அம்மா அதே பாடசாலையில் ஆங்கில ஆசிரியை. ஒரேபிள்ளை நான். அம்மாவிடம்தான் ஆங்கிலம் படித்தேன். எனது இயக்க நடவடிக்கை காரணமாக மாற்று இயக்கம் ஒன்றினால் அவர்கள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு, முகாமில் வைத்துக் கொல்லப்பட்டார்கள்' என்றவன் வெறுப்புடன் திரும்பி அருகிலிருந்த கழிவு வாய்க்காலுக்குள் காறித் துப்பினான்.

வயதில் மிக மூத்தவரானாலும் சாம்பசிவம் அவன் முன்னே பௌவியமாக அமர்ந்திருந்தார். சுடலை ஞானமும் அதனால் ஏற்பட்ட குற்ற உணர்வும் விஸ்வரூபமெடுத்து அவரின் தலையில் மாறிமாறிக் குட்டியது. அவரது பையுக்குள்ளே சற்று நேரத்துக்கு முன்னர் வங்கியில் மாற்றிய இலங்கைப் பணம் கட்டுக்களாக இருந்தன. சடுதியாக அதிலொன்றையெடுத்து அவன் மடியில் வைத்தார்.

முதல் முறையாக அவரது முகத்தை நேருக்குநேர் பார்த்து வாய்விட்டுச் சிரித்தான் இளைஞன். பின்னர் எழுந்து நின்று பணக்கட்டை, துண்டிக்கப்படாத வலது கையில் பிடித்து மேலும்கீழும் ஆட்டியபடி 'ஐயா, எம் இனத்தின் விடுதலைக்காக படிப்பைத் தியாகம் செய்து, இந்தக் கையால் துவக்குத் தூக்கியவன் நான். அதற்கு நீங்கள் தரும் கூலி அல்லது சன்மானம் என, இதை எடுத்துக்கொள்ளவா? நான் மட்டுமல்ல என்னைப்போன்ற போரில் ஊனமுற்ற பலர் இந்த நாட்டில் இருக்கிறார்கள். இங்கு வாழத் தேவையான பணத்தை எம்மால் கௌரவமாகச் சம்பாதிக்க முடியும். வெளிநாட்டிலிருந்து வந்து, இப்படிக் காசை விட்டெறிந்து எங்களைச் சிறுமைப் படுத்தாதீர்கள்.

இது, நீ நினைப்பதுபோலல்ல, என அனுங்கினார் சாம்பசிவம்.

ஐயா, வெளிநாட்டில் ஈழ விடுதலையை மூலதனமாக்கி வாழும் பலருக்கு இங்குள்ள விஷயங்கள் புரியாது. அதனால்தான் எதையும் பணத்தால் சரி செய்துவிடலாம் என்று நீங்கள் நினைப்ப து. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் வாழ்ந்துவிட்டால் அதுதான் சொர்க்கம் ஐயா. இன்றைய எனது வாழ்க்கையும் இதுதான், என்றவன் பணத்தை சாம்பசிவத்தின் கையில் திணித்தான்.

சாம்பசிவம் மௌனமாக அவனைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவனைத் தொடர்ந்து பேசவிடாமல் இருமல் தடுத்தது. பையில் வைத்திருந்த அதிமதுரத் துண்டை வாயில் போட்டு மென்றபடி மேலே தொடர்ந்தான்.

விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் எதை அடைந்தோம் எதை இழந்தோம் என்பது முக்கியமில்லை ஐயா. எதை நாம் கடந்து வந்தோம் என்பதுதான் முக்கியம். எது எப்படி இருந்தாலும் எமது போராட்ட வாழ்க்கையின் வெற்றிதோல்வி, போராட்டம் பின்னடைவைச் சந்தித்த பின்னர், அதை நாம் எப்படி எடுத்துக்கொள்கிறோம் என்பதில்தான் தங்கியுள்ளது.

கனத்த வரிகளை ஒன்றன்பின் ஒன்றாக சாம்பசிவத்தின் முகத்தில் வீசியவன், அடுத்தமுறை வரும்போது அறிவித்துவிட்டு வாருங்கள் திரியாய்ப் பாரை எடுத்துவைக்கிறேன்' என்று விடைபெற்றான்.

சாம்பசிவம் திகிலடித்துப்போய் சற்றுநேரம் படியில் உட்கார்ந்திருந்தார்.

முதலாளிக்கு அடங்கி, கடையிலே கருவாடு வெட்டிக் கொண்டிருந்த இளைஞனா இவன்?

'தோல்வியை வெற்றியாகவும் துயரத்தைச் சந்தோஷமாகவும் எடுப்பதுதான் வாழ்வின் அர்த்தம்' என்னும் தத்துவ ஞானத்தை, சந்தைப் படிக்கட்டிலே பெற்ற சாம்பசிவம், கடையில் அவன் கட்டித் தந்த கருவாட்டுப் பொதியை இறுகப் பற்றினார்.

